www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

UK-PRICE-90P பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜன.12–18,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 187

# 199? சமபல சமர்க்களம்

## இ ராணுவ முனைப்பில் ரகசிய முஸ்தீபுகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்






படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அன்றுதான் பொங்கும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்!
பொறுத்தார் அரசாள்வர்
என்பது உண்மையானால்
தமிழ் பேசும் மக்கள்
அரசாளாவிட்டாலும்
சிரசு உயர்த்தி வாழும்
சிறப்போடாவது வாழ்ந்திருக்க வேண்டும்!

பொங்க வேண்டிய நேரத்தில்
பொங்கித்தானாக வேண்டும்.
அது இல்லாதுவிட்டதனால்தான்
நம் வரலாறும், வாழ்வும்
மங்கிக் கொண்டிருக்கிறதோ?

நம்மவர் நெஞ்சங்களில் எல்லாம்
இன்று பொங்கிக் கொண்டிருப்பது
சமாதானத்துக்கான ஏக்கம்!

துப்பாக்கி வேட்டொலிகள்
தூக்கத்தைத் திருடிக்கொண்டிருக்க,
தப்பான அணுகுமுறைகளால்
தினம்தோறும் வெறுப்புப் பொங்க
சமாதானத்தின் பெறுமதி
மிகத் தெளிவாகப் புரிகிறது!

'தைபிறந்தால் வழி பிறக்கும்'
என்பார்கள்.
கையில் அதிகாரம் உள்ளோரின்
விழி திறக்குமா?
இல்லையெனில்
சமாதானம் பகற் கனவே!

புத்தாண்டுக்கான செய்தியில்,
"இன்றுள்ள முக்கிய கடமை
நாட்டை மீட்டெடுப்பதுதான்!"
என்று தெரிவித்திருந்தார் ஜனாதிபதி.

எதிலிருந்து-எவரிடமிருந்து
நாட்டை மீட்டெடுப்பது?

யுத்தத்தில் இருந்து,
சூழும் துக்கத்தில் இருந்து,
தீராத இனப்பிரச்சனையிலிருந்து
நாட்டை மீட்டெடுப்பதுதான்
நோக்கம் எனில்
ஜனாதிபதியின் செய்தியை
நிச்சயம் வரவேற்கலாம்!

"புலிகளிடமிருந்து
நாட்டை மீட்டெடுக்க வேண்டும்,
அதன் பின்னரே அரசியல் தீர்வு"
என்று சிலர் கூறிவருகிறார்கள்.
அத்தகையோரை மகிழ்வூட்டும் அர்த்தம்
ஜனாதிபதியின் செய்தியில்
இருக்காது என்று நம்புவோமாக!

அந்த நம்பிக்கைக்கு ஏற்ற
அரசியல் முன்னெடுப்புகளை
இந்த ஆண்டிலாவது
நாம் காணமுடிந்தால்
கெட்ட போரிடும் உலகை வேரோடு சாய்க்க
ஒரு கோடரி கிடைத்தமாதிரித்தான்!

"துப்பாக்கிக் குழாயிலிருந்துதான்
ஆட்சி அதிகாரம் பிறக்கிறது."
என்பது-அதிகாரத்தைக்
கைப்பற்றும் போருக்கு பொருந்தும்.

அதையே அரசாங்கமும்
இன்றையப் போருக்கு சொல்லுமானால்
வடக்கு-கிழக்கில்
அதிகாரத்தை நிலை நாட்டும்
ஆர்வமாகக் கருதலாமே தவிர
அரசியல் தீர்வுக்கான
அணுகுமுறை என்று கருத முடியாது!

தான் முன்வைத்த
அரசியல் தீர்வு யோசனைகளை
முடிந்த முடிவாக
ஆக்கி முடிப்பதில் அரசாங்கம்
தயக்கமும்-தாமதமும் காட்டுகிறது!

குதிரைக்கு முன்னால்
கொள்ளைக் கட்டித்
தொங்கவிடுவது போல
அரசியல் தீர்வுக்குத் தயார் என்று
ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும்
சொல்லிக் கொண்டிருக்கின்றனவே தவிர
இதுதான் முடிவு என்று
ஒரு திட்டத்தைக் காட்டவில்லை!

இதற்கிடையே
சிங்கள மக்களின் உரிமைகளை
மீட்கப் போராடப் போவதாக
ஒரு கோஷ்டி 'ஜோக்'கடிக்கிறது!
எதிர்கட்சிதான்
அதன் பின்னணியில் நிற்கிறது!

ஆட்சியில் இருந்தபோது
ஐக்கிய தேசியக் கட்சி;
ஆட்சியில் இல்லாதபோது
ஐக்கியத்தைத் தேய்க்கும் கட்சியா?

நாட்டு நிலை இவ்வாறிருக்க
தென்னிலங்கைக் கட்சிகள்மீது
தமிழ் பேசும் மக்கள்
நம்பிக்கை கொள்வது எப்படி?
அதிருப்திதானே பொங்கும்!

புலிகள்தான் எதிரிகள்
என்று போர்ப்பிரகடனம்
செய்துகொண்டிருக்கிறது அரசு!
பசுத்தோல்ப் புலிகளால்தான்
மிக மிக ஆபத்து!

ஜனாதிபதி நாட்டை
மீட்டெடுக்க நினைப்பாரேயானால்
பசுத்தோல் போர்த்த புலிகளின்
வெற்றுக் கூச்சல்களைக் கேளாது
துணிச்சலான அரசியல் தீர்வுமூலம்
சமாதானம் பொங்கச் செய்யட்டும்!
அன்றுதான் எங்கும்
மங்களம் பொங்கும்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சமாதானமாய் இருங்கள்

சமாதான சாத்வீக வாழ்க்கையின் பொருட்டு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணிய உண்மைகளை வேதாகமம் போதிக்கின்றது. எம்மால் இயலாதது என்று ஒருவரும் சொல்ல வேண்டியதில்லை. எல்லாராலும் முடியும்! சாதாரண மனிதனும் வேதாகம வாக்குகளின்படி நடக்கலாம்.

மனிதனின் இன்றைய நிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள். பின் வேதாகமம் கூறும் இவ்வுண்மைகளை வாசித்து யோசியுங்கள்.

"ஒருவனுக்கும் தீமைக்குத்தீமை செய்யாதிருங்கள்; கூடுமானால், உங்களால் ஆனமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள்." (ரோமர்-12:17-18.)

இதுமட்டுமல்ல இன்னும் கூறப்பட்டுள்ளவை நாம் இன்றும் செய்யக் கூடியவை; இன்றையச் சூழ்நிலையில் எல்லாரும் சிந்திக்க வேண்டியவை. ஆம்-

"நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும் உங்கள் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடு; அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடு- நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு." (ரோமர்:12:19-21)

இந்த வார்த்தைகளுக்கு நாம் வியாக்கியானம் காணவேண்டியதில்லையே!

ஏ.பி.வி.கோமஸ்.



## சிந்தனைக்கு சில நபி மொழிகள்

மக்களுக்கு மத்தியில் ஒரு காலம் வரும். அக்காலத்தில் உண்மையான இறைபற்றுள்ள அறிஞர்கள் குறைந்துவிடுவர். உலகப் பற்றுள்ள போலியான அறிஞர்கள் பணத்துக்காக உண்மையைத் திரித்துக்கூறி தாமும் வழி கெட்டுப் பிறரையும் வழி கெடுப்பார்கள்.

★★

இறுதி நாள் நெருங்கும்போது முஸ்லிம்கள் மறுமை வாழ்வை மறந்து இவ்வுலகப் பொருட்களை அதிகம் நேசிப்பார்கள். பள்ளிவாசல்களில் கூச்சலும் குழப்பமும் அதிகரிக்கும். முன்னோர்களான நல்லறிஞர்கள்மீது பின்னோர்களான அறிவிலிகள் குறை கூறுவார்கள்.

★★

கடைசிக் காலத்தில் இஸ்லாமிய சன்மார்க்கக் கடமைகள் வெறும் சடங்காக மாறிவிடும். வணக்க வழிபாடுகள், தியானங்கள் சுருங்கிவிடும். பேச்சுவன்மையினால் மக்களிடம் வசீகரமாக உபதேசிக்கும் பேச்சாளர்கள் அதிகரிப்பார்கள். ஆனால் உபதேசிப்பவரிடமோ கேட்பவரிடமோ தூய செயற்பாடுகள் இருக்காது.

எம்.எச்.எம்.ஹாரித்-திஹாரிய.

## கவிதைப் போட்டி இல.184



பரிசுக்குரிய கவிதை

### மெய்

எலிகள்
எங்கும் உண்டு;
மாட்டியது-
கோடியில் ஒன்று!

எஸ்.பிரபா-கொக்காகல.

இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### துஷ்பிரயோகம்

ஆட்சிவந்து
அதிகாரத்தை தந்தது;
ஆசைவந்து
சிறைவாசத்தை தந்தது.

ந.அமுதா-திருக்கடலூர்,
திருகோணமலை.

### இன்றைய கைகேயி.

கணவனை இழந்தாள் கைகேயி.
காரணமானாள் உயிர்த்தோழி:
ஆடம்பரமும் ஆணவமும்
அழித்தது இவளது ஆட்சியினை,
அதற்கும் காரணம் உயிர்த்தோழி!

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### ஜெயிலுக்குள் ஜெ.

சொல்லுக்குள்!
செயலுக்குள் நேர் இருந்தால்
ஜெயிலுக்குள்
ஜெ. இருக்க நேருமா?

புவனா தங்கராஜா-பெரியகல்லாறு-01.

### என்னுயிர்த்தோழி

வலைவீசித்தேடி
விலை பேசிவாங்கிய மாளிகைகள்
வலைக்குள் சிக்கவைத்த
மாயமென்ன தோழி!

ஜி.அருளேந்திரன்-திருகோணமலை.

### தங்கக் கம்பி

நங்கை நானுமறிந்திருப்பின் நாடாளும் போதே
சங்கை கெடச் சிறைதனிலே தங்க வேண்டுமென்றே,
பங்கம்வரக் கரைத்தொழித்த பணப் பொதிகள் கொண்டே,
தங்கக் கம்பி பதித்திருப்பேன் சாளரங்கள் தோறும்.

எம்.ஜெமீல்-க/தென்னக்கும்புர.

### "சிறைப் பறவை"

தோழியவள் ஆட்டுவிக்க
தோகைவிரித்து ஆடிவிட்டேன்;
தோகைக்குள் மறைந்திருந்த
தொடர் கதைகள் வெளிவரவே
கூண்டுக்குள் என்னை வைத்து
கூட்டமே பார்க்குதிங்கே!

எம்.சண்முகராஜா-
கிளனல் பின், பதுளை.

### கம்பி எண்ணுகின்றேன்!

எண்ணாமல் சேர்த்து வைத்தேன்!
எண்ணி எண்ணி எடுத்தார்கள்.
என்னை மட்டும் எண்ணச் சொல்லி
கூட்டினிலே போட்டடைத்தார்.
சேர்த்த பொருள் எண்ணவில்லை;
கோர்த்த கம்பி எண்ணுகின்றேன்!

நிஜந்திக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-187




**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 18.01.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.187 தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### 'ஜெயில்'லலிதா

நேற்று வரை ஜெயலலிதா!
இன்று முதல் 'ஜெயில்'லலிதா
ஆட்சி என்ன திரைப்படமா?
அதில் உமக்கு இப்பாத்திரமா?

த.ஐங்கரன்-குரும்பசிட்டி, யாழ்ப்பாணம்.

### உதாரணம்!

செயல்களில் சீர் இருந்தால்
ஜெகத்தினில் பேர் கிடைக்கும்!
செயல்களில் பிழை குவிந்தால்
ஜெயிலினில் இடம் கிடைக்கும்!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்.02.

### விடியுமா?

பாடியது ஒருகாலம்
கூடியது சிலகாலம்
வாடியது இக்காலம்
விடிவதும் எக்காலம்?

டி.ஜோர்ஜ்-லபுகலை.

# வாசக(ர்) சாலை




அன்புமிக்க ஆருயிர் முரசே,

பரீட்சை எடுத்த காரணத்தினால் எழுதுவதை நிறுத்தியிருந்தேன். உன்னை 2 மாதங்களாக வாசிக்காவிட்டாலும் வாங்கி வைத்திருந்தேன். எல்லாவற்றையும் பார்த்தாகிவிட்டது. பூலானின் தொடர்கதை மிக அருமையாக உள்ளது. அனிதா இளம் மனைவி கதையும் மிக அருமை.

செல்வி நுஸ்ரத் ஜஹான் ஹனிபா, மாத்தளை.

—●●●—

சுவைமிகு முரசே! உன் படைப்புகள் பிரமாதம் அன்றோ! நடந்த நிகழ்வுகளையெல்லாம் இன்று தெட்டத் தெளிவாக எமக்கெல்லாம் தொகுத்துத் தரும் உன்-பாணி சிறப்புமிக்கது.

குறிப்பாக-பூலான் தொடர்....

தூக்கு மேடைக் குறிப்பு....

யாழ்-நிலவரங்கள்...போன்றவை சிறப்பான அம்சங்களாய் அமைந்துள்ளன. மேலும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

ரெ.பாண்டியன், நோர்வூட்.

—●●●—

எனதருமை தினமுரசே!

நீ தரும் அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை 108வது அங்கம் என்னை கண்கலங்கவைத்தது. மணமாலை சூடிய ஒரு மாதத்தில் மரணமாலை. அந்த சோகத்தை என் கண்முன்னே நிறுத்திய அற்புதனுக்கு நன்றி.

து.கிருஷ்ணகுமாரன், தியேட்டர் ரோட், பொகவந்தலாவ.

நலம், நலமறிய ஆவல் என கலைஞர் செல்வியின் பாடலோடு கூடிய உரையாடலில் காதிலை பூ கந்தசாமி நன்றாகவே அசத்திவிட்டார். பொருத்தமான பாடல்களில் மாற்றப்பட்ட சொற்பதங்கள் இனிமையானவை.

மற்றதொரு சொல்லோவியம் இலக்கிய நயம். எங்கு கற்றாரோ. மறைக்காமல் கூறுகிறேன். 'இலக்கிய நயம்', இலக்கிய உலகில் சஞ்சரிக்கும் இதயங்களுக்கு நல் வரப்பிரசாதம். தொடரட்டும் தினமுரசின் இனிய பணி.

சசிகலா நடேசபவானந்தம், உவர்மலை,
திருகோணமலை.

—●●●—

உனது காதிலை பூ கந்தசாமியின் "செல்வியின் கண்ணீர்" மிகவும் பிரமாதம். 2ம் பக்க செல்வியின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டே சிறையில் நடக்கும் நிகழ்வை நோக்கினால் செல்வியை திரை உலகில் காண்பது போல் தோன்றியது.

ஜமாலுல்லா அன்வர் அலி, காத்தான்குடி-05.

—●●●—

பூலான் தேவியின் வாழ்க்கைப் பக்கத்தை புரட்டிக் கொண்டிருக்கும் முரசுக்கு என்றும் பாராட்டுக்கள்.

அனுராதா தேவராஜன்,
அத்துலத் முதலிகம, மத்துகம.

—●●●—

ஜூலிஸ் பூசிக்கின் தூக்கு மேடைக்குறிப்பில் மனம் வெந்து, பூலானின் புரட்டப்படும் சோக அத்தியாயங்களில் கண் கலங்கும் வேளையில் காதிலை பூ கந்தசாமி அண்ணரின் கற்பனைக்காக சிரிக்கின்ற நான் சுஜாதாவின் "அனிதா இளம் மனைவி"யைப் பாராட்டுகிறேன்.

செல்வி ஜெயா முருகுப்பிள்ளை,
குருக்கள்மடம்.

—●●●—

சுஜாதாவின் 'அனிதா இளம் மனைவி' அசத்தல். நாவல் எழுதுவதில் சுஜாதாவின் பாணியே தனிதான். பூலானின் தொடர் வாரம் தோறும் விறுவிறுப்பை கூட்டிக்கொண்டே போகின்றது. பூலானின் மன உணர்வுகளை வெளியிட்டு நம்மையெல்லாம் பூலான் இரசிகர்களாக்கி விட்டார் ரசிகன்.

எம்.ஐ.எம். நியாஸ், ஒட்டமாவடி.

அன்பு முரசுக்கு

பரபரப்புக்காக செய்திகளை வெளியிடாமல், காலம் கடந்து புரட்டிப்பார்த்தாலும் கச்சிதமாக சொல்லப்பட்டிருக்கிறதே என்று வியக்க வைக்க வேண்டும். அதுதான் இன்றைய கால கட்டத்தில் வளர்ச்சியடைந்துவரும் புலனாய்வு சார்ந்த பத்திரிகையினரின் சிறப்பாகும். அந்த சிறப்பு 'முரசு' மூலமாக நமக்கும் வியப்பூட்டுகிறது. நான் முரசை- முதல் முரசு தொடக்கம் இன்றுவரை பத்திரமாக சேர்த்து வைத்துள்ளேன். நேரம் கிடைக்கும்போது புரட்டிப்பார்ப்பதுண்டு. முரசின் அரசியல் கணிப்புக்களை காலம் உறுதி செய்திருப்பது உண்மை. முரசின் தனித்துவம் அதுதான்.

யோ.சோதிலிங்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்,பண்டாரவளை.

## எப்போது திருந்துவது?

தமிழ்க் கட்சிகள் எப்போதுதான் திருந்தப் போகின்றன? தமக்கென்று ஒரு பாதையை வகுக்காமல், அரசாங்கம் போடும் பாதையில் விழுந்தடித்து ஓடிக்கொண்டிருக்கின்றன. எங்கு போய் முட்டிக்கொள்ளப் போகின்றனவோ? விடுதலைப் புலிகளின் பலவீனம் ஏனைய சக்திகளை அரவணைத்துச் செல்லத் தவறியதுதான் என்பது என் அபிப்பிராயம். எனினும் விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சனம் செய்யும் அணியினரின் குறுக்கோட்டத்தைப் பார்க்கும்போது, புலிகள் இவர்களை தடைசெய்திருக்காவிட்டால் இவர்களே புலிகளைத் தடைசெய்திருப்பார்கள் போலத் தெரிகிறது. அதன் விளைவு தற்போதைய நிலையைவிட மிக்க மோசமாக இருந்திருக்கும். தமிழ்க்கட்சிகள் புலிகளைப் பற்றி விமர்சிப்பதை விட தம்மைத் திருத்திக் கொள்வது நல்லது.

எம்.வசீகரன், வவுனியா.

—●●●—

'அந்தநாள் ஞாபகம்' பகுதி பலே. ரஜினியின் குழந்தைப் படம் கிடைத்தால் பிரசுரியுங்கள். சினிசிட்டியில் அப்பாவின் பேட்டி ஜில். ஜொள் பிடிச்ச ஆளாக இருப்பாராக்கும்.

வி.சாந்தினி, ஹட்டன்.

—●●●—

லேடீஸ் ஸ்பெஷலில் தன்னம்பிக்கை ஊட்டும் யோசனைகளை தர ஆரம்பித்துள்ளீர்கள். அழகுக்குறிப்புக்கள்தான் லேடீஸ் ஸ்பெஷல் என்ற விதியை முரசாவது மீறக்கூடாதா? துணிச்சலான, பெண்களுக்குத் தேவையான கருத்துக்களை வெளியிடுங்கள்.

செல்வி கஸ்தூரி. ஆர்., கொழும்பு-10.

—●●●—

மடல் அனுப்பியவர்களில் இடம்உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

- உதயப்பிரகாசினி, பூந்தோட்டம்-வவுனியா.
- எம்.வை.எம்.மதனி, நீர்கொழும்பு.
- செல்வி வீ.பிரமிளா.
- எம்.ஜே.எம்.ஜஃபர், கொழும்பு-15.
- மரீனா நியாஸ், பூரணவத்த.
- தம்பிஐயா ரவிக்குமார், ஆரையம்பதி-01.
- நில்னா நிஸ்மி, நிந்தவூர்.
- எம்.எம்.நௌபர், கிண்ணியா-02.
- கே.மகேஸ்குமார், உடப்பு.
- ரா.தேவராஜா, இரத்தினபுரி.
- ஏ.எம்.அன்சீர், போருத்தோட்ட.
- என்.பிரேம்ஹாலன், நாரம்மல.
- செல்வி.விஜயலட்சுமி, மண்டூர்.
- பாத்திமா ரிப்கா, நுவரெலியா.
- ஏ.சி.பிறோஸ், அக்கரைப்பற்று-06.
- வி.இரவிச்சந்திரன், கண்டி.
- ஏ.எல்.ஆதிமூலம், தெல்தோட்ட.
- கே.புவனலோஜினி, இறக்குவானை.
- செல்வி.பிரியநேசி, களுத்துறை தெற்கு.
- செல்வி ஏ.சுமித்ரா, திருகோணமலை.
- எல்.ஜெயசுப்பிரமணியம், தலவாக்கலை.
- மா.ஜெயந்தி, அன்புவழிபுரம்.
- செல்வன் எஸ்.சீனிவாசகம், பிட்டகந்தை.
- ஏ.ஆர்.நஸீம், கிண்ணியா-02.
- கே.லலிதா, ஹாலி-எல.
- சுபாஷினி கமலப்பா, மட்டக்களப்பு.
- பௌசியா மன்சூர், திருக்கோணமலை.
- வி.அன்ரன், ஜெர்மனி.
- ஏ.எம்.உஸ்வஸ், துபாய்.
- என்.சதீஸ்குமார், பிரான்ஸ்.
- ஜெ.கமலா நடராஜ், ரொரன்றோ-கனடா.
- எம்.நூர்தீன், சவுதிஅரேபியா.



படிப்பகம்

www.padippakam.com

# இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சர்வஜன வாக்கெடுப்பு!

# அரசை அச்சுறுத்த எதிர்க்கட்சி இரகசியத் திட்டம்!

அரசியல் தீர்வு யோசனைகளில் 70 வீதமானவை இணக்கம் காணப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆயினும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் இன்னமும் ஒருமித்த முடிவு காணப்படவில்லை என்று தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு-கிழக்கு ஒரே நிர்வாக அரசியல் அலகு என்ற விடயத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இதுவரை திட்டவட்டமான கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து ஒரே நிர்வாக அரசியல் அரசாக இருக்க வேண்டும்: பாதுகாப்புக்கான உத்தரவாதம் வேண்டும்: திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாமல் இருக்கும் பொருட்டு காணி அதிகாரங்கள் வடக்கு-கிழக்கு அரசாங்கத்திடம் இருக்க வேண்டும் என்பவையே தமிழ்க் கட்சிகளின் முக்கிய கோரிக்கையாகும்.

### அடிப்படை அம்சங்கள்

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வின் முக்கிய அடிப்படை அம்சங்களும் அவைதான். முதலில் இணக்கம் காணப்பட வேண்டிய விடயங்களும் அவைதான்.

முக்கிய விடயங்களை விட்டு ஏனைய விடயங்களில் காணப்பட்டுள்ள இணக்கம் குறிப்பிடத்தக்க ஒன்றாக கருதப்பட முடியாது.

ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைக்க ஆதரவளிக்க முடியாது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கூறிவிட்டது. வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்திலும் அக்கட்சி எதிராகவே இருக்கிறது.

இந்நிலையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசியல் தீர்வு யோசனைகளில் இணக்கம் காணப்படத்தக்க சூழ்நிலை ஏற்படப்போவதில்லை என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

### பின்னணியில் யார்?

சிங்கள மக்களின் உரிமைக்கான இயக்கம் என்ற பெயரில் புதிதாகத் தோன்றியுள்ள அமைப்பு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அரசியல் தீர்வு யோசனைகளை இந்தியப் பிரதமர் தேவகவுடா வரவேற்றமையை கண்டித்து அந்த அமைப்பினர் அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழு உயிரிழந்த ஒன்றாகிவிட்டது. ஆயினும் அதற்கு உயிர் கொடுக்க விரும்புகிறார் நீதியமைச்சர் பீரிஸ். உண்மையில் அவர் மட்டும்தான் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நம்பிக்கை வைத்திருக்கிறார். வேறு யாருக்கும் அதில் நம்பிக்கை இருப்பதாகத் தெரியவில்லை என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அரசியல் தீர்வு யோசனை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பும் உடனடியாகச் சாத்தியமாகக் கூடிய விடயமல்ல என்றே தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்க்கவில்லை என்று ஐ.தே.கட்சி கூறிவருகிறது. அதேநேரம் திரைமறைவில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் இனவாதப் பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

திருமலைச் சந்தைக் குத்தகை விடயத்திலும் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே பின்னணியில் நின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### தீவிரப்பிரசாரம்

இனப்பிரச்சனைக்கு அரசாங்கத்தால் தீர்வு காண முடிகிறதோ இல்லையோ, அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிவிடக் கூடாது என்பதில் ஐ.தே.கட்சியில் ஒரு பிரிவினர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

முன்னர் 'ஹெல உருமய' என்ற பெயரில் இனவாத அமைப்பாகச் செயற்பட்ட குழுவினரும் தற்போது ஐ.தே.கட்சியில்தான் இருக்கின்றனர்.

சிங்கள மக்களை பாதுகாப்பதற்கான இயக்கத்தின் பின்னணியில் அவர்கள் இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தத் தயார் என்று அரசாங்கம் கூறியிருப்பதால் இனிமேல் சிங்கள மக்களை பாதுகாப்பதற்கான இயக்கம் என்ற பெயரில் கடும் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்படும். சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசாங்கம் துணியாத வகையில் அப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படலாம் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வவுனியாவில் மீண்டும் தாக்குதல்?

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு வருமாறு படையினர் அழைத்துள்ளனர்.

வன்னியில் தொற்றுநோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. அடிப்படை வசதிகளும் இல்லாமல் இடம் பெயர்ந்த மக்கள் திண்டாடுகின்றனர்.

இந்நிலையில் விரைவில் பெரும் தொகையான இடம் பெயர்ந்த மக்கள் வவுனியாவுக்கு வரக்கூடும் என்று படையினர் எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறு வவுனியாவுக்கு வரும் மக்கள் உணவுக்குடன் (?) யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுவர். யாழ் செல்ல விரும்பாதவர்கள் மட்டுமே வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியாவில் தாக்குதல்களில் ஈடுபட புலிகள் திட்டமிடுவதாகத் தெரிகிறது.

## மாதங்கள் எட்டு

## 225 பேர் காயம்

யாழ் குடாநாட்டில் கடந்த எட்டு மாத காலங்களில் 225 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். இத்தகவலை யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்தோர் எண்ணிக்கையே அதிகமாக இருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகங்களில் சிக்கியும், ஷெல் தாக்குதல்களிலும் ஏனையோர் காயமடைந்தனர்.

மிதிவெடிகளில் சிக்கியவர்களில் இரண்டுபேர் இரண்டு கால்களையும் இழந்துள்ளனர். 28 பேர் ஒரு காலை இழந்துள்ளனர். ஏனையோர் அங்கப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மிதிவெடிகளில் சிக்கி 50 கால்நடைகளும் உயிரிழந்துள்ளன.

## புலிகள் கண்டனம்

யாழ் குடாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகள் செல்வதைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

ஈ.பி.டி.பியினர் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறந்துள்ளதை அடுத்தே இக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பியையும் ஏனைய தமிழ்க் கட்சிகளையும் புலிகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் புலிகள் கண்டித்து கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பயணம் செய்ய நினைத்தோரின் இறுதிப் பயணம்

### பலியான மூவரின் சோகக் கதை

கடந்த 2.01.97 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் நான்கு பேர் படுகாயமடைந்தனர். மூன்றுபேர் பலியானார்கள்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது:

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றில் படையினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர். திருநெல்வேலி தபால்பெட்டி சந்திக்கருகில் உள்ள மரம் ஒன்றில் புலிகள் கிளைமோர் கண்ணி வெடி வைத்திருந்தனர். ரோந்து சென்ற படையினர் மரம் இருந்த இடத்தை நெருங்கும்போது கிளைமோர் வெடித்தது. மரத்தின் இலைகளுக்குள் கிளைமோரை மறைத்து வைத்திருந்தனர். காலை 7 மணிக்கு இச் சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் ஆறு படைவீரர்கள் பலியாகினர். மூன்று பொதுமக்கள் பலியானார்கள். அதில் இரண்டுபேர் உயர்தர மாணவர்கள்.

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த பேரம்பலம் சிறீனிவாசன், வயது 19, தம்பிராசா பிரதீசன், வயது 18 ஆகிய மாணவர்களே கொல்லப்பட்டனர். மல்லாகம் இந்துக் கல்லூரியில் வர்த்தகப்பிரிவில் முதலாமாண்டு மாணவர்களான இருவரும் கொழும்பு செல்ல பெயர் பதிவு செய்திருந்தனர். கொழும்பு செல்ல அனுமதி கிடைத்திருக்கிறதா என்று பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்தபோதே இவர்கள் பலியானார்கள்.

பலியான மற்றொருவர் சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னவர் முருகையா, வயது 41. கொழும்புக்கு தனது உறவினர் ஒருவரை பயணம் அனுப்பச் சென்றபோதே பலியானார்.

திருநெல்வேலியில் புலிகளின் கிளைமோர் தாக்குதலை அடுத்து யாழ் நகர வீதிகளில் உள்ள மரங்களை வெட்டிவிடுமாறும், கொப்புகளை வெட்டுமாறும் படையினர் அறிவித்துள்ளனர். வீதியோரங்களில் உள்ள வீடுகளில் உள்ள கொப்புகளும் வெட்டபட்டுள்ளன.

## 14 ஆண்டு கால யுத்தம் 9,301 புலிகள் பலி!

1982 நவம்பர் 27ம் திகதி முதல் 1996ம் ஆண்டு நவம்பர் 30ம் திகதிவரை ஒன்பது ஆயிரத்து முன்னூற்றியொரு புலிகள் களப் பலியானதாக புலிகள் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலண்டனிலுள்ள புலிகள் இயக்க சர்வதேச தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பலியானவர்களில் 8 ஆயிரத்து 222 பேர் ஆண் உறுப்பினர்கள்.

ஆயிரத்து 79 பேர் பெண் உறுப்பினர்கள். 94பேர் கரும்புலிகள். கரும்புலிகளில் 33 பேர் ஆண்கரும்புலிகள். 45 பேர் ஆண் கடற் கரும்புலிகள்- 16 பேர் பெண் கரும் புலிகள்.

1991ல் ஆனையிறவு ஆகாய- கடல் வழிச்சமரில் 602 பேரும், 1995ல் மணலாறு மின்னல் தாக்குதலில் 233 பேரும், 1993ல் பூநகரி தவளைப் பாய்ச்சலில் 459 பேரும், கொக்குத் தொடுவாயில் 175 பேரும், 1995ல் இடிமுழக்கத் தாக்குதலில் 181 பேரும், 1995ல் சூரியக்கதிர் தாக்குதலில் 438 பேரும், 1996ல் ஓயாத அலைகள் நடவடிக்கையில் 314 பேரும், சத்ஜய 1-2 தாக்குதலில் 115 பேரும், சத்ஜய-3 தாக்குதலில் 133 பேரும் பலியானார்கள்.

சமீபகாலத்தில் வன்னியிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளிலும் இடம்பெற்ற தாக்குதல்களில் 995 பேர் பலியானார்கள். இவ்வாறு புலிகளின் இலண்டன் சர்வதேச தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டு மரண தண்டனைகள்!

### யாழில் புலிகள் எச்சரிக்கை

கடந்த 06.01.1996 அன்று யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள மஞ்சவண்ணப்பதி என்னும் இடத்தில் ஒருவரது சடலம் காணப்பட்டது. 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரது உடல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டது.

புலிகள் இக்கத்தினரால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இணுவில் சந்தியிலும் 65வயதுடைய சிங்களவர் ஒருவரது உடல் சூட்டுக் காயங்களுடன் போடப்பட்டிருந்தது.

கடந்த 40 வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் ஜீ. டபிள்யு. பியதாசா என்பவரே கொல்லப்பட்ட நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையானவரின் உடல் அருகே புலிகள் இயக்கத்தினரின் பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது. படையினருக்கு தகவல் கொடுத்ததற்காகவே அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'இந்த நெருக்கடியான சூழ்நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ படையினருக்கு உதவி செய்யவேண்டாம். அவ்வாறு உதவி செய்வோர் தண்டிக்கப்படுவர்' என்றும் புலிகளின் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மன்னாரில் திடீர்த் தாக்குதல்!

### மறுநாள் சல்லடைத் தேடுதல்

(மன்னார் நிருபர்)

கடந்த 02.01.97 அன்று மன்னார் உப்புக்குளம் பகுதியில் இரவு வேளையில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் இரு பொலிஸ் புலனாய்வுத் துறை அதிகாரிகள் காயங்களுக்குள்ளானார்கள்.

இவர்கள் தற்போது அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டாலும், வாள் வீச்சே இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

சம்பவ தினம் நான்கு பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மன்னார் நகரிலுள்ள முஸ்லிம் ஹோட்டலில் தேநீர் அருந்திவிட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அப்போதே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

இரவு 7.15 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் ஸ்தலத்திற்கு விரைந்தனர்.

மறுநாட்காலை உப்புக்குளம், மூர் வீதி போன்ற பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு கடுமையான தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதே தினம் வங்காலைக்கிராமமும் சுற்றி வளைக்கப்பட்டு சல்லடைத் தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெற்றன. இக்கிராமத்தவர்கள் பாடசாலைக்கு வருமாறு கூறப்பட்டு அங்கு வைத்து சோதிக்கப்பட்டனர். அன்றைய தினம் அங்கு பாடசாலை நடைபெறவில்லை. அரச ஊழியர்கள் எவரும் மன்னாருக்கு வரவும் அனுமதிக்கப்படவில்லை.

## யாழ் இந்துக் கல்லூரி அபார சாதனை!

### 125 பேர் பல்கலைக்கழகம் செல்கின்றனர்

(யாழ் நிருபர் வர்மா)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 125 மாணவர்கள் யாழ் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவாகியுள்ளனர்.

1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கா.பொ.த. உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தெரிவு இடம் பெற்றுள்ளது. பொறியியல்-1க்கு 31 மாணவர்கள், பொறியியல்-2க்கு 9 மாணவர்கள், மருத்துவம்-20 மாணவர்கள், பௌதீக விஞ்ஞானம்-38 மாணவர்கள், விவசாயம்-10 மாணவர்கள், உயிரியல் விஞ்ஞானம்-3 மாணவர்கள், முகாமைத்துவம் 1-2,-8 மாணவர்கள், வர்த்தகம்-6 மாணவர்கள் என்றரீதியில் 125 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

வடபகுதியில் ஒரே பாடசாலையில் இருந்து 125 மாணவர்கள் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டிருப்பது ஒரு சாதனையாகும்.

போர்க்கால சூழலிலும் யாழ் மாணவர்கள் கல்வியில் காட்டிவரும் ஈடுபாட்டையும் இது பிரதிபலிக்கிறது.

## யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. காரியாலயம்

### "11 விடயங்களில் உடன் கவனம்"

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் தமிழ் கட்சிகள் எதுவும் அங்கு செல்லவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவுப்பகுதிகளில் மட்டும் ஈ.பி.டி.பி.யினர் நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்தனர். தற்போது யாழ்ப்பாணத்திலும் ஈ.பி.டி.பி. கட்சியினர் தமது அலுவலகத்தைத் திறந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஸ்ரீதர் திரையரங்கக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டுள்ள அலுவலகத்தை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ. திறந்துவைத்துள்ளார்.

"பாதுகாப்பு நடவடிக்கைகளிலோ, ரோந்துகளிலோ எமது கட்சியினர் ஈடுபட மாட்டார்கள். மட்டக்களப்பிலும், திருமலையிலும் அம்பாறையிலும் உள்ள ஈ.பி.டி.பி. கட்சி அலுவலகங்கள் போலவே யாழ்ப்பாண அலுவலகமும் அரசியல் வேலைகளில் மட்டுமே ஈடுபடும்" என்று டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"உணவு விநியோகத்தை சீரமைத்தல், மருத்துவ- சுகாதார வசதிகளை மேம்படுத்தல், போக்குவரத்து ஒழுங்குகளை சீர்செய்தல், கல்வித் தரத்தை உயர்த்துதல், அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்தல் ஆகியவை உட்பட பதினொரு பணிகளில் உடனடிக் கவனம் செலுத்துவோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டக்ளஸ் தேவானந்தாவுடன் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி.தங்கவேல், யூ.பாஸ்கரன் ஆகியோர் யாழ் சென்றிருந்தனர். இதேவேளை ஏனைய தமிழ்க் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகளும் யாழ் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

## புலிகளின் கண்ணிவெடி

### 19 படையினர் காயம்

(ஏறாவூர் நிருபர்)

பெரிய புல்லுமலை இராணுவமுகாம் வாபஸ் பெறப்பட்ட வேளையில் அப்பகுதியைச் சூழ வசித்து வந்த பல சிங்களக் குடும்பங்கள் பயத்தின் காரணமாக அங்கிருந்து விரைவாக வெளியேறி மஹா ஓயாப் பகுதிக்கு அகதிகளாகச் சென்றுள்ளார்கள். இக்குடும்பங்கள் தமது வீட்டுக் கோழிகளைக் கூடப்பிடித்துச் செல்ல முடியாமல் வெகுவிரைவாக வெளியேறினார்கள் என்று தெரியவருகிறது.

அடுத்தடுத்து இராணுவ மற்றும் பொலிஸ் முகாம்களைக் கொண்டுள்ள மட்டக்களப்பு-பிள்ளையாரடியில் கடந்த 04.01.97 அன்று விடுமுறையிலுள்ள படைவீரர்களை தென்பகுதி நோக்கி ஏற்றிச் சென்று கொண்டிருந்த பஸ் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கியதால் பஸ்ஸிலிருந்து 19 படையினரும், பஸ்சாரதியான சிவிலியன் ஒருவரும் காயங்களுக்குள்ளாகிப் பொலன்னறுவை வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். 55வயது பெண்மணி ஒருவரும் காயமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதி போக்குவரத்திற்குத் தடைப்படுத்தப்பட்டு கள்ளியன்காடு, கொக்குவில், இருதயபுரம் போன்ற உள்ளூர் வீதிகளுக்கூடாகத் திருப்பிவிடப்பட்டது.

சம்ப சில காலங்களுக்கு முன்னரும் பிள்ளையாரடியில் இதே இடத்தில் கண்ணி வெடியொன்றில் சிக்கி 6 படைவீரர்கள் பலியானார்கள்.

## கொள்ளையரால் முஸ்லிம் நபர் கொலை!

### சடலத்தைக் கண்டெடுத்து ஒப்படைத்தனர் புலிகள்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 28.12.96 அன்று மட்டக்களப்பு-கிரான் பகுதிக்கு மிட்டாய் வியாபாரத்திற்காகச் சென்று காணாமல் போன ஏறாவூர் வாசியான இ.வெள்ளைத்தம்பியின் சடலம் கடந்த 01.01.97 அன்று கண்டு பிடிக்கப்பட்டது.

இவரைக் கடத்திய கொள்ளையர்கள் கோரக்கல்லிமடு கடற்கரைப் பகுதிக்குக் கூட்டிச் சென்று கத்தியால் வெட்டியும், குத்தியும் கொலை செய்து விட்டு கடற்கரை மணலில் புதைத்திருக்கிறார்கள். பின்னர் இவர் கொலை செய்யப்பட்ட செய்தி தமிழ்ப் பொது மக்கள் கொடுத்த தகவலின் பேரில் தெரியவந்தது.

வழிப்பறிக் கொள்ளையர்களே இக் கொலையைச் செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இக் கொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லையெனப் புலிகள் மறுத்துள்ளனர்.

புலிகளின் ஆளுகைக்குள் உள்ள அப்பகுதியில் கிடந்த சடலத்தைப் புலிகள் கண்டு பிடித்து உறவினர்களுக்குக் கிட்டும்படி செய்துள்ளதோடு கொலையாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கப் போவதாக உறுதியளித்துள்ளனர் என்று அறியவருகிறது.

ஏறாவூர்ப் பகுதியில் மை.நிரஞ்சலா என்ற ஆறு வயதுச் சிறுமியின் கொலையுடன் கடந்த கிறிஸ்மஸ் தினப் பொழுது புலர்ந்தது. அப்பகுதியிலுள்ள காவலரணிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கிச் சூடே சிறுமியைக் கொன்றதாக ஊர்மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்வாண்டின் காலைப் பொழுது வெட்டிக் கொலை செய்யப்பட்ட வெள்ளைத்தம்பியின் சோகத்துடன் புலர்ந்தது.

இப்பொழுது மட்டக்களப்பில் மர்மக் கொலைகளும் ஆட்கடத்தலும் அவ்வப்போது இடம் பெற்று வருகின்றன. சமீபத்தில் மகராஜா என்ற மரணவன் ஒரு குழுவினரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். பின்னர் அவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

கடந்த 02.01.97 அன்று மட்டக்களப்பில் பஸ்ஸுக்காகக் காத்துநின்ற துறைநீலாவணையைச் சேர்ந்த த.இராசலிங்கம் (24) என்பவர் ரீசேர்ட் அணிந்திருந்த ஒரு குழுவினரால் கடத்தப்பட்டார் என்று முறையிடப்பட்டுள்ளது. அவர் என்ன ஆனார் என்பது பற்றிய தகவல் எதுவுமில்லை.

## 'பாடும் மீன்' முடிவுற்றது. சூரிய வெற்றி கட்டம் 2

### மின்மாற்றிகள், கம்பங்கள் தொடர்ந்தும் புலிகளால் தகர்ப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புலிகளைத் தேடியழிக்கும் "பாடும் மீன்", "சூரிய வெற்றி-1" எனப் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்து "சூரிய வெற்றி-2" நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. புலிகளின் தற்காலிக கெரில்லாத் தளப்பிரதேசங்களை நோக்கி பெரும் படை நகர்வை மேற்கொண்டுவிட்டு இராணுவத்தினர் திரும்புகின்றனர். அப்பகுதிகளில் இராணுவ முகாம்களை அமைக்கும் எண்ணம் படையினருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

பதுளை வீதியில் மேற்கொள்ளப்பட்ட "சூரிய வெற்றி-1" நடவடிக்கையின்போது 14 புலிகளும் 2 பொதுமக்களும் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட 14 புலிகளும் காய்ச்சலாலும் மற்றும் நோய்களாலும் பீடிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்று வந்தார்கள் என்றும் படையினர் திடீரென வந்ததைக் கண்டதும் எழுந்து ஓட முற்பட்ட வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக மக்கள் கூறுகிறார்கள்.

படையினர் வருவதற்கு முன்னரே பதுளை வீதியிலிருந்த தமது அலுவலகங்களை தடம் தெரியாது மிகக் கச்சிதமாக மூடிய புலிகள், நோய்வாய்ப்பட்டிருந்த இந்தப் 14 புலி உறுப்பினர்களையும் ஏன் கைவிட்டுச் சென்றார்கள் என்பது புரியாத புதிராக இருப்பதாக அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட புலி உறுப்பினர்களின் உறவினர்கள் விசனம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு, கல்முனைப் பகுதிகளில் அடிக்கடி மின்மாற்றிகளையும், மின் கம்பங்களையும் புலிகள் சேதப்படுத்தி வருவதனால் இப்பகுதிகள் தொடர்ந்து இருளில் மூழ்குகின்றன. கடந்த வாரம் கல்முனைப் பகுதியிலுள்ள 5 மின்மாற்றிகளையும், மட்டக்களப்பு பகுதியில் ஹபறணை ஊடான பல மின்கம்பங்களையும் புலிகள் சேதப்படுத்திச் சாய்த்துள்ளனர். புலிகள் தகர்த்துச் சேதப்படுத்துவதும், அவற்றை மின்சார சபையினர் திருத்தியமைப்பதும் இங்கு வழமையான நிகழ்வுகளாகிவிட்டன.



படிப்பகம்

www.padippakam.com

# தடை அரணில் பொலிஸார் கைது
## இராணுவத்தின் சோதனையில் சிக்கினர்

(புத்தளம் நிருபர்)

சிவில் உடையில் சென்ற இரு பொலிஸார் தம்வசம் அடையாள அட்டையை வைத்திராத காரணத்தினால் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனராம். இச்சம்பவம் குறித்து மேலும் கூறப்படுவதாவது:-

புத்தளம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் இரு பொலிஸார் நகரிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ள கருவலகஸ்வெல என்னும் இடத்திலுள்ள காவலரணுக்கு கடமையின் நிமித்தம் செல்ல வேண்டியிருந்ததாம்.

இவர்களது சீருடை, அடையாள அட்டை என்பன காவலரணில் இருந்ததால் இரு பொலிஸாரும் சிவில் உடையில் பஸ்ஸில் சென்றனராம்.

இடையேயுள்ள இராணுவமுகாமின் முன்னே அமைக்கப்பட்டிருந்த சோதனை முகாமில் பயணிகள் இறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டபோது இரு பொலிஸாரிடமும் அடையாள அட்டைகளைக் கோரினார்களாம் இராணுவத்தினர்.

தாம் பொலிஸார் எனவும் கடமையின் நிமித்தம் செல்வதாகவும் அடையாள அட்டை அங்கேதான் உள்ளது எனவும் வாதிட்டனராம்.

இதனை நம்பாத இராணுவத்தினர் மேற்படி இரு பொலிஸாரையும், இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனராம்.

இராணுவப்பொலிசார் புத்தளம் தலைமை நிலைய பொலிஸ்இன்ஸ்பெக்டர் வசம் இருவரையும் ஒப்படைத்தனராம்.

இரு பொலிஸாரையும் ஏற்றுக் கொண்ட போலிஸ் இன்ஸ்பெக்டர், இராணுவப் பொலிஸாருக்கு கீழ்கண்ட அறிவுரையொன்றையும் வழங்கினாராம்:

"அடையாள அட்டையில்லாதவர்களை கைது செய்ததை வரவேற்கின்றேன். ஆனால் இராணுவ சோதனை முகாமில் கட்டாயம் பொலிஸார் ஒருவரும் கடமையில் இருக்க வேண்டும். அப்போதுதான் பொலிஸாரை அடையாளம் கண்டுகொள்ள இலகுவாக இருக்கும். இனிமேல் அதனைக்கடைப்பிடியுங்கள்" என்றாராம்.

# கிழிந்த நோட்டை ஏற்க மறுக்கும் வங்கிகள்

(மன்னார் நிருபர்)

மன்னார்ப் பகுதியில் கிழிந்த நாணயத் தாள்களை வங்கிகள் ஏற்க மறுப்பதால் இவ்வகையான தாள்கள் மூலைக்குள் குவிந்து கிடக்கின்றன.

வெளியிடங்களுடன் மிகவும் குறைந்த தொடர்புகளைக் கொண்ட மன்னாரில், கிழிந்த நாணயத் தாள்கள் அண்மைக்காலம்வரை ஏற்கப்பட்டுவந்தன.

தற்போது வங்கிகளே இவற்றை ஏற்க மறுப்பதால் பொதுமக்களும் இவற்றை பரிமாறிக் கொள்வதை நிறுத்தியுள்ளனர். வர்த்தக நிலையங்களும் இவற்றை ஏற்க மறுக்கின்றன.

இவ்வகையான நாணயத் தாள்கள் ஏற்கப்பட மாட்டாதென சில நிறுவனங்களில் விளம்பரப் பலகைகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பு கிழிந்த நாணயத் தாள்களை தபாற் கந்தோரிலும், வங்கிகளிலும் கொடுத்து மாற்றக் கூடியதாக இருந்தது. ஆபத்துக்கு உதவும் அமைப்புக்களே தற்போது அதனை அலட்சியம் செய்வது ஏன் என பொதுமக்கள் கேட்கின்றனர்.

# திருமலை நகரசபைத் தலைவருக்கு எதிர்ப்பு!
## வரவு–செலவுத் திட்டத்துக்கு ஆதரவு மறுப்பு!

திருக்கோணமலை நகரசபையின் 97ம் ஆண்டுக்குரிய உத்தேச வரவு- செலவுத் திட்டம் சபையில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டபோது உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 23,26ந் திகதிகளில் இருதடவைகள் சமர்ப்பிக்கப்பட்டபோதும் உறுப்பினர்களின் எதிர்ப்பினால் உத்தேசத் திட்டம் அங்கீகாரத்தைப் பெறத் தவறிவிட்டது.

இது சம்பந்தமாக உபதலைவர் கா. லோகீஸ்வரன், இ. ரவிராஜா, ச. ரூபராஜா, பி. ஞானப்பிரகாசம் ஆகிய ரெலோ சார்ந்த உறுப்பினர்களும், ஈரோசைச் சேர்ந்த இ.நந்தகுமார், ஈ.பி.டி.பி. சார்ந்த வெ. நாகரத்தினம், ஐக்கிய முன்னணி சார்ந்த ஜி.எச் நிமால் காமினி ஆகிய உறுப்பினர்களும் கூட்டாகக் கையெழுத்திட்டு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

உத்தேச வரவு- செலவுத்திட்டம் தங்களைக் கலந்தாலோசியாமல் தயாரிக்கப்பட்டதாலும் அது பார்வைக்கு வைக்கப்படாததாலும், 95,96ம் ஆண்டுக்குரிய முடிவுறு கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படாததாலும் தாங்கள் வரவு-செலவுத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலை நகரசபைத் தலைவரான சூரியமூர்த்தி, ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர். எனினும் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர்களின் கருத்துக்களையும் அவர் கேட்டதில்லையாம். அதனால் நகரசபைக்குள் பலத்த அதிருப்திகள் ஏற்பட்டுள்ளன.

# மண்ணெண்ணெய் விநியோகத்தில் சீர்கேடு!
## மன்னார் மக்களின் முறைப்பாடு!

(மன்னார் நிருபர்)

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார்ப்பகுதியில் மண்ணெண்ணெய் விநியோகத்தில் பலத்த சீர்கேடுகள் நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்றன.

மண்ணெண்ணெய் விநியோகிக்கும் பொறுப்பு இப்பகுதி பல.நோ.கூ.சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் இதனைச்சீராக நடைமுறைப் படுத்த முடியாமல் இச்சங்கங்கள் திணறுகின்றன.

எண்ணெய் விற்பனையை தனியார் மேற்கொள்வது இப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளதால் நிலைமை மேலும் மோசமடைந்துவருகிறது.

முன்னர் கூ.ச.கடைகள் மூலம் வாரத்திற்கொருதடவை 3 லீட்டர் எண்ணெய் விநியோகிக்கப்பட்டுவந்தது. இது தற்போது ஒரு லீட்டராகக் குறைந்துள்ளது.

மன்னார் நகரில் இரவு வேளைகளில் மின்சாரம் சீராக வழங்கப்படாததால் இங்குள்ளவர்களும் மண்ணெண்ணெயையே நம்பியுள்ளனர்.

இதேவேளை கூ.ச.கடைகளில் தொடர்ச்சியான முறையில் இவ் விநியோகம் இடம் பெறாததால் அநேக வீடுகள் இரவில் இருளில் மூழ்கி விடுகின்றன.


முன்பு எண்ணெய் முகவர்கள், எண்ணெய் நிரப்பு நிலையம் ஆகியவற்றின் மூலம் இது விற்பனை செய்யப்பட்டதால் இதற்குத் தட்டுப்பாடோ, பற்றாக்குறையோ ஏற்படவில்லை.

இதனால் இதன் விநியோகப் பொறுப்பை ஏற்றுள்ள பல.நோ.கூ.சங்கம் சீராகத் தனது கடமையைச் செய்யாவிடின் முன்னரைப்போன்று தனியார் மூலம் இதனை நேரடியாக மக்கள் பெறுவதற்கு வழி செய்யப்படுவது அவசியமாகும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# "தமிழில் அச்சிட பணம் செலவாகும்"
## மொழிப் புறக்கணிப்புக்கு நியாயம் சொல்கிறார்கள்

திருகோணமலை மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையில் வேலை செய்யும் தமிழ் ஊழியர்கள் 80% மானோர் இருக்கின்றோம். மேல் அதிகாரிகளாக இரண்டு தமிழர்கள் இருக்கிறார்கள்.

ஊழியர்களுக்கு சாலையால் வழங்கப்படும் லீவு எழுதிகொடுக்கும் படிவம், மேலதிக நேரம் கடமை செய்து அதனை பெறுவதற்கு வழங்கப்படும் படிவம். கடமை நேரம் வெளியில் செல்வதற்கு வழங்கப்படும் பாஸ் படிவம் ஆகியன தனிச் சிங்கள மொழியில் அச்சிடப்பட்டுள்ளன. இதனால் தமிழ் ஊழியர்கள் மனக் கவலைக்கும் சிங்களம் தெரியாத தமிழ் ஊழியர்கள் பலர் சிரமத்திற்கும் ஆளாக வேண்டி இருக்கிறது.




இதைப்பற்றி மேல் அதிகாரிகளிடம் கேட்டால்! மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு பணம் அதிகமாகும்: ஒரு மொழியில் அச்சிட்டால் நான்கில் ஒரு பகுதிதான் செலவாகும்" என்று கூறுகிறார்கள். அப்படிக் கூறுகிறவர்களும் தமிழ் அதிகாரிகள்தான்.

அரச கரும மொழியான தமிழை- பணம் செலவாகும் என்று காரணம் காட்டி புறக்கணிக்கலமா? இவ்வாறான காரணங்களால் தானே இன்று பணத்தைக் கொட்டி யுத்தம் செய்ய வேண்டியிருக்கிறது! அதிகாரிகள் திருந்துவார்களா?

தமிழ்பேசும் ஊழியர்கள்

# பாடசாலைகளில் கொப்பி வியாபாரம்!

திருக்கோணமலையில் உள்ள சில பிரபல பாடசாலைகளில் பாடசாலையின் படங்களையும் பெயர்களையும் தாங்கிய அட்டைகளுடன் அப்பியாசக் கொப்பிகளை கௌரவம் எனக் கருதி வெளியிட்டுள்ளார்கள்.

குறித்த செயலினால் திருக்கோணமலை மாணவர்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியிக்கின்றார்கள். காரணம்- குறித்த அப்பியாசக் கொப்பியானது கடைகளில் குறைந்த விலையுடன் கிடைக்கக் கூடியதாய் உள்ளது. கடைகளைவிட பாடசாலைகளில் 50% விலை உயர்வாய் உள்ளது. விலை உயர்வாக இருந்தபோதும், வறிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் ஆசிரியர்களினால் தண்டிக்கப்படுவார்கள் அல்லது கவனக்குறைவாக நடாத்தப்படுவார்கள் என்ற காரணத்தினால், பாடசாலையிலே கொப்பிகளைக் கொள்வனவு செய்யவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள்.

பாடசாலைகளின் இவ்வாறான நடவடிக்கைகளினால் மாணவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களை கல்வித்திணைக்களமோ வேறு தொடர்புடைய அரசாங்க அமைச்சுக்களோ கவனமெடுக்கவில்லையா? பாடசாலைகளின் பெயர்களைக் கொண்ட கொப்பிகளினால் தான் மாணவர் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

கொப்பிகளை வெளியிட்டுள்ள பாடசாலைகள்:

தி/புனித சூசையப்பர் கல்லூரி.
தி/புனித மரியாள் கல்லூரி.
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.
தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி.
தி/விவேகானந்தா கல்லூரி.

கொப்பி விலைகளின் விபரங்கள்:

| கொப்பிகள் | | பாடசாலை விலை | தனியார் கடைகளின் விலை |
|---|---|---|---|
| 80 | பக்கம் | ரூ.10.65 | ரூ.6.50 |
| 120 | பக்கம் | ரூ.17.50 | ரூ.11.00 |
| 200 | பக்கம் | ரூ.30.00 | ரூ.20.00 |


# கார்கோ சேவையில் புதிய திருப்பம்

பல ஆயிரம் மைல்கள் கடந்து பல நூறு இடையூறுகளின் மத்தியில் வியர்வை சிந்திச் சிரமப்பட்டு உழைத்த உங்கள் பொருட்களைப் பாதுகாப்பாக இலங்கைத் தாய்த்திரு நாட்டிற்கு அனுப்பும்போது புத்தி சாதுரியமாகச் செயற்படுங்கள்.

கார்கோ சேவையில் 20 வருடகாலங்களுக்கு மேலாக நன்மதிப்பையும் நற்பெயரையும் வெற்றி கொண்ட **யூனியன் மரைன்** நிறுவனம் உங்களுக்காக உன்னத சேவையை வழங்கத் தயாராய் உள்ளது.

உங்களின் நம்பிக்கையைப் பெற்ற **யூனியன் மரைன்** நிறுவனம் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது இலவச ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி வருகின்றது.

ஒப்பற்ற சேவையை உங்களுக்களிக்க அழையுங்கள்

**Tel: 2421203 - 2421208 - 2421209**

"இன்றும் நாளையும், என்றுமே கார்கோ உலகில் முன்னணி வகிக்கும் யூனியன் மரைன் சேவை உங்களுக்கு–உங்களுக்காகவே–என்றும் உங்களுடன்"

கொழும்பு அலுவலக முகவரி–

சீமித சிலோன் சிபிங் லயின்ஸ்
294/10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை
கொழும்பு - 10.

தொலைபேசிகள்: 423994, 423995, 445268
பக்ஸ்–448468

நீர்கொழும்பு விநோ ட்ரேடர்ஸ் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் தமது வாடிக்கையாளர்கள் அன்பர்களுக்கு இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

நீர்கொழும்பில் நீங்கள் நாடவேண்டிய நாணயம் மற்றும் நம்பிக்கையுள்ள ஸ்தாபனம்

விநோ ட்ரேடர்ஸ்
இல. 101. கடற்கரை வீதி.
நீர்கொழும்பு.

BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்

முன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்

விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:.........................
விலாசம்:.........................

BRIGHT BOOK CENTRE (PVT)LTD
S-27, FIRST FLOOR, P O BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL:434770

றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

தேவை

ஜுகி மெசின் ஒப்பரேட்டர் தேவை. குறைந்தது இரண்டு வருட அனுபவமுடையவர்.

தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு இலவச தங்குமிட வசதி செய்து தரப்படும்.

சம்பளம் ரூபா 3350/=ற்கு மேல் கொடுக்கப்படும். மேலும் பல சலுகைகள் உண்டு.

அம்பாறை மாவட்டம் போன்ற தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சகல ஆவணங்களுடன் நேரில் வரவும் முகவரி:–

SAPPHIRE GARMENTS (PVT)LTD
NO: 225/11 SRI SANGARAJA MAWATHA
COLOMBO - 10.
(CROWN பட மாளிகை அருகே)

காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்

வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. (விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.)

ஜனவரி 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST., Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 ஜனவரி 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஒட்டமாவடியிலும், ஜனவரி 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# புதிய ஆண்டில் தொடங்கப் போகும் பலப்பரீட்சைகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

கிழக்கில் 'ரிவிஜய' நடவடிக்கையுடன் 'யுத்தம் மூலம் சமாதானத்தைக் காணும்' மற்றொரு ஆண்டுக்குள் காலடி எடுத்துவைத்துள்ளது அரசாங்கம்.

ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவில் தங்கியிருந்த போதே, கிழக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது.

**இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய அரசு மாறுபட்ட அபிப்பிராயம் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதையும் அந்த நடவடிக்கை புலப்படுத்தியுள்ளது.**

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னணியில் பேச்சுவார்த்தைக்கான அறிகுறிகள் இருப்பதாக ஊகங்கள் (முரசில் அல்ல) வெளியாகி இருந்தன.

இலங்கை-இந்திய அரசுகளின் நோக்கங்களுக்கு நேர்மாறான அந்த ஊகங்கள் இப்போது உயிரிழந்து விட்டன.

ஜனாதிபதி இந்தியாவில் தங்கியிருந்த போதே இங்கு போர் முழக்கம் கேட்கத் தொடங்கியது.

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக வெளியான ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பாரிய படை நகர்வு அமைந்திருந்தது.

பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கம் தயார் என்ற ஊகங்களை நேரடியாக மறுப்பதில் சில சிரமங்கள் உள்ளன.

பேச்சுக்கும் அரசாங்கம் தயாராக இல்லையோ? என்று வெளியுலகம் நினைக்கக்கூடும்.

மறுக்காமல் இருந்தாலும் பாதகம் தான். அரசாங்கத்தால் புலிகளை வெல்ல முடியவில்லை என்று தெற்கில் அபிப்பிராயம் தோன்றும்.

எனவே தனது மறுப்பை இராணுவ நடவடிக்கை மூலமாக வெளியிட்டுள்ளது அரசாங்கம்.

சர்வதேச 'மனித உரிமை அமைப்பொன்றின் பேச்சு முயற்சிகளை இலங்கை அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது' என்று புலிகளின் இலண்டன் தலைமையகம் கூறியதாகச் செய்திகள் வெளியாகின.

உண்மையில் அவ்வாறான ஊக்குவிப்பு எதிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை. 'இண்டர்நெஷனல் அலேட்'டைச் சேர்ந்த குமார் ரூபசிங்க ஏமாற்றத்தோடு இலண்டன் திரும்பிவிட்டார்.

அவரது முயற்சிகளை அரசாங்கம் ஊக்குவிப்பதாகக் கூறியது மூலம், அரசாங்கம் பணிந்து வருகிறது என்று காட்டவே புலிகள் விரும்பினர்.

**அதேநேரம் குமார் ரூபசிங்கவின் முயற்சிகளை தாம் ஆதரிப்பதாகவோ, உடன்பாடு தெரிவிப்பதாகவோ புலிகள் கூறவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.**

**ஆக, இரு தரப்பின் நிலையும் ஒன்றுதான். இன்றைய கட்டத்தில் பேச்சுவார்த்தை முயற்சிகளை தாம் ஆதரிப்பதாகக் கூறுவதோ, ஊக்குவிப்பதாகக் காட்டுவதோ இராணுவரீதியில் பலவீனமான நிலையாகக் கருதப்படும் என்பதே இருதரப்பினதும் நிலைப்பாடாக இருக்கிறது.**

குமார் ரூபசிங்கவோ அல்லது சமாதானத்தை விரும்பும் வேறு தனிநபர்களோ கூறும் கருத்துக்கள் நியாயமானவையாக இருக்கலாம். அவர்களது விருப்பங்கள், முயற்சிகள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம்.

ஆனால், இன்றைய கட்டத்தில் அவர்களது கருத்துக்களும், விருப்பங்களும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்களினதும் விருப்பங்கள், நிலைப்பாடுகள் என்பவற்றில் இருந்து வெகுதூரம் விலகியவையாகவே உள்ளன.

உலகின் பல நாடுகளில் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. சில வெற்றியடைந்துள்ளன. சில பரிதாபமாக தோல்வி கண்டுள்ளன.

போர் நிறுத்தப்பட்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தாலும், பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைவதாக இருந்தாலும் மூன்று முக்கிய காரணிகள் பிரதானமாக இருந்துள்ளன.

1. **இராணுவ பலத்தில் ஏற்படும் ஏற்-ற இறக்கங்கள்.**
2. **உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள்.**
3. **வெளியுலக சக்திகளின் தலையீடுகள்: அபிப்பிராயங்கள்.**

மேற்கண்ட மூன்று காரணிகளில் ஒன்று கூட இல்லையென்றால் பேச்சுவார்த்தைக் கதவுகள் இறுக மூடப்பட்டே இருக்கும்.

நியாயமான தனிநபர்களாலும் அந்தக் கதவுகளைத் திறக்க முடியாது. ஏனெனில் திறப்புக்கள் அவர்கள் கையில் இல்லை.

இவ்வாறான பின்னணியில்தான் இன்றைய காலகட்டத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமா இல்லையா என்ற கேள்விக்கு விடை காணமுடியும்.

1997ம் ஆண்டு சமாதான ஆண்டா, யுத்த ஆண்டா? என்ற கேள்விக்கு சமாதானத்தை விரும்பும் சொந்த விருப்பங்களுக்கு அப்பால், இருதரப்பின் நிலைப்பாடுகளில் இருந்துதான் விடை காணவேண்டும்.

கடந்த ஆண்டைப் பொறுத்தவரை வடக்கில் தாம் கைப்பற்றிய பகுதிகளை தக்கவைத்துக்கொள்வதில்தான் அரசாங்கத்தின் இராணுவ பலம் செலவிடப்பட்டது.

கடந்த ஆண்டில் கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றியது மட்டுமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய இராணுவ நடவடிக்கையாக அமைந்தது.

95ம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் தாக்குதல் நடத்திய படையினர், 96ம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இருந்தனர்.

கைப்பற்றிய பகுதிகளை தக்கவைப்பது தான் படையினரின் பிரதான பணியாக அமைந்தது.

கிளிநொச்சி நகரைப் படையினர் கைப்பற்றியதுகூட ஆனையிறவு பிரதான தளத்தின் தற்காப்போடு தொடர்புடையதாகவே அமைந்தது.

அதேவேளை 95ல் தற்காப்புக்கான பின்வாங்கல் நகர்வை மேற்கொண்ட புலிகள், 96ல் கெரில்லா யுத்த முறையிலான அழித்தொழிப்புத் தாக்குதல் ஒன்றை முல்லைத் தீவில் மேற்கொண்டனர்.

95ன் இறுதியில் இராணுவரீதியில் தமக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கும், இழப்புக்களுக்கும் 96ல் புலிகள் கணக்குத் தீர்த்துக் கொண்டனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் முல்லைத்தீவில் பலியானதுடன், ஆட்டிலறிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

யுத்தத்தில் எதிரியை வெல்ல வேண்டுமானால் எதிரியின் போரிடும் ஆற்றலை அழிக்க வேண்டும் என்பது யுத்த விதி.

**புலிகளின் போரிடும் ஆற்றல் என்பது படையினர் நிலங்களை கைப்பற்றுவது மூலம் வீழ்ச்சியடைந்து விடமாட்டாது என்பதை கடந்த ஆண்டின் போர்க்கள நிலவரம் வெளிப்படுத்தியுள்ளது.**

கடந்த ஆண்டு படையினர் தமது பலத்தின் பெரும்பகுதியை வடக்கில் தற்காப்பு மற்றும் தற்காப்புக்கான தாக்குதல்களில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர்.

அதேசமயம் புலிகள் தமது அணிகளை கிழக்கில் இறக்கி, அங்கொரு தாக்குதல் யுத்தத்தை ஆரம்பித்திருந்தனர்.

வடக்கில் உள்ள படையினரைத் திசை திருப்பும் புலிகளின் தந்திரம் என்று அரசும், படையினரும் அதனை அலட்சியம் செய்திருந்தனர்.

ஆயினும், புலுக்குணாவ அதிரடிப்படை முகாம் மீதான புலிகளின் தாக்குதல், கிழக்கில் புலிகளின் பலம் அலட்சியம் செய்யப்படக் கூடியதல்ல என்பதை எடுத்துக் காட்டி விட்டது.

புலுக்குணாவ முகாம் தாக்குதலை அடுத்து கிழக்கு போர்முனையிலும் படையினரின் பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

புலிகளுக்குப் பதிலடி கொடுப்பதாகக் காட்ட 'பாடும்மீன்' மற்றும் 'ரிவிஜய' நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக படையினர் வெளியிட்ட புள்ளி விபரங்கள் போல புலிகளுக்கு இழப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

புலிகள் பலர் கொல்லப்பட்டதாகவும், தமது இராணுவ நடவடிக்கை வெற்றியளித்திருப்பதாகவும் படையினர் தெரிவித்தனர். அதேநேரம் மேலும் பல முகாம்களை கிழக்கில் மூடியுள்ளனர்.

வடபகுதியில் மட்டும் புலிகளின் பலம் இருக்கிறது என்று கருதப்பட்டதால்தான், அங்கு மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை பெரிதாகப் பிரசாரம் செய்ய முடிந்தது.

ஆனால் இப்போது கிழக்கிலும் புலிகளின் பலம் கெரில்லா யுத்த முறையில் மேலோங்கி இருக்கிறது.

**95ம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட கள நிலவரத்தை வைத்து அரசாங்கம் போட்ட அவசரக் கணக்குகள் 96ல் தப்புக் கணக்குகளாகிவிட்டன.**

யாழ் குடாநாட்டை இராணுவ வெற்றியை முதலீடாக வைத்து தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடித்துவிடலாம் என்று அரசாங்கம் நினைத்தது.

பொதுத்தேர்தலைக்கூட நடத்திவிடலாமா என்றும் அரசாங்கத்தில் ஒரு சாரார் நினைத்தனர்.

யாழ் குடாநாட்டுக்கான புனரமைப்புக்கு வெளிநாடுகள் பெருமளவில் உதவும். அதில் ஒரு பகுதியை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பயன்படுத்தலாம் என்பதும் அரசின் எண்ணமாக இருந்தது.

அனைத்தையும் 96ல் புலிகள் தொடுத்த தாக்குதல்கள் தப்புக்கணக்காக்கிவிட்டன.

மரபுரீதியிலான படை பலத்தில் அரசாங்கமும், கெரில்லா போர் முறையில் புலிகளும் மேலோங்கி இருப்பதையே கள நிலவரங்கள் வெளிக்காட்டியுள்ளன.

கடந்தாண்டு புலிகள் மேற்கொண்ட கெரில்லாத் தாக்குதல்கள் அரசாங்கத்தின் போர்வெற்றிப் பிரசாரத்தில் பின்னடைவையும் ஏற்படுத்தி இருந்தன.

ஆயினும் அரசாங்கமும், படையினரும் நம்பிக்கை இழக்கவில்லை.

**படைபலம் மூலமும், படைக்கலங்களின் அபரிமிதமான பலம் மூலமும் புலிகளைப் பின்னடையச் செய்யலாம் என்பதுதான் படையினரின் நம்பிக்கைக்குக் காரணமாக இருக்கிறது.**

கிழக்கில் புலிகளின் தாக்குதல்களை தடுக்கக்கூடிய தற்காப்புக்கான படை நகர்வுகளை மேற்கொண்டபடி, வடக்கில் படை நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தவே படையினர் விரும்புகின்றனர்.

இந்த ஆண்டில் அரசாங்கத்தின் அரசியல் நோக்கங்கள் வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கை சார்ந்தவையாகவே அமைந்துள்ளன.

* **தெற்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது.**
* **இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது.**

இரண்டும் அரசின் நோக்கமாக இருக்கிறது. இதில் எதை முதலில் நடத்துவதாக இருந்தாலும், குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றி ஒன்றுடன்தான் மக்களிடம் செல்ல அரசாங்கம் விரும்பும்.

உள்ளூராட்சித் தேர்தல்களை தெற்கில் ஒன்றாக நடத்துவதைவிட, பகுதி பகுதியாக நடத்துவதையே ஆளும் கட்சியில் உள்ளவர்கள் விரும்புகிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் கோட்டையாக இருக்கக்கூடிய பகுதிகளில் முதலில் தேர்தலை நடத்துவது. அங்கு கிடைக்கும் வெற்றி ஏனைய பகுதிகளிலும் அலையை உருவாக்கும் என்பது அவர்களின் கணிப்பு.

அமைச்சர் தொண்டமானின் ஆதரவுடன் மலையகத்திலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடித்துவிடவே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் சர்வஜன வாக்கெடுப்பை நாடெங்கும் ஒன்றாகத்தான் நடத்த வேண்டியிருக்கும்.

**சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டுமானால், இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சிங்கள மக்களின் விருப்பம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதைவிட, ஆளும் கட்சியின் செல்வாக்கு எந்தளவுக்கு இருக்கிறது என்பதே முக்கியம்.**

**சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வி ஏற்படுமானால் அது அரசாங்கத்திற்கும் அரசியல் ரீதியில் ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படும்.**

சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தால் மக்களின் தீர்ப்பை அரசாங்கம் குறை சொல்ல வேண்டியிருக்கும். அல்லது தீர்ப்புக்கு தலைவணங்குவதாகச் சொல்ல வேண்டியிருக்கும்.

இரண்டுமே பாதகம்தான். குறை சொன்னால் அடுத்த தேர்தலில் மக்கள் தம் கோபத்தை பதிலுக்குக் காட்டிவிடக்கூடும்.

தீர்ப்புக்கு தலைவணங்குவதாக அறிவித்தால் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு அரசாங்கமும் தயாராக இல்லை என்றாகிவிடும். அதன் விளைவாக வெளியுலகில் அரசாங்கத்தின் 'இமேஜ்' வீழ்ச்சியடையும். உள்நாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் புலிகளின் அரசியல் செல்வாக்கு மேலும் பலமடையும்.

அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளின் நிலைதான் ரொம்பவும் பரிதாபமாக இருக்கும்.

பாராளுமன்றத்தில் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து தோல்வி கண்டால் எதிர்க்கட்சி மீது பழியைப் போட்டுவிட்டு இருந்து விடலாம். சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வி கண்டால் அப்படிச் செய்ய முடியாது.

எனவே-விஷப் பரீட்சைக்கு அரசாங்கம் துணிந்து முன்வருமா? என்பது கேள்விதான்.

தனது முதலுக்கு மோசம் ஏற்படாத சூழல் இருந்தால்தான் சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசு முன்வரும்.

"புலிகளை வெற்றிகொண்டு விட்டோம். சிங்கள மக்களுக்கு பாதகமில்லாத ஒரு தீர்வை முன்வைக்கப்போகிறோம்" என்று சொல்லிக்கொண்டு மக்களிடம் போக முடிந்தால்தான், சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசாங்கம் துணியும்.

**'யுத்தம்மூலம் சமாதானம்' என்ற அரசின் கோஷம் வெற்றிபெற்றால்தான் சர்வஜன வாக்கெடுப்புக்கான களத்தில் அரசாங்கம் கால்வைக்க முடியும்.**

சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் தீர்வுத் திட்டத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு பச்சைக் கொடி காட்டவும் முடியாது.

புலிகளை இராணுவ ரீதியில் பலவீனமாக்கினால்தான் ஏனைய தமிழ்க் கட்சிகள்கூட வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் சில விட்டுக்கொடுப்புக்களுக்கு இணங்கும் என்ற நிலையும் இருக்கிறது.

இதே நேரத்தில் இனப்பிரச்சனைக்கான தீர்வை, ஏதோ ஒரு வடிவத்தில் அரசாங்கம் முன்வைத்தே ஆகவேண்டும். பாராளுமன்றத் தெரிவுக் குழு முன்பாக தீர்வு யோசனைகள் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டே காலத்தை இழுத்தடிக்க முடியாது.

வெளியுலக அனுதாபமும் அதனால் பாதிக்கப்படும். இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வைக்காண அரசாங்கம் விரும்புகிறது என்ற கருத்தில்தான் வெளி நாடுகள் பல உதவி செய்து வருகின்றன.

எனவே-தனது தீர்வு இதுதான் என்று திட்டவட்டமாக அறிவிக்க முன்பாக, வடக்கு-கிழக்கு யுத்தத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வெற்றியைப் பெற்றுவிடவே அரசாங்கம் திட்டமிடும்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் அதன் தோல்வியைத்தான் புலிகள் விரும்புவார்கள்.

குறைந்த பட்ச தீர்வைக் கூட சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்த அதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவே புலிகள் காய் நகர்த்துவார்கள்.

உள்ளூராட்சித் தேர்தல்களிலும் ஆளும்கட்சி வெற்றி பெறுவதை புலிகள் விரும்பப்போவதில்லை.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பமாகி விட்ட பின்னர், புலிகள் ஒரு பாரிய தாக்குதலை எங்காவது நடத்திவிட்டால் எதிர்க்கட்சிக்கு பிரசார ஆயுதம் கிடைத்துவிடும்.

**எனவே-உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது, சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது போன்ற அரசியல் நோக்கங்களை அரசாங்கம் எட்ட வேண்டுமானால், யுத்த வெற்றியைத்தான் அது நம்பியிருக்க வேண்டும்.**



புலிகள் கெரில்லாப் போர் முறையில் வலுவான நிலையில் இருப்பதால் அரசாங்கத்தின் கணக்குகள் பொய்த்தும் போகலாம்.

**புலிகளைப் பலவீனமாக்கி தனிமைப் படுத்திவிட்டு ஒரு தீர்வை முன்வைக்கலாம் என்ற அரசின் நோக்கத்துக்கு சவாலான நடவடிக்கைகளில் புலிகளும் இந்த ஆண்டில் ஈடுபடுவர்.**

95ம் ஆண்டின் இறுதியில் அரசின் இராணுவ பலம் உயர்ந்திருந்தது. புலிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. 96ம் ஆண்டில் தொடர் தாக்குதல்கள் மூலமாக புலிகள் தமது பலத்தை தூக்கி நிறுத்தினார்கள். இராணுவ பல ரீதியில் இரு தரப்பும் மீண்டும் சம பல நிலையில் உள்ளன.

இதுதான் விபரீதமான கட்டம். ஒரு தரப்பைவிட மறுதரப்பு மேலோங்கும் பலப்பரீட்சைகள்தான் களத்தில் அரங்கேறும். அந்தப் பலப்பரீட்சைகளின் முடிவில்தான் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது.

அதற்கு முன்னர் பேச்சுவார்த்தை பற்றி நினைத்துப் பார்க்கவே இரு தரப்பும் விரும்பாது.

போர்மூலம் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை உள்ளபோது பேச்சுவார்த்தை ஊடாக அந்த உத்வேகத்தைத் தணிக்க எந்தவொரு தரப்பும் விரும்பாது.

எனவே-1997 இன் பெரும் பகுதியை யுத்தம் கவ்விக்கொள்ளும். இது அரசுக்கும், புலிகளுக்கும் போர்க்களத்தில் பலப் பரீட்சைக்கான ஆண்டு.

ரிலே ஓட்டம்போல, கடந்த ஆண்டின் கையில் இருந்த கோலை இந்த ஆண்டின் கைக்கு மாற்றியதாக 'ரிவிஜய' நடவடிக்கை அமைந்துவிட்டது. 96 டிசம்பர் கடைசியில் ஆரம்பித்த ரிவிஜய 97 பிறந்த பின்னரும் தொடர்ந்தது. போர் ஓட்டம் தொடர்வதற்கான முன்னறிவிப்பு அதுதான்!

## அதிரடி அய்யாத்துரை



திருவான மலையில் குத்தகை விவகாரத்தில் சபைத் தலைவரின் குத்துக்கரணங்களும் குழப்பங்களுக்குக் காரணமாம். பிள்ளையைக் கிள்ளியதும் அவர்தான். தொட்டிலை ஆட்டிவிட்டதும் அவர்தான். சபையில் அவரது கட்சியினரே அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதும், பச்சைக் கட்சியினர் மட்டுமே ஆதரவாக நின்றவையாம். வேலிக்கு ஓணான் சாட்சியோ?

ரி.என்.எல் பணிப்பாளரை பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைது செய்தது கண்டிக்கப்படவேண்டிய விஷயம்தான். சுலோக அட்டைகளுடன் பத்திரிகையாளர்கள் காட்டிய சுறு சுறுப்பும், ஆவேசமும் கண்டு பொறுப்பான அமைச்சரே ஆடிப்போனாராம். அவருடன் கலந்தாலோசித்து நடந்த விஷயம் இல்லையாம். கேள்விப்பட்டவுடன் அவருக்கே அதிர்ச்சிதானாம். அதை எப்படி வெளியே சொல்லுறது? அதெல்லாம் கிடக்க, முன்னர் ஒரு தமிழ்ப் பத்திரிகையாளரும் இதே சட்டப்படிதான் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர். அப்போது மட்டும் சகல பத்திரிகையாளர்களும் இப்படி ஒரு வேகத்தைக் காட்டவில்லையே எண்டதுதான் மனதுக்குக் கஷ்டமாயிருக்குது.

இத்தாலி செல்லும் வழியில் கடலில் மூழ்கிப் பலியானவர்களின் சோகக் கதை நெஞ்சை உருக்குது. கொழும்பு பம்பலப்பிட்டியில் பிரபலமான ஏஜண்டாக இருந்த 'பாலா' என்பவரின் பெயர்தான் இந்த விஷயத்தில் அடிபடுகிறது. அவரது ஏஜண்ட் மூலம் சென்றவர்கள் தான் பலியாகி இருக்கிறார்களாம். ஆடுமாடுகள் மாதிரி ஆட்களை வகை தொகையில்லாமல் ஏற்றியதுதான் விபத்துக்குக் காரணமாம். ஆட்களைக் கொண்டுபோன கப்பலும் குறிப்பிட்ட ஏஜண்ட்காரருக்கு சம்பந்தமுள்ள கப்பல்தானாம். ஆட்கள் மூழ்கிக் கொண்டிருக்க கப்பலை மட்டும் காப்பாற்றிக் கொண்டு ஓடிப்போட்டினம். தப்பி வந்தவர்கள் அங்கிருந்து போன் செய்த பிறகுதான் உறவினர்களுக்கு விஷயம் தெரிஞ்சதாம். ஏஜெண்ட்மாரின் பொறுப்புணர்ச்சியைப் பார்த்தியளோ? இவையை எந்தக் கோர்ட்டில் வைச்சு விசாரிக்கிறது?

அயல்நாடு சென்ற 'சக்தியானவர் புத்தாண்டுக்கு திரும்பிவந்தும், வந்த செய்தி மட்டும் படு இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாம். தலைநகரில் வெடியோசைகள் எல்லாம் சற்று ஓய்ந்தபின்னர்தான் திரும்பிய செய்தியை வெளியில் விட்டவையாம். எல்லாம் சரி, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ எண்டு ஊகங்கள் பல சொன்னவைபாடு என்னாச்சு? ஊகங்கள் தேவைதான். அடிப்படையே இல்லாத ஊகங்கள்தான் கொஞ்சம் ஓவர்.

கலைஞர் தற்போதைக்கு நம் விவகாரத்தில் மூச்சுவிடப்போவதில்லையாம். அவருடன் நெருக்கமாக இருக்கும் வட்டாரம் உறுதியாகத் தெரிவிச்சுப்போட்டுதாம். கலைஞரை சந்திப்பதற்காக இயக்கமொன்றின் பிரதிநிதி அந்த வட்டாரங்களுடன் தொடர்புகொண்டபோது "வீணாகச் சிரமப்படாதீர்கள். அவர் தற்போதைக்கு விலகியிருக்கவே விரும்புகிறார்" என்று தெரிவிக்கப்பட்டதாம்.

வவுனியா முகாம்களில் இருப்பவர்கள் உள்நாட்டுக்குள் நடமாடத்தான் தடை. வெளிநாடு போக விரும்பினால் கடவுச்சீட்டு பெறத் தாராள அனுமதியாம். தலைநகருக்கு வர அனுமதி பெறுவதைவிட, வெளிநாடு செல்ல விசா பெறுவது கஷ்டமில்லைப் போல கிடக்கு. கடும் விதிகள் இருந்தும் காசு உள்ளவைபாடு திண்டாட்டம் இல்லையாம். சமீபத்தில் முகாமிலிருந்து கொழும்பு வந்தவர் சொன்ன தகவல் அது. கையில் காசு பையில் பாஸ் எண்டுதான் வந்த இரகசியத்தைச் சொல்லுறார் மனுசன். பணம் எண்டால் பிணமும் வாய் திறக்கும். முகாம் கதவும் திறக்குமாக்கும்.

ஆளும் அணிக்குள் உள்ள தம் முன்னாள் கூட்டாளிகள் மூலமாக கூட்டுக்குள் குழப்பம் ஏற்படுத்துவதுதான் பச்சைக் கட்சியினரின் நோக்கமாம். தீர்வு விடயத்திலும் தமது முன்னாள் கூட்டாளிகள் மூலமாகத்தான் குறுக்கீடுகள் செய்கினம் பச்சைக் கட்சியினர்.

ஜனநாயக் கட்சியினர் யாழில் அலுவலகம் திறந்திருக்கினம். ஏனைய கட்சிகளும் செல்ல விரும்பியிருக்கினம். கூட்டான கட்சியினர் என்ன சொல்லுகினம் தெரியுமோ? "தற்போதைக்கு செல்லும் உத்தேசம் இல்லை" எண்டு சொல்லுகினம். செல்லமாட்டோம் எண்டு சொல்லவில்லை. "ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" வாய்ப்பு இருக்குது, வசதி இருக்குது எண்டு தெரிஞ்சால் புசுக்கென்று போகத்தயாராகத்தான் இருக்கினமாக்கும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அமைச்சொன்று அறிஞர்கள் மாநாடு நடத்தினதாம். அதில் கலந்து கொண்டவை பலர் தமிழே சரியாக அறியாதவர்களாம். அதனால் அறிஞர்கள் மாநாடு அறுஞர்கள் மாநாடாகிப் போச்சுதாம்.

கண்ணதாசன் சொன்ன அனுபவமொழி ஒன்று இந்தவாரம்:

*"எதிரி*
*எப்போதும் எதிரியே!*
*நண்பன்தான்*
*அடிக்கடி*
*பரிசீலிக்கப்படவேண்டியவன்"*



படிப்பகம்

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# துரையிறக்கமும் முற்றுகையும்!

111

## முதல் தாக்குதல்

'ஈழநாதம்', 'முரசொலி' ஆகிய பத்திரிகைக் காரியாலயங்கள் இந்தியப் படையினரால் தாக்கப்பட்டன.

புலிகளின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி நிறுவனமும் தாக்கப்பட்டது.

புலிகளின் முகாம்கள்மீது மட்டும் தாக்குதல் நடத்தப்படவில்லை.

அடுத்ததாக தமது முகாம்கள் இந்தியப் படையினரால் தாக்கப்படலாம் என்பதை புலிகள் உணர்ந்து கொண்டனர்.

"இந்தியப் படையினர் நம்மைத் தேடி வர முன்னர் நாம் இந்தியப் படையினரைத் தேடிச் சென்று தாக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார் பிரபாகரன்.

அக்டோபர் 10ம் திகதி ஊடரடங்கு அமுலில் இருந்தது.

புலிகளின் வாகனங்கள் ஆயுதம் தாங்கிய உறுப்பினர்களுடன் யாழ் நகர் நோக்கி விரைந்தன.

யாழ் நகருக்குள் இறங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்கள் துப்பாக்கிகள், ரொக்கட் லோஞ்சர்கள், மோட்டார்களுடன் இந்தியப் படையினரின் நிலைகளை நோக்கி பதுங்கிப் பதுங்கி முன்னேறிச் சென்றனர்.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகே துரையப்பா விளையாட்டரங்கில் கொட்டகைகள் அமைத்து இந்தியப் படைவீரர்களில் ஒரு பகுதியினர் தங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம் கோட்டை முகாமுக்குள் ஏனையோர் தங்கியிருந்தனர்.

இந்தியப் படைக்கு எதிரான முதலாவது தாக்குதலை ஆரம்பித்தனர் புலிகள்.

துரையப்பா விளையாட்டரங்கில் கொட்டகைக்குள் தங்கியிருந்த படையினர்மீது தான் முதல் வேட்டுத் தீர்க்கப்பட்டது.

புலிகளின் துப்பாக்கிகள் சீறத் தொடங்கின.

அங்கிருந்த இந்தியப் படையினர் தம்மீது தாக்குதல் தொடுக்கப்படும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே யாழ் கோட்டை முகாமை நோக்கிப் பின்வாங்கினார்கள்.

புலிகளின் திடீர்த் தாக்குதல் காரணமாக இந்தியப்படை வீரர்கள் பலர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

## பெண் புலிகள் தாக்குதல்

அதே நேரத்தில் இந்தியப் படையின் கவச வாகனம் ஒன்று யாழ் நகருக்குள் இருந்து கோட்டை முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அருகே உள்ள சுப்பிரமணியம் பூங்கா அருகே பெண் புலிகள் அணியொன்று ரொக்கட் லோஞ்சர்களுடன் பதுங்கியிருந்தது.

கவச வாகனம் அருகில் வந்ததும் ரொக்கட் லோஞ்சரால் குறிவைத்தனர். குறிதப்பவில்லை. கவச வாகனம் சிதறியது. அதில் பயணம் செய்தவர்களும் பலியானார்கள்.

யாழ் கோட்டை முகாமிலிருந்து வெளியேறி முன்னேற இந்தியப் படையினர் முயன்றனர்.

புலிகள் வசதியாக பதுங்கு நிலை எடுத்துக்கொண்டு கடும் தாக்குதல் தொடுத்தனர். இந்தியப் படையினர் எவ்வளவு முயன்றும் வெளியே வர முடியவில்லை.

யாழ் கோட்டை முகாமை நோக்கி மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன. கோட்டைக்குள் இருந்த இந்தியப் படையினர் பலாலியில் உள்ள தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு உதவி கோரினார்கள்.

அதே நேரத்தில் தெல்லிப்பழையில் நிலைகொண்டிருந்த மெட்றாஸ் ரெஜிமென்ட்மீதும் புலிகளின் இன்னொரு பிரிவினர் தாக்குதல் தொடுத்தனர்.

அத்தாக்குதலில் மெட்றாஸ் ரெஜிமென்டைச் சேர்ந்த ஐந்து இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

அக்டோபர் பத்தாம் திகதி புலிகள் நடத்திய தாக்குதல்களில் 20க்கு மேற்பட்ட இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர்.

புலிகள் முந்திக் கொள்வார்கள் என்று இந்தியப்படை அதிகாரிகள் எதிர் பார்க்கவில்லை.

அக்டோபர் பத்தாம் திகதி யாழ் குடாநாட்டில் தமது முகாம்களைவிட்டு இந்தியப் படையினர் வெளியே நகரவே முடியவில்லை.

## திபீந்தரின் திட்டம்

பலாலி விமான நிலையமும், காங்கேசன்துறை துறைமுகமும் புலிகளால் தாக்கப்படலாம் என்று கருதினார் தளபதி திபீந்தர் சிங்.

பலாலியில்தான் இந்தியப் படையினரின் ஆயுதக் களஞ்சியம் இருந்தது. உணவு, மற்றும் எரிபொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன.

இந்தியாவில் இருந்து மேலதிகத் துருப்புக்கள் வந்து சேருவதற்கும், விநியோகங்கள் கிடைப்பதற்கும் விமான நிலையமும், துறைமுகமும் பாதுகாக்கப் பட வேண்டியிருந்தது.

இரண்டையும் புலிகள் தாக்கினால் யாழ் குடாநாட்டில் உள்ள இந்தியப்படையினர் புலிகளின் பொறிக்குள் சிக்கிவிடுவார்கள்.

புலிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், அதிர்ச்சிகரமான தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார் திபீந்தர் சிங்.

பிரபாகரன் எங்கே தங்கியிருக்கிறார் என்பது இந்தியப் படையினருக்குத் தெரிந்திருந்தது.

தான் தங்கியுள்ள முகாம் இந்தியப் படையினருக்குத் தெரியும்; தனது முகாம்மீது இந்தியப் படையினர் தாக்குதல் நடத்துவர் என்பது பிரபாகரனுக்கும் தெரிந்திருந்தது.

## படையினர் நிலை

இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

யுத்தம் ஆரம்பிக்க முன்னர் இந்தியப் படை வீரர்கள் பலர் தாம் இலங்கைப் படையினரிடமிருந்து தமிழர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்டதாகவே நம்பியிருந்தனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையே நெருக்கமான உறவுகளும் பல பகுதிகளில் நிலவி இருந்தன.

மெட்றாஸ் ரெஜிமென்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்கள் புலிகளுடன் மட்டுமல்லாமல், பொது மக்களுடனும் அன்போடு பழகிவந்தனர்.

புலிகளையோ, தமிழ் மக்களையோ தங்கள் எதிரிகளாக நினைத்து உக்கிரமாகப் போரிடும் மனநிலையில் அவர்கள் இருக்கவில்லை.

யாழ் குடாநாட்டுக்கு இந்தியப் படையினர் வந்துசேர்ந்து இரண்டு மாதங்களானபோதும் யாழ் குடாநாட்டின் புவியியல் அமைப்புத் தொடர்பாக அவர்கள் அறிந்துகொள்ளவும் ஆர்வம் காட்டவில்லை.

யாழ் நகரில் எந்தெந்தக் கடைகளில் வெளிநாட்டுப் பொருட்கள் வாங்கலாம் என்ற விபரங்கள் மட்டும் இந்தியப் படை வீரர்கள் பலரின் விரல் நுனியில் இருந்தன.

இதேவேளை, புலிகளுக்கு எதிராக தாக்குதல் ஒன்றுக்கு விரைவான திட்டம் தீட்டப்படும் தகவலை இந்தியப் படைக்குள் இருந்த தமிழ் அதிகாரிகள் சிலர் புலிகளுக்கு ஜாடைமாடையாகத் தெரிவித்தும் இருந்தனர்.

## மேலதிகத் துருப்புகள்

இந்திய அமைதிப்படை தளபதி திபீந்தர் சிங்குக்கு இந்த நிலைமைகள் தெரியாமல் இல்லை.

ஏற்கனவே நிலைகொண்டிருநத இந்தியப் படையினர் தாம் போரிடவேண்டிய பகுதியில் உள்ள மக்களோடும், புலிகளுடனும் இதுவரை உறவாக இருந்தவர்கள்.

எனவே உக்கிரமான ஒரு போருக்கு உடனடியாகத் தயாராக மாட்டார்கள் என்று ஊகித்திருந்தார். அதனால்தான் மேலதிகத் துருப்புக்களை இந்தியாவிலிருநது தருவிப்பதற்கு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார்.

புலிகளுக்கு அதிர்ச்சி கொடுப்பதற்கான தாக்குதலுக்கு திபீந்தர் சிங் திட்டமிட்டார். அத் தாக்குதலுக்கும் இந்தியாவில் இருந்து அக்டோபர் பத்தாம் திகதி புறப்பட்டுவந்த படைப்பிரிவினரைப் பயன்படுத்தும் வகையிலேயே திட்டம் தீட்டினார்.

## முற்றுகைத் திட்டம்

பிரபாகரனை கைது செய்துவிட்டால் அதன் பின்னர் புலிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது கஷ்டமாக இருக்காது என்றே திபீந்தர் சிங் நம்பினார்.

பிரபாகரனை கைது செய்தால் தமிழ் நாட்டில் அதன் எதிரொலியாக எதிர்ப்புக்கள் கிளம்பலாம். தமிழக மக்களின் அபிப்பிராயம் இந்திய மத்திய அரசுக்கு எதிராக மாறாலாம் என்பதால் இந்தியப் பிரதமரின் கருத்துக் கேட்கப்பட்டது.

ராஜீவ் காந்தி அப்போது பிரபாகரன்மீது கோபத்தில் இருந்தார். அதனால் பிரபாகரனைக் கைதுசெய்யப் பச்சைக் கொடி காட்டி விட்டார்.


பிரபாகரன் தங்கியிருந்த முகாம், கொக்குவிலில் பிரம்படி என்னும் இடத்தில் இருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து அரை மைல் தூரத்தில் பிரம்படி ஒழுங்கை அமைந்திருந்தது. அதிலிருந்து 200 யார் தொலைவில் இரயில் பாதை அமைந்திருந்தது.

கிறவல் தரையைக் கொண்ட பிரம்படி ஒழுங்கையில் திருநெல்வேலிப் பாதையில் இருந்து வரும்போது முதலாவதாக ஒரு வளைவு எதிர்ப்படும். அங்குதான் பிரபாகரன் தங்கியிருந்த முகாம் இருந்தது.

அந்த வீட்டை தனது முகாமாகப் பிரபாகரன் தெரிவு செய்தமைக்குக் காரணம் இல்லாமல் இல்லை.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் இருந்தமையால் விமானப்படையினர் குண்டு வீசுவது சிரமம். பல்கலைக்கழகம் பாதிக்கப் படலாம் என்று நினைத்து அப் பகுதியில் தாக்குதல் நடத்தத் தயங்குவர்.



புலிகளின் தாக்குதலில் முதலில் பலியான அமைதிப்படையைச் சேர்ந்த 17 வீரர்களின் நினைவாக யாழ்.கல்லுண்டாய் வெளியில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம்.

பிரம்படி ஒழுங்கை பல வளைவுகளைக் கொண்டது என்பதால் இலங்கைப் படையினர் ஹெலிக்கொப்டர்களில் வந்து இறங்கி திடீர் தாக்குதல் நடத்தவும் முடியாது.

அப்படி முற்றுகையிட்டாலும்கூட பிரபாகரனின் முகாமிலிருந்து வெளியேறிச் செல்ல ஆறு பாதைகள் இருந்தன.

1985ம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி ஹெலிக்கொப்டர்களில் வந்திறங்கிய இலங்கை இராணுவத்தினர் புலிகளின் சுதுமலை முகாமைத் தாக்க முற்பட்டதையும், அத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதையும் முன்னர் விபரித்திருந்தேன்.

மீண்டும் அவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்பார்த்து அதற்கேற்பவே புலிகளின் பிரதான முகாம்கள் அமைந்திருந்தன.

1985ல் இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி பற்றி இந்திய அமைதிப்படை தளபதி திபீந்தர் சிங் அறிந்திருப்பாரோ தெரியாது.

### சென்றவாரம் ஒரு தவறு

'முரசொலி' ஆசிரியர் திருச்செல்வத்தின் மகனை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர் என்று குறிப்பிட்டிருந்தேன். திருச்செல்வத்தின் மகனது பெயர் பிரபாகரன் என்று தவறுதலாகக் குறிப்பிட்டு விட்டேன். அவரது பெயர் அகிலன். யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியில் திறமையான மாணவராக இருந்தவர். 'முரசொலி' ஆசிரியர் திருச்செல்வம் தற்போது கனடாவில் இருக்கிறார்.

பிரபாகரன் என்னும் பெயருடைய ஒரு வரும் புலிகள்-இந்தியப் படை மோதல் காலத்தில் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார்.

ஆனால் கிட்டத்தட்ட அதே பாணியில்தான் பிரபாகரனைக் கைதுசெய்ய பிரம்படி முகாம் முற்றுகைக்குத் திட்டமிட்டார் திபீந்தர் சிங்.

கிட்டத்தட்ட 15 வருட காலம் கெரில்லாப் போராட்டத்திலும், தலைமறைவு வாழ்க்கையிலும் அனுபவம் உள்ள ஒரு தலைவரை மிகச் சுலபமாகப் பிடித்துவிடலாம் என்று திபீந்தர் சிங்- ஒருபெரும் படைத் தளபதி எப்படிக் கணிப்பிட்டார்- திட்டம் போட்டார்? என்பதுதான் ஆச்சரியம்.

ஆங்கிலச் சினிமாப் பாணியில் திபீந்தர் சிங் முற்றுகைத் திட்டம் போட்டார். அவரது வீரர்கள் களத்தில் சந்திக்கப்போவது சினிமா வில்லன்களையல்ல; நிஜமான கெரில்லாக்களை என்பதை மட்டும் மறந்து போனார்.

## பரா கொமாண்டோக்கள்

அக்டோபர் 12ம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு எம்-18 ஹெலிக்கொப்டர்கள் நான்கு பலாலி விமானத் தளத்தில் தயாராக நின்றன.

103 பரா கொமாண்டோக்களும் 100 சீக்கிய மெதுரக காலாட் படையினரும் புறப்பட ஆயத்தமாகினர்.

பரா கொமாண்டோக்கள் பிரபாகரனின் முகாமை முற்றுகையிட்டு அவரைக் கைது செய்ய வேண்டும். சீக்கிய காலாட் படையினர் தரையிறங்கிய பகுதியை தற்காலிக தளப் பிரதேசமாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

பிரபாகரனைக் கைதுசெய்து பரா கொமாண்டோக்கள் அழைத்துவந்ததும் ஹெலிக்கொப்டர்கள் தரையிறங்கி படையினரையும், பிரபாகரனையும் ஏற்றிச் செல்லும். அதுவரை தரையிறங்கிய பகுதியைத் தளப்பிரதேசமாக வைத்திருக்கும் பொறுப்பு சீக்கிய படையினருக்குக் கொடுக்கப்பட்டது.

அதிகாலை 1.15க்கு எம்.18 ஹெலிக்கொப்டர்கள் இரண்டில் 70 பரா கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டனர். திருநெல்வேலி வீதியும், பிரவுண் வீதியும் இணையும் சந்திக்கு அருகில் கொக்குவில் கிராம சபைக்கு அருகில் இருந்த வெளியில் அவர்கள் தரையிறங்கினர்.

ஹெலிக்கொப்டர்களின் சத்தங்களைக் கேட்ட புலிகள் உஷாராகிவிட்டனர். புலிகளின் அணிகள் விரைந்து சென்றனர்.

தரையிறக்கத்தில் ஈடுபட்ட ஹெலிக்கொப்டர்களை நோக்கிப் புலிகள் சுடத் தொடங்கினார்கள். இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சூடுபட்டன. சேதத்துடன் திரும்பிப் பறந்தன.

## குதிப்பும்–குறியும்

ஹெலிக்கொப்டர்களை நோக்கி புலிகள் சுடத் தொடங்கியதால் சீக்கிய காலாட் படையினரை ஏற்றிவந்த ஹெலிக்கொப்டரால் அவர்களை பரா கொமாண்டோக்கள் தரையிறங்கிய பகுதியில் இறக்கிவிட முடியவில்லை.

பரா கொமாண்டோக்கள் தரையிறங்கிய பகுதியில் இருந்து 300 யார் தூரத்தில் இருந்த பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு அருகே சீக்கிய காலாட் படையினர் ஹெலியில் இருந்து பாரசூட் மூலம் குதித்துக் கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூன்று மாடிக் கட்டிடத்துக்குள் புலிகள் புகுந்து கொண்டு வசதியாக நிலையெடுத்துப் பதுங்கிக் கொண்டனர்.

பாரசூட் மூலம் குதித்துக் கொண்டிருந்த படையினரை நோக்கி மிக வசதியாக குறிவைத்துச் சுடத் தொடங்கினார்கள்.

ஹெலியில் இருந்து குதித்து தரையைத் தொடமுன்னரே சீக்கிய படைவீரர்கள் பலர் பிணமாகிவிட்டனர்.

புலிகளின் இராணுவ ரீதியான துரித நகர்வுகளுக்கு மிக முக்கிய காரணம் அவர்களிடம் இருந்த தொலைத் தொடர்பு சாதனங்கள்.

துப்பாக்கிகளை வாங்கிச் சேகரிப்பதில் காட்டிய அதேயளவு ஆர்வத்தை தொலைத் தொடர்பு சாதனங்களை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் காட்டினார் பிரபாகரன்.

இப்போதும் தொலைத் தொடர்பு சாதனங்கள் புலிகளுக்குக் கைகொடுத்தன.

வேறு பகுதிகளில் இருந்த புலிகளின் அணிகளுக்கு உடனடியாக தகவல் பறந்தது. மருத்துவ பீடத்தின் மாடிக் கட்டிடத்துக்குள் இருந்து ஒரு அணி தாக்குதல் தொடுத்துக் கொண்டே, ஏனைய அணிகளுக்கு வோக்கியில் தகவல் கொடுத்தது.

விரைந்து சென்ற புலிகளின் அணிகள் பல்கலைக்கழகப் பகுதியை நான்கு புறமும் முற்றுகையிட்டன.

பாரசூட்டில் இருந்து குதித்தபோது சுடப்பட்டு வீழ்ந்தவர்கள் போக, தப்பிக் கொண்ட ஏனைய சீக்கிய படைவீரர்கள் தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டே துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு சீக்கிய படைவீரனும் மண்ணைக் கிண்டி அங்கொரு பாதுகாப்பு அரணை உருவாக்கிக் கொள்ளக்கூடிய சிறிய சவளும், சாக்குப்பையும் வைத்திருந்தனர்.

தரையோடு படுத்திருந்தபடி மண்ணைத் தோண்டிய சீக்கிய வீரர்கள் ஏமாந்து போனார்கள்.

கடினமான தரையமைப்புக் கொண்ட பகுதி என்பதால் மண்ணைத் தோண்டி சாக்கில் போட்டு அரண் செய்து கொள்ள முடியவில்லை.

தாம் இறங்கியுள்ள இடம் எதுவென்றும் புரியவில்லை. தரையமைப்பும் புரியவில்லை. நான்கு புறமிருந்தும் புலிகள் வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு தடவை புலிகள் சுடுவார்கள். "டப்பு டப்பு." உடனே சீக்கிய வீரர்கள் சத்தம் வந்த திசையை நோக்கித் தொடர்ச்சியாகச் சுட்டுத் தள்ளுவார்கள். புலிகளின் துப்பாக்கிகள் அமைதியாக இருக்கும்.

சீக்கியப் படையினர் சற்று ஓய்ந்ததும் புலிகள் மீண்டும் சுட்டுவிட்டு நிறுத்திவிடுவார்கள். மீண்டும் சீக்கியப் படையினர் வேட்டுக்களை சரமாரியாகத் தீர்ப்பார்கள். இப்படியே புலிகள் நாடகத்தைத் தொடர்ந்ததால் சீக்கிய படைவீரர்களின் துப்பாக்கி ரவைகள் தீர்ந்து போய்க்கொண்டிருந்தன.

## தொடர்பு இல்லை

கொக்குவில் கிராம சபைக்கு அருகில் நின்ற பரா கொமாண்டோக்கள் சீக்கிய காலாட் படையினருடன் வோக்கியில் தொடர்பு கொண்டனர்.

"எங்கு இறங்கியுள்ளீர்கள்? இங்கு வாருங்கள்!" என்று தாம் நிற்கும் இடத்தைத் தெரிவித்தனர்.

அவர்களது அழைப்பு சீக்கியப் படையினருக்குக் கிடைத்தால்தானே பதில் சொல்வதற்கு.

அவர்களது கெட்ட நேரமோ என்னவோ, பாரசூட்டில் தரையிறங்கும் போதே சீக்கியப் படையினரின் வானொலித் தொடர்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார். தொலைத் தொடர்புக் கருவியும் சேதமாகிவிட்டது.

சீக்கிய காலாட்படைக்கு தலைமை தாங்கிவந்தவர் மேஜர் பிரேந்தர சிங். மேலும் சீக்கிய படையினர் தரையிறக்கப் படுவர், உதவி கிடைக்கும் என்று அவர் நம்பிக்கொண்டிருந்தார்.

புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக ஏற்கனவே திட்டமிட்டபடி மேலும் துருப்புக்களை தரையிறக்க முடியவில்லை. அத் தகவலை அவருக்குக் தெரிவிக்கவும் தொடர்பு கொள்ள முடியாமல் பலாலியில் இருந்த அதிகாரிகள் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தனர்.

30 சீக்கிய படைவீரர்கள் மட்டுமே தரையிறக்கப்பட்டிருந்தனர்.

கொக்குவிலில் 103 பரா கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் வான் மூல தரையிறக்கம் சாத்தியப் படவில்லை.

நாற்புறமும் சுற்றிவளைக்கப்பட்ட நிலையிலும் சீக்கிய படைவீரர்கள் தீவிரமாக போரிட்டனர்.

துப்பாக்கி ரவைகள் தீர்ந்த நிலையில் துப்பாக்கிக் கத்தியுடன் போரிடத் துணிந்தனரே தவிர, கைகளைத் தூக்கிக் கொண்டு சரணடைய நினைக்கவே இல்லை.

பொழுது சற்று விடியும்வரை சீக்கிய படையினரை புலிகள் முற்றுகையில் வைத்திருந்தனர். அப்படியானால்தான் இனம் கண்டு சுலபமாகத் தாக்க முடியும்.

பொழுது புலர்ந்ததும் புலிகளின் தாக்குதல் தொடர்ந்தது.

சீக்கிய படைவீரர்கள் அனைவரும்- மேஜர் பிரேந்தர சிங் உட்பட- புலிகளை எதிர்த்துத் தாக்கிக் கொண்டே உயிரிழந்தனர்.

இறந்ததுபோல் கிடந்த சில சீக்கிய வீரர்கள் புலிகள் கிட்ட நெருங்கியதும் சட்டென்று எழுந்து துப்பாக்கிக் கத்தியால் தாக்க முற்பட்டனர்.

இறுதியில் காயமடைந்துகிடந்த ஒரு சீக்கிய படைவீரரை புலிகள் கைதுசெய்தனர். ஏனைய 29 படைவீரர்களும் பலியாகினர்.

கொக்குவிலில் நின்ற பரா கொமாண்டோக்கள் வரைபட உதவியோடு பிரபாகரனின் முகாம் இருந்த பகுதியை நோக்கி முன்னேறத் தொடங்கியிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# கிழக்கில் 'ரிவிஜய'வுடன் ஆரம்பமாகியுள்ள 97

## மோதல்களுக்கு மத்தியிலும் சமரசத்தை முன்னெடுக்குமாறு குமார் ரூபசிங்க யோசனை

'ரிவிஜய' என்ற இராணுவ நடவடிக்கையுடனேயே 1997ம் ஆண்டு உதயமாகியுள்ளது. கிழக்கிலங்கைக் காடுகளில் எல்.ரி.ரி.ஈ. நிலைகளை ஊடுருவித்தாக்குவதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகும் என்று பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

கடந்த ஆண்டின் முற்பகுதியில் வடக்கே இராணுவம் குறிப்பிடத்தக்க வெற்றிகள் சிலவற்றை எட்டியிருந்தது. அவ்வெற்றிகளில் யாழ் குடாநாட்டை முற்றுமுழுதாகத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தமை முக்கியமானது.

ஆயினும் கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலும், இறுதிப்பகுதியிலும் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதல்கள் ஆயுதப்படையினரைத் திக்குமுக்காட வைத்திருந்தன. அத்துடன் எல்.ரி.ரி.ஈ.யினரது பலம் தொடர்ந்து கணிசமானதாக இருப்பதையும் வெளிப்படுத்தியிருந்தது.

வடகிழக்குப் பிரதேசமான முல்லைத்தீவில் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதல் இராணுவத்தினரது முகாமொன்றையே முழுமையாக நிர்மூலமாக்கிவிட்டிருந்தது. இங்கிருந்த படையினரில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பெருமளவு பெறுமதிமிக்க ஆயுத தளபாடங்கள் புலிகளால் அள்ளிச் செல்லப்பட்டன.

இதனையடுத்து, வடக்கிலும் கிழக்கிலும் சிறிதும் பெரிதுமாகப் பல தாக்குதல்கள் கடந்த ஆண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாக கடந்த டிசம்பர் மாதம் கிழக்கில் புலுக்குணாவ என்ற இடத்தில் விசேட அதிரடிப்படையினரது முகாமொன்றை நிர்மூலமாக்கி அங்கிருந்த சுமார் 50 படையினரையும் எல்.ரி.ரி.ஈ.யினர் வேட்டையாடியிருந்தனர். தொடர்ந்து கிழக்கில் அதிரடிப்படையினருக்குப் பொறுப்பாகவிருந்த உபாலி சகபந்து என்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.



கிழக்கில் புலுக்குணாவ முகாம்மீதும், அதிரடிப்படைத் தளபதி மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் 'ரிவிஜய' என்ற இராணுவ நடவடிக்கையை கிழக்கில் உதயமாக்கி விட்டிருந்தது.

கடந்த ஆண்டின் ஆரம்பப்பகுதியில் வடக்கே யாழ் குடாநாட்டையும், பின்னர் கிளிநொச்சிப் பிரதேசத்தையும் கைப்பற்றுவதையே ஆயுதப்படையினர் இலக்காகக் கொண்டிருந்தனர்.

இதன் பொருட்டு தமது பலமனைத்தையும் படையினர் வடக்கே ஒன்றுதிரட்டியிருந்தனர். கிழக்கிலிருந்துகூட பெருமளவில் படையினர் வடக்கிற்குக் கொண்டு செல்லப்பட்டு 'ஒப்பரேசன் சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

முதலில் புலிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது; அதன் பின்னர் ஏனையவற்றைக் கவனித்துக் கொள்வது என்ற ரீதியிலேயே ஆயுதப்படையினரது செயற்பாடுகள் விளங்கியிருந்தன.

வடக்கே படையினரைக் கொண்டு சென்று குவிக்கும் விதத்தில் கிழக்கிலிருந்த முகாம்கள் பலவும் வாபஸ் பெறப்பட்டன.

**வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் படையினரைப் பொறுத்தவரை எதிர்பார்த்த வெற்றியை வழங்கியிருந்தது. ஆயினும் அங்கு நீடித்து நிலைத்திருப்பதற்குக் கணிசமானளவில் ஆட்பலம் தேவைப்பட்டிருந்தது.**

கிழக்கிலிருந்து கொண்டுசெல்லப்பட்டவர்கள் தவிர, மேலும் அதிகமானோரைப் படைகளில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் கிழக்கிலங்கையில், ஆயுதப்படையினரது நடமாட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு தொய்வு நிலையே காணப்பட்டது. இத் தொய்வு நிலையை நன்கு சாதகமாகப் பயன்படுத்தியே எல்.ரி.ரி.ஈ.யினர் கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலும், இறுதிப்பகுதியிலும் கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்கள் சிலவற்றை மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்தே கிழக்கில் தம்மை மீண்டும் பலப்படுத்தும் வகையில் ஆயுதப்படையினர் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் 'ரிவிஜய' இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியிருந்தனர்.

1994ம் ஆண்டில் சந்திரிகா அரசு பதவிக்கு வந்தது.

தொடர்ந்து 1995ம், 1996ம் ஆண்டுகள் பெரிதும் மோதல்கள் நிறைந்தவையாகவே இருந்தன.

இராணுவரீதியாகவே தம்மைப் பெரிதும் கட்டி எழுப்பியிருந்த எல்.ரி.ரி.ஈ.யினரின் பலத்தை நசுக்கி தமது கையை மேலோங்கச் செய்வதே சந்திரிகா அரசின் நோக்கமாக இருந்துள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினரது கோட்டையாகவும், தளமாகவுமிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு, கிளிநொச்சி என்பவற்றைக் கைப்பற்றியதன் மூலம் சந்திரிகா அரசு புலிகளை வெகுதூரம் விரட்டியிருக்கலாம். ஆனால் அதன் மூலம் ஒரு முற்றுமுழுதான சுமுகநிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கொள்வதற்கில்லை.

கடந்த வாரங்களில் லண்டனை மையமாகக் கொண்ட 'இண்டர்நஷனல் அலேர்ட்' ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமான கலாநிதி குமார் ரூபசிங்க கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

கலாநிதி குமார் ரூபசிங்க, எல்.ரி.ரி.ஈ.க்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விதத்தில் ஒரு மத்தியஸ்தராகவே வந்துள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் அப்படி எதுவுமே இடம்பெறவில்லை. இருந்தபோதிலும் கலாநிதி குமார் ரூபசிங்க, இலங்கையில் தாம் தங்கியிருந்த நாட்களில் கூறிவிட்டுச் சென்ற கருத்துக்கள் நன்கு கவனத்திலெடுக்கப்பட வேண்டியவையாகவே இருந்தன.

'இண்டர்நஷனல் அலேர்ட்' ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் என்ற வகையில் உலகின் பல்வேறு முக்கிய சர்ச்சைகள் குறித்தும் உன்னிப்பாக நோட்டமிடும் வாய்ப்புகள் அவருக்குக் கிடைத்திருந்தன.

சர்வதேச அரசியல் சர்ச்சைகளின் தன்மைகள், அவற்றைத் தீர்த்துவைப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறைகள் என்பவை பற்றியும் தமது இலங்கை விஜயத்தின்போது வழங்கிய பேட்டிகள், கருத்துக் கண்ணோட்டங்களில் கலாநிதி குமார் ரூபசிங்க குறிப்பிட்டிருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து வட அயர்லாந்துக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை அனுப்பிவைத்து அங்கேயுள்ள நிலைமைகளை பிரிட்டிஷ் அரசு கையாளும் விதம் பற்றி அறியச்செய்வதில் கலாநிதி குமார் ரூபசிங்க தமது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

**சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற வேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது. இந்த அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகாகூட முன்பு பெரிதும் உணர்ந்தவராக இருந்தார். ஆனால் தற்போது எல்.ரி.ரி.ஈ. அமைப்பும் சந்திரிகா அரசாங்கமும், பேச்சுக்கள் என்ற விடயத்தை 'வேப்பங்காயாகவே' கருதிவருகின்றன.**

இவ்விரு சாராருக்குமிடையே எட்டப்படுகின்ற உடன்பாட்டின் அடிப்படையிலேயே சமரசத்தீர்வொன்றை எட்டமுடியுமென்பது உறுதியாகியுள்ளது!

ஆனால் நிபந்தனைகள், கௌரவப் பிரச்சினைகள் என்று இருதரப்புமே சமரசத்துக்கான சூழ்நிலையொன்றைச் சரிவரக் கட்டியெழுப்ப முடியாதவையாகவே உள்ளன.

இத்தகைய தருணத்திலேயே டாக்டர் குமார் ரூபசிங்க கூறியவை அரசியல் அவதானிகளின் கவனத்தைப் பெற்றவையாகவுள்ளன.

**இலங்கையின் இன்றைய வடக்கு-கிழக்குப் பிரச்சினையை எடுத்து நோக்கும்போது, அதனை உளசுத்தியோடு நிதானமான முறையில் தீர்த்துவைப்பதற்கு எவருமே முன்வராத நிலையே காணப்படுகின்றது.**

ஆரம்பத்தில் அரசியல் பிரச்சினையாகவே இருந்த வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சினையைக்கூட நேர்மையாகத் தீர்த்து வைப்பதற்கு அன்றைய அரசியல் வாதிகள் தவறியிருந்தனர்.

தற்போது ஆயுதமுனைப்போடு கூடிய ஓர் அரசியல் பிரச்சினையாகவே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினை இருக்கின்றது.

இத்தகைய தன்மை கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக எண்ணிலடங்காத அழிவுகளைத் தந்திருக்கின்றது.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையை இறுதியும், முடிவுமாகத் தீர்த்து வைத்து ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதில் ஆட்சியாளர்கள் அருகதையற்றவர்களாக இருக்கின்றனர்.

டாக்டர் குமார் ரூபசிங்க இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைத்தீர்வு முயற்சிகள் குறித்து நடைமுறைச் சாத்தியமான கருத்துக்கள் பலவற்றைத் தெரிவித்திருந்தார்.

அவர் இவற்றை வெறுமனே குறிப்பிடவில்லை; நீண்டகால உள்நாட்டு யுத்தங்களைக் கொண்டிருந்த நாடுகள் பலவற்றில் கையாளப்பட்ட அணுகுமுறைகளை உதாரணம் காட்டியே தமது கருத்துக்களை டாக்டர் குமார் ரூபசிங்க கூறியிருந்தார்.

**'பேச்சுவார்த்தைக்கான சூழல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு போர் நிறுத்தத்தை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை.'**

**'மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே சமரசப்பேச்சுக்களுக்கான தொடர்புகளை மேற்கொள்ளலாம். அத்துடன் பேச்சுக்களையும் நடத்தலாம்.'**

**'எடுத்த எடுப்பிலேயே தேசங்களையோ அல்லது, பிரபலமான இராஜதந்திர மத்தியஸ்தங்களையோ சமரசத்தீர்வு முயற்சிகளில் எதிர்பார்க்கலாகாது. சிறியளவில் படிப்படியாக தனிநபர் மத்தியஸ்தம் மூலம் தொடர்புகளை ஆரம்பித்து பின்னர் விரிவான முறையில் தீர்வு முயற்சிகளை மேற்கொள்வது.'**

**'சமரச முயற்சிகள் குறித்து ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருமித்த நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது. வடக்கு-கிழக்குப் பிரச்சினையை ஒரு பொதுவான தேசியப் பிரச்சினையாகக் கருதி, குறுகிய அரசியல் லாபங்களுக்கு இடந்தராது அதனைத் தீர்த்து வைக்க முன்வருவது.'**

மேற்குறிப்பிட்டவையே டாக்டர் குமார் ரூபசிங்க குறிப்பிட்ட சில கருத்துக் கண்ணோட்டங்களாக இருந்தன.

ரஷ்ய- செச்சினிய சர்ச்சையையும் அவர் உதாரணம் காட்டியிருந்தார். 1994ம் ஆண்டு ரஷ்யா தனது பெரும் படைபலத்துடன் செச்சினியாவிற்குள் ஊடுருவி அதனைத் துவம்சம் செய்து தனது ஆளுமையை நிலைநாட்ட முற்பட்டது.

**ஆனால் செச்சினியாவில் இருந்து பின்வாங்கிய கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தம்மைப் பலப்படுத்தி, ரஷ்யப்படைகளை பலமாக எதிர்த்து நின்றார்கள். இதன்காரணமாக கடந்த ஆண்டு நவம்பரில் ரஷ்யா தனது படையை முழு அளவில் செச்சினியாவிலிருந்து வாபஸ் பெற்று அரசியல் உடன்பாடொன்றுக்கு வந்திருந்தது, என்று டாக்டர் ரூபசிங்க தெரிவித்திருந்தார்.**

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவரீதியாகத் தீர்வொன்றைக் காண்பது இயலாத காரியம் என்பதையும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார்.

எனவே வடக்கு-கிழக்கில் இராணுவ பலத்தை வைத்துக் கொண்டு அரசு கொண்டுவர உத்தேசிக்கும் அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய தீர்வுத்திட்டம் தகுந்த அரசியல் அணுகுமுறைகளின்றி வெற்றிபெறப் போவதில்லை என்பது திண்ணம்.

போர்நிறுத்தம், ஆயுதக்கையளிப்பு என்பன சாத்தியமாகாவிட்டால் இராணுவ நடவடிக்கையைத் தொடரவே இருதரப்பினரும் எண்ணுவர்.



குமார் ரூபசிங்க

**ஆனால் ஒரு சமரச முயற்சிக்கு போர்நிறுத்தமோ அல்லது ஆயுதக்கையளிப்போ அவசியமில்லை. அவற்றின் மத்தியிலேயே சமரசத்தை எட்டுவதற்கான சூழலை ஏற்படுத்தலாம்,** என்று டாக்டர் குமார் ரூபசிங்க கூறியது இலங்கையின் இன்றைய அரசியலில் ஒரு புதிய கருத்துக்கண்ணோட்டமாகவே இருக்கின்றது.

போர்நிறுத்தம், மற்றும் ஆயுதக்கையளிப்பு என்பன சாத்தியப்படாத பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அணுகுமுறையைப் பரிசீலிக்கலாமென்றே எண்ணத் தோன்றுகின்றது.

---

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எட்டாக் கனி?

ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்திய விஜயம் தொடர்பாக இரு நாட்டு அரசுகளுக்கும் பூரண திருப்தி.

ஜனாதிபதியின் அதிகாரப்பரவலாக்கல் யோசனையை தேவ கவுடா வரவேற்றுள்ளார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தற்போதைக்கு அவசியம் இல்லையென்றும் இந்தியத் தரப்பு கூறியிருக்கிறதாம்.

"எங்களுக்கிடையில் எந்த ஒரு விடயத்திலும் கருத்து வேறுபாடு இருக்கவில்லை. இருதரப்பு உறவுகள் சுமுகமானவையும், நல்லுறவு நிறைந்தவையாகவுமே உள்ளன" என்று சொல்லியிருக்கிறார் இந்திய வெளிநாட்டு அமைச்சர்.

சுமுகமான உறவு நிலவுவதாக கூறுவது சம்பிரதாயமான ஒரு வார்த்தையாகக் கொள்ளப்படலாம். ஆனால், "எந்த ஒரு விடயத்திலும் கருத்து வேறுபாடு இருக்கவில்லை" என்று கூறுவது சம்பிரதாயத்துக்கு கூறப்படும் வார்த்தையல்ல.

பாகிஸ்தான் ஜனாதிபதியுடன் பேசிவிட்டு அப்படியான ஒரு கருத்தை இந்திய வெளிநாட்டமைச்சர் கூறமுடியாது. அப்படிக் கூறினால் அவர் பதவியில் நீடிக்கவும் முடியாது.

அதேபோல, இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியா தலையிட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் இப்படியான ஒரு கருத்தைக் கூறியதும் கிடையாது.

எனவே- இலங்கை அரசாங்கத்தின் இன்றைய அணுகுமுறைகளுக்கு ஆதரவளிப்பதும், நட்பு நாடு என்ற வகையில் உதவுவதும் தான் இந்திய அரசின் இன்றைய வெளிநாட்டுக் கொள்கை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.



"இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைத்துள்ளோம். புலிகளை வெற்றி கொள்ள இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்" என்பதுதான் அரசாங்கம் வெளியுலகுக்கு சொல்லும் செய்தி.

அந்தச் செய்தியை இந்திய அரசும் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது மீண்டும் ஒருமுறை அதனை உறுதிசெய்திருக்கிறது இந்திய அரசு.

இந்தியாவின் பிரபல ஆங்கிலத் தினசரி 'இந்து'. 'இந்து' பத்திரிகைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் ராம்.

ஒரு காலத்தில் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்த ராம், ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் புலிகளின் அதிதீவிர எதிர்ப்பாளராக மாறிவிட்டார்.

ராம் ஆசிரியராக இருக்கும் 'புரொன்ட் லைன்' சஞ்சிகையில்தான் கடந்த ஆண்டு ஜனாதிபதியின் பேட்டி ஒன்றும் வெளியாகி இருந்தது. முழுக்க, முழுக்க ஜனாதிபதியின் இமேஜை உயர்த்துவதாகவும், வெளியுலகில் புலிகளின் பிரசாரங்களுக்கு பதிலடி கொடுப்பதாகவுமே அப்பேட்டி பிரசுரமாகியிருந்தது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை அடுத்து 'இந்து' பத்திரிகை சிறப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து மகிழ்ச்சியும் வெளியிட்டுள்ளது.

"இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையே நட்புறவு தொடர்பான புதுப்பிக்கப்பட்ட உத்தரவாதத்தையும் ஜனாதிபதி சந்திரிக்கா பெற்றுக் கொண்டார்" என்று தெரிவித்துள்ளது 'இந்து'.

97ல் அரசாங்கம் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் தனது இராணுவ பலத்தை மேலோங்கச் செய்வதற்கான மறைமுக ஆசிர்வாதம் இந்தியாவிடம் இருந்து பெறப்பட்டுவிட்டது.

1986களுக்கு முன்னர் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு குறுக்கீடாக இருந்த இந்தியாவிடம் இப்போது இராணுவ நடவடிக்கைகளை தொடரும் முடிவுக்கு வாழ்த்துப் பெற்றுக்கொண்டு திரும்பியிருக்கிறார் ஜனாதிபதி.

இந்நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேள்விக்குறியாகிவிட்டது.

இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாது. இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதுதான் இந்தியாவின் கொள்கை.

பொது எதிரியாக புலிகளை கணித்து இருநாட்டு அரசுகளும் கைகோர்த்து நிற்கின்றன. இந்நிலையில் இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய இந்தியா முன்வரப் போவதில்லை. இலங்கை இனப்பிரச்சனையை இலங்கை அரசே தீர்த்துக் கொள்ளலாம். அதற்கு முழு ஆதரவு என்பதுதான் இந்திய நிலைப்பாடு.

இந்த ஆதரவு நிலைமையை தக்கவைத்துக் கொண்டு போரில் வெற்றிபெறுவதே இலங்கை அரசின் உடனடி நிலைப்பாடு.

இந் நிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருவதை இலங்கை அரசும் விரும்பாது. தான் ஒதுங்கி நிற்கும் போது வேறு ஒரு நாடு இங்கு தலையிட்டு மத்தியஸ்தம் செய்வதை இந்தியாவும் விரும்பாது.

எனவே- 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' தற்போதைக்கு எட்டாக்கனிதான்!



படிப்பகம்

www.padippakam.com

தருவது 26 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

**கடந்தவாரம்**

**பூலான் தேவியைக் கடத்திய கொள்ளைக் கோஷ்டித் தலைவன் பாபுசிங் குஜார் பூலானுடன் உறவு கொள்கிறான். தடுக்க முற்பட்ட விக்கிரம் மல்லாவை குஜார் கொல்ல முற்பட பூலான் தடுத்து குஜாரின் விருப்பத்துக்கு இசைகிறாள். விக்கிரம் மல்லாவை காப்பாற்றி குஜாரை தந்திரத்தால் வெல்ல நினைக்கிறாள் பூலான்.**

**இனி..**

களைத்துப்போன பாபுசிங் குஜார் கால்களை அகட்டிக்கொண்டு மல்லாந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அவன் தூங்குவதைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இப்படியே கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று தோன்றியது.

ஆனால் அது முடியாது என்பது எனக்குத் தெரியும். பாபுசிங் குஜார் வலுவானவன். முரடன். என்னோடும் முரட்டுத்தனமாகத்தான் நடந்துகொண்டான், பரட்டைத்தலை நாய்.

எலும்பு எலும்பாக முறித்துப் போட்டது போல உடம்பு முழுக்க வலித்தது. எதிரியுடன் கட்டிப்புரண்டு சண்டை செய்யும் மூர்க்கத்தனத்துடன் நடந்து கொண்டான்.

எல்லாம் முடிந்த பிறகு பெரிதாக மூச்சு விட்டுக்கொண்டு, "என்னடி! என்னை பிடித்திருக்கிறதா?" என்று இளித்தான்.

"ம்..ம்." என்றேன். என் தாடையைத் தொட்டு நிமிர்த்தி முறைத்துக்கொண்டே, "உண்மையைச் சொல்லடி! பிடித்திருக்கிறதா? சொல்லடி பிடித்திருக்கிறதா?" என்றான்.

"உண்மையாகத்தான்" என்றேன் உள்ளே விம்மிய வெறுப்பை மறைத்துக் கொண்டு.

"அதுதான், அதேதான், பாபுசிங் குஜாருக்காக எத்தனை சிறுக்கிகள் காத்திருக்கிறார்கள் தெரியுமாடி?"

'இருந்தால் போய் புரளவேண்டியது தானே, என்னை ஏனடா பிடித்துவந்தாய் பரதேசி நாயே!' என்று நினைத்துக்கொண்டேன். கேட்கவில்லை.

"காலைப் பிடித்துவிடு! நான் தூங்க வேண்டும்!" என்றான். கால்களையும், கைகளையும் விரித்துக்கொண்டு மல்லாந்து படுத்தான்.

பிடித்துவிட்டேன். "பழகிப்போய் விட்டது. எவளாவது ஒரு சிறுக்கி கால் பிடித்துவிட்டால்தான் தூக்கமே வருகிறது. எல்லா இடமும் பிடித்துவிடு. மேலே இன்னும் இன்னும் மேலே.." கொஞ்ச நேரத்தில் குறட்டைச் சத்தம்தான் கேட்டது.

எனக்கு விக்கிரம் மல்லாவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. பாபுசிங் குஜார் என்மேல் பரவியபோதும் நான் விக்கிரம் மல்லாவைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த நினைப்பில்தான் பாபுசிங் குஜாரை சகித்துக் கொண்டிருந்தேன்.

பாபுசிங் குஜார் என்னைப் பாடாய் படுத்தியபோது 'மல்லா..... மல்லா......' என்றுதான் அவனுக்குக் கேட்காமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தேன்.

விக்கிரம் மல்லா என் மனதில் முழுதாக ஆக்கிரமித்திருந்தான். இதற்கு முன்னர் எந்தவொரு ஆண்மகனும் எனக்குள் இப்படி நிறைந்ததில்லை; என் மனதை நிரப்பியதில்லை.

விக்கிரம் மல்லா இப்போது என்ன செய்து கொண்டிருப்பான். என்னைப்பற்றி அவனும் நினைத்துக் கொண்டிருப்பானா?

இறுதியாக என்மீது ஒரு பார்வையை வீசிவிட்டுப் போனானே, அதற்கு என்ன அர்த்தம்? பரிவா? பாசமா? சே.. நீயும் ஒரு பெண்ணா என்ற வெறுப்பா?

இந்த உலகத்தில் என்னை யார் வேண்டுமானாலும் வெறுக்கட்டும், என் விக்கிரம் மல்லாமட்டும் வெறுக்கக்கூடாது.

அவனுக்காக, அவன் உயிருக்கு விலையாகத்தான் இந்தப் பரதேசி நாயிடம் என் உடலை விட்டுக்கொடுத்தேன் என்பதை மல்லா புரிந்து கொண்டிருப்பானா?

புரிந்துகொள்கிறானோ இல்லையோ, அவனுக்காக நான் ஒரு உதவி செய்து விட்டேன், அவன் உயிரைக் காப்பாற்றி விட்டேன் என்பதே எனக்கு நிறைவாக இருந்தது.

இல்லையில்லை, நான் என்ன பெரிசாகச் செய்துவிட்டேன். எனக்காக பிரதியுபகாரமே எதிர்பாராமல் பாபுசிங் குஜாரை தடுக்க வந்தானே! சாகவும் தயாராக நின்றானே...! அது எத்தனை பெரிய காரியம்? அதற்கு முன்னால் நான் செய்ததெல்லாம் தூசிக்குச் சமானம்.

தூக்கம் கண்களைச் சுழற்றியது. விக்கிரம் மல்லாவின் நினைப்பும் தூக்கமும் மல்லுக்கு நின்றன. இறுதியில் தூக்கம்தான் வென்றது.

ஒரே அசதி. உடம்புக்கும் கட்டாய ஓய்வு தேவைப்பட்டதுபோலும். நன்றாக விடிந்து சூரிய வெளிச்சம் உடம்பில் பட்டுச் சுட்டபோதுதான் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தேன். பக்கத்தில் பாபுசிங் குஜார் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். சோம்பேறிக் கழுதை.

'குடிக்க வேண்டியது, யார் குடியை யாவது கெடுக்க வேண்டியது, அட்டை மாதிரிச் சுருண்டு தூங்க வேண்டியது, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் தூங்கப் போகிறாய்? பார்க்கத்தானே போகிறேன்!'

வெளியே வந்து பார்த்தேன். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று பேர் மட்டும் துப்பாக்கியோடு காவலுக்கு இருந்தார்கள்.

என்னைக் கண்டதும் அவர்களில் ஒருத்தன் ஒருமாதிரியாகப் பார்த்தான். அவன் பார்வைக்கு என்ன அர்த்தம் என்பது எனக்குத் தெரியும்.

இரவு முழுக்க நானும் பாபுசிங் குஜாரும் தனியே இருந்திருக்கிறோம் என்றால் என்ன நடந்திருக்கும் என்று ஊகிக்க அவனுக்கு புத்திசாலித்தனம் எதுவும் தேவையில்லை.

நான் விக்கிரம் மல்லாவைத் தேடினேன். என் பார்வைக்கு எட்டக்கூடிய இடங்களில் அவனைக் காணவில்லை.

சட்டென்று எனக்குள் என் நம்பிக்கைகள் முறிந்தது போல அந்தரமாக இருந்தது. ஒருவேளை விக்கிரம் மல்லா இந்தக் கூட்டத்தைவிட்டே போய் இருப்பானோ?

எனக்குப் பொத்துக்கொண்டு அழுகை வந்துவிடும்போல இருந்தது.

யாரிடமாவது கேட்கலாம் என்றால் அதற்கும் தயக்கமாக இருந்தது.

விக்கிரம் மல்லாவை நான விசாரித்தது தெரிந்தால் பாபுசிங் குஜாருக்கு சந்தேகம் வந்துவிடும். விக்கிரம் மல்லாவைக் கொன்று போட்டுவிடுவான். அதனால் யாரிடமும் நான் கேட்கவில்லை.

அன்று மதிய உணவைத் தயாரிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தான் பாபுசிங் குஜார்.

அவர்கள் இருபதுபேர் வரை இருந்தார்கள். நான் தனியாகச் சமைத்துப் போட வேண்டும். வீட்டில் ஒருநாள்கூட நான் தனியாகச் சமைத்தது கிடையாது.

அம்மா முடியாமல் படுத்திருந்தால்கூட தம்பி சிவநாரயணனோ, தங்கைகளோ கூடமாட ஒத்தாசை செய்வார்கள். அப்படிச் செய்யாமல் இருந்தால் எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். நாலு சாத்து சாத்திவிடுவேன். அந்தப் பயத்திலேயே ஓடியாடி ஒத்தாசை செய்வார்கள்.

இப்போது 20 கழுதைகளுக்கு, இல்லை யில்லை 19 கழுதைகளுக்கு தனியாளாக சமைத்தேன். விக்கிரம் மல்லாவையும் சேர்த்தால்தான் 20பேர்.

மல்லாவும் சாப்பிடப்போகிறான் என்றால் அவனுக்காக 40 கழுதைகளுக்கும் தனியாளாக சமைத்துப் போடலாம். மல்லா.. மல்லா... எங்கே போனான்?

சமையல் வேலை பாதியில் இருந்த போதுதான் மல்லா... என் விக்கிரம் மல்லா என் பார்வையில் பட்டான். 'அப்பாடா' என்றிருந்தது.

அதுவரை சலிப்போடு சமையல் செய்து கொண்டிருந்தவள், அவனைக் கண்டதும் தான் சுறுசுறுப்பாக செய்யத் தொடங்கினேன்.

குழம்பை நாவில் விட்டு ருசி பார்த்தேன். சோறு பதமாக வந்திருக்கிறதா என்று பார்த்தேன். விக்கிரம் மல்லா சாப்பிடப்போகிறான். நான் சமைப்பது இந்தக் கழுதைகளுக்காக அல்ல, என் விக்கிரம் மல்லாவுக்காக.

என்னை நினைத்துக் கொண்டே சாப்பிட வேண்டும். பாவம் மல்லா! வாய்க்கு ருசியாக சாப்பிட்டு எத்தனை நாட்கள் இருக்குமோ? யாருக்குத் தெரியும்.

எல்லோரும் ருசித்து ருசித்து சாப்பிட்டார்கள். விக்கிரம் மல்லாவுக்கு ஒரு தட்டில் சாப்பாடு எடுத்துக் கொண்டுபோய் ஒருத்தன் கொடுத்தான். விக்கிரம் மல்லாவுக்காகத்தான் என்று தெரிந்திருந்தால் குழம்பு கொஞ்சம் கூடுதலாகவே விட்டிருப்பேன்.

தட்டைக் கழுவிக் கொண்டுவந்து வைக்கும் போது என்மீது ஒரு நொடி மட்டும் விக்கிரம் மல்லாவின் பார்வைபட்டு விலகியது.

சுத்த மரக்கட்டை. 'கொள்ளைக் கோஷ்டியில் சாமியார்களும் இருக்கிறார்களா?' என்று மல்லாவிடமே கேட்டுவிடவேண்டும். நினைக்கச் சிரிப்பாக இருந்தது.

இரவு பாபுசிங் குஜார்தான் சொன்னான், "உன் கைபட்டால் எல்லாமே பிரமாதம்தான்!" என் கையைப் பிடித்து தன் மூக்கருகே வைத்து முகர்ந்து பார்த்தான்.

"வாசனையாகத்தான் இருக்கிறது. வாடி, இப்படி பக்கத்தில் இரு!" இழுத்து இருத்திக் கொண்டான்.

"கையில் மட்டும்தான் வாசனையா?" என்று கட்டிப்பிடித்துக் கொண்டான். கழுத்தில் முகர்ந்து பார்த்தான்.

"குடிக்காமலேயே வெறிக்கும் போல் இருக்கிறதடி.. உன்னைத் தொட்டால் குடிக்கவே முடியாது. அதனால் முதலில் குடித்து விடுகிறேன் என்ன...' என்னைத் தன் பிடியில் இருந்து விடுவித்துவிட்டு குடிக்க ஆரம்பித்தான்.

அப்போதுதான் எனக்கு அந்த யோசனை தோன்றியது. மூக்கு முட்ட குடிக்க வைத்துவிட்டால் மூதேவி சுருண்டு தூங்கி விடுவான். தொல்லையே இருக்காது.

தந்திரத்தாலே இவனை வெல்ல வேண்டும். இப்போதே ஆரம்பித்துவிடவேண்டியது தான்.

நான் எழுந்து போத்தலில் இருந்த சாராயத்தை அவனது கோப்பையில் ஊற்றிக் கொடுத்தேன்.

கோப்பையில் ஊற்றுவதற்காக குனிந்த போது என் முந்தானை நழுவியது. நான் அதைச் சரிசெய்யவில்லை.

பாபுசிங் குஜார் முறைத்தான். முறைத்து முறைத்துப் பார்த்தான்.



பூலான்

"பூலான்... இப்படி வந்து இரு" என்று தன் மடியைக் காட்டினான்.

"இவ்வளவுதானா?" என்றேன்.

"என்ன..?"

"இதற்கு மேல் குடித்தால் தாங்க மாட்டீர்களா?" என்றேன்.

"நீ மடியில் இருந்து ஊற்றிக் கொடு. மடமடவென்று முழுசாய் நாலு போத்தலை காலி செய்து காட்டுகிறேன். இந்த பாபுசிங் குஜார் நாற்பது போத்தல் உள்ளே போனாலும் தாக்குப் பிடிப்பான், வா,வந்து குந்து!" என தன் தொடையைத் தட்டிக் காட்டினான்.

நான் சென்று அவன் மடியில் அமர்ந்தேன். "பஞ்சு மூட்டை மாதிரி இருக்கிறாய்!" என்றான்.

"ஊற்றித்தரவா?" என்றேன் கெஞ்சலாக. எனக்கும் நடிக்க வருகிறதே என்று நினைக்க என் நடிப்பை அந்தக் கழுதை நம்புவதைப் பார்க்கச் சிரிப்புத்தான் வந்தது.

தொடையில் கிள்ளினான், "ஊற்றித்தா, இந்த பாபுசிங் குஜாரின் பலத்தை இன்றுதான் நீ பார்க்கப் போகிறாய்!" தனது ஒருகையால் என் இடுப்பை வளைத்துக் கொண்டான்.

அவன் குடித்துக் கொண்டிருக்க, நான் அவன் பரட்டைத்தலையை விரல்களால் கோதி விட்டேன். நெஞ்சை நீவி விட்டேன். பாபுசிங் குஜாருக்கு என் செய்கை பிடித்திருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அவன் கண்கள் சுருங்கிக் கொண்டிருந்தன. நான் அவன் மடியில் இருந்து எழுந்து கொண்டேன்.

"போகா.. போகா...போகாதே...." என்று உளறியபடி என் கைகளைப் பிடித்து இழுத்தபடி பின்னால் சரிந்தான்.

நான் அவன்மேல் அப்படியே சரிந்தேன். கொஞ்சநேரம் அப்படியே அசையாமல் கிடந்தேன். மெல்ல மெல்ல பாபுசிங் குஜார் ஒரு செத்த பிணம்போல தூங்கிப் போனான்.

நான் எழுந்துகொண்டேன். என் தந்திரத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுதான். ஆனால் இது ஆரம்பம் மட்டும்தான்.

பூனைபோல நடந்துவந்து வெளியே எட்டிப்பார்த்தேன். துப்பாக்கியோடு காவலுக்கு நின்றவன் முதுகைக் காட்டியபடி மறுபுறம் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் விக்கிரம் மல்லாவைத் தேடினேன்.

துப்பாக்கியை மடியில் வைத்துக் கொண்டு எதிரே இருந்த மரத்தில் சாய்ந்தபடி அமர்ந்து எங்கோ நோக்கிக் கொண்டிருந்தான் மல்லா.

காவலுக்கு நின்றவனைப் பார்த்தேன். அவன் இப்போதும் வேறுபுறம்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் திரும்புவதற்கிடையில் விக்கிரம் மல்லாவிடம் போய் விடவேண்டும்.

மெல்ல மெல்ல பூனைபோல நடந்து விக்கிரம் மல்லா இருந்த இடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினேன்.

நெஞ்சுக் கூட்டுக்குள் திக், திக் என்று துடிப்புக் கேட்டது.

நாலாவது அடி எடுத்து வைத்திருக்க மாட்டேன்.

"நில்லடி! பிடியுங்கடா அவளை!" என்று என்பின்னால் கேட்டது குரல்.

'ஐயோ துர்க்கையம்மா! அது. அது.. பாபுசிங் குஜாரின் குரல் போல் இருந்தது.

அவன்தான் எழுந்திருக்கவே முடியாதே. குரல் கேட்டதும் மரத்தில் சாய்ந்திருந்த விக்கிரம் மல்லா தன் துப்பாக்கியுடன் துள்ளி எழுந்தது தெரிந்தது.

நான் திக்கித்துப்போய் திரும்பிப் பார்த்தேன்.

அங்கே... அங்கே..

பாபுசிங் குஜார் ஒரு பேயைப்போல-- இராட்சதன்போல என்னையே பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

அடுத்து அவன் வாயிலிருந்து வந்தது ஆபத்து. **(தொடர்ந்து வரும்)**

---

## பூலானுக்கு மீண்டும் சிறை?

"பூலான்தேவியை மீண்டும் கைது செய்து சிறையில் போடவேண்டும்!" என்று அவரது எதிரிகள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

பூலான்தேவி குற்றம் சாட்டப்பட்டுள்ள 54 கொலை வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றன.

கொலை வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்கும்படி பூலான்தேவி சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

"கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற பயங்கரக் குற்றங்களைச் செய்தவர் பூலான்தேவி. அவரது வழக்குகளை தள்ளுபடி செய்யக்கூடாது!" என்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் கான்பூர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனை அடுத்தே உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார் பூலான்தேவி. ஆனால் உச்சநீதிமன்றம் மனுவை நிராகரித்துவிட்டது.

அதன்பின்னரே பூலானைக் கைது செய்ய வேண்டும். அவர் செய்த கொலைகளுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்று அவரது எதிரிகள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

உத்தரப்பிரதேச முதல்வராக முலாயம் சிங் யாதவ் இருந்தபோது, அவருக்கும் பூலான்தேவிக்கும் நெருக்கம் இருந்தது. அரசு உத்தரவு மூலமாக பூலான்மீதான பல வழக்குகளை வாபஸ் பெறச் செய்தார் முலாயம் சிங் யாதவ்.

ஆனால் இப்போது உச்சநீதிமன்றம் பூலானின் மனுவை நிராகரித்திருப்பதால் பூலான்தேவி கைது செய்யப்படலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பூலான்தேவியின் கதை ஃபிரஞ்சு மொழியில் வெளியாகியுள்ளது. 'நான்தான் பூலான்தேவி' என்ற பெயரில் வெளியாகியுள்ள அந்தப் புத்தகத்தை வெளியிட்டுவைக்க ஃபிரான்சுக்குச் சென்றார் பூலான்தேவி.



சில புத்தகங்களில் பூலான் ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டுத் தந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்பினார்களாம் புத்தக வெளியீட்டாளர்கள். பூலானுக்கு கையொப்பம் போடத் தெரியாது என்பது பின்னர் தான் தெரிந்தது.

ஃபிரஞ்சு மொழியில் புத்தகம் வெளியான உடனேயே பயங்கர விற்பனை. மறுபதிப்பும் வெளியிடப் போகிறார்கள்.

ஃபிரஞ்சு மக்களையும் கொள்ளை ராணி கவர்ந்துவிட்டார்.

---

## வீரப்பனின் நிபந்தனைகள்

சந்தனக் கடத்தல் வீரப்பன் மீண்டும் தமிழகப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் இடம்பிடிக்கத் தொடங்கியிருக்கிறான்.

ஜெயலலிதா-சசிகலா கூட்டணியின் அமோக வேட்டைச் செய்திகள் மத்தியில் வீரப்பன் விவகாரம் அமுங்கிப்போயிருந்தது.

"ஜெயலலிதா-சசிகலா முன்னாள் சந்தனக் கடத்தல் வீரப்பன் எம்மாத்திரம்?" என்ற பொலிசாரும், மக்களும் அவனை மறந்து போயிருந்தார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் 28ம் திகதி வீரப்பன் ஒரு கசட் அனுப்பியிருக்கிறான். 'நக்கீரன்' வார இதழ் ஆசிரியர் கோபால் காட்டுக்குச் சென்று வீரப்பனைச் சந்தித்தார். அவரிடம் ஒரு கசட்டைக் கொடுத்து, கருணாநிதியிடம் சேர்ப்பிக்குமாறு சொன்னான் வீரப்பன்.

இப்போது அந்தக் கசட் கருணாநிதியின் கையில் இருக்கிறது. கசட்டில் வீரப்பன் தனது குரலில் பேசியிருக்கிறான். அவன் பேசியுள்ள விபரங்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவையும் வீரப்பன் தனது பேச்சில் திட்டித் தீர்த்திருக்கிறான். அதனாலோ என்னவோ வீரப்பன் பேச்சை மகிழ்ச்சியோடு வெளியாக்கிவிட்டது தமிழக அரசு.

தமிழக முதல்வரிடம் தான் சரணடையும் ஆசையை தெரிவித்திருக்கிறான் வீரப்பன். 'அடடே பணிந்துவிட்டானாக்கும், பயந்து விட்டானாக்கும்' என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை.

ஏதோ பெரிய விடுதலை இயக்கத் தலைவன்போல நிபந்தனைகளை அடுக்கியிருக்கிறான் வீரப்பன். நிபந்தனைகள் இவைதான்:

1. எனக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும். அதனை ஜனாதிபதிதான் வழங்க வேண்டும்.
2. பாதிக்கப்பட்ட என் மக்களுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்கவேண்டும்.
3. என்னுடன் கூட இருப்பவர்கள் சரணடைந்தபின்னர் வாழ்க்கை நடத்த ஒவ்வொருவருக்கும் ரூபா 50 இலட்சம் கொடுக்க வேண்டும்.
4. எந்த வழக்கும் இருக்கக்கூடாது. பொது மன்னிப்புத் தரப்படவேண்டும்.



5. பொது மன்னிப்புக்கான பேச்சுவார்த்தை முடியும்வரை பொலிஸ் படைகள் காட்டுக்குள் வரக்கூடாது. நானும் பொலிசைத் தாக்கமாட்டேன்.
6. நான் வழிபடும் தந்தங்களையும், என் கூட்டாளிகள் அணிந்துள்ள தந்தங்களையும் அப்படியே வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.
7. எனது குடும்பப் பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்க வேண்டும். அகில இந்திய அனுமதிப் பத்திரம் தரவேண்டும்.

இப்படி அட்டகாசமான பத்து நிபந்தனைகள் விதித்திருக்கிறான் வீரப்பன்.

"நான் சொல்லறதைக் கேட்டு தர்மராசா கலைஞர் நியாயம் வழங்கணும். 10 நாளில் முடிவை பகிரங்கமாக அறிவிக்கணும். கலைஞர் ஆட்சிக்கு கெட்ட பெயர் வந்துடக் கூடாது என்றுதான் நான் அமுங்கி இருக்கிறேன். துப்பாக்கி தூக்காம இருக்கிறேன்.

கர்நாடக பொலிஸ் என்னைத் துரத்துறாங்க. நானும் துப்பாக்கி ஏந்தவேண்டி வரும். அதனால் கலைஞர் ஆட்சிக்கு இக்கட்டான நிலை வந்துடுமோ என்று வேதனைப்படுகிறேன்.

நான் வெளியே வரணும், உங்க உலகத்துக்கு வரணும். எல்லா உண்மைகளையும் சொல்லணும். அதுக்கு ஒரே வழி பொதுமன்னிப்பு!" என்று ரொம்பப் பந்தாவாக, தலைவர்களுக்குரிய ஸ்டைலில் பேசியிருக்கிறான் வீரப்பன். தமிழக-கர்நாடக மாநிலங்களின் எல்லையிலுள்ள காட்டில் தான் வீரப்பன் ஒளிந்திருக்கிறான்.

தமிழக அரசு வீரப்பனுக்கு பதில் சொல்ல முன்னர் கர்நாடக அரசு முந்திக் கொண்டது. "வீரப்பனுக்கு பொது மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை!" என்று அறிவித்துவிட்டது.

---

## ருசிகரமான சாதனை



உலக சாதனையாக கின்னஸில் பல சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தனியாகச் செய்யப்படும் சாதனைகளும் இருக்கின்றன. கூட்டாகச் சேர்ந்து செய்யும் சாதனைகளும் இருக்கின்றன. 1996 பெப்ரவரி மாதம் 14ம் திகதி நடைபெற்ற உலக சாதனை கொஞ்சம் வித்தியாசமானது: கொஞ்சம் ருசிகரமானது. சாதனையில் ஈடுபட்டவர்களுக்கும் சுவையானது.

அமெரிக்காவில் ஒரோனோ என்னுமிடத்தில் உள்ள மெயின் பல்கலைக்கழகத்தில் ஆயிரத்தி நானூற்றி இருபது தம்பதிகள் ஒன்று கூடினர். அவர்கள்தான் இந்த அசத்தலான முத்தமிடும் சாதனையை நிறைவேற்றினார்கள்.

இது என்ன பெரிய காரியம். நாங்களும் தான் அசத்துவோம்? என்ன, பகிரங்கமாக அசத்த வெட்கம்தான் தடுக்கும் என்று தம்பதிகள் நினைக்கக்கூடும். ஆனால் இந்த முத்த சாதனையிலும் விதி முறை இருக்கிறது. 1420 தம்பதிகளில் விதிமுறையை ஒரு ஜோடி மீறியிருந்தால்கூட சாதனை அவுட்.

அது என்ன விதி முறை? ஒரே நேரத்தில், ஒரே விதமாக, ஒரே இடத்தில் (இதழில் மட்டும்) அனைவரும் முத்தமிடவேண்டும். அதுதான் சாதனை. ருசிகரமான சாதனை தானே!



படிப்பகம்

www.padippakam.com



## இரட்டை ராசி

ஆசிரியர்கள் முடியைப் பிய்த்துக் கொள்ளாத குறைதான். பாடசாலையில் படிக்கும் 800 மாணவர்களில் பாதிப்பேர் இரட்டையர்கள். உருவத்தில் ஒரேமாதிரியான இரட்டையர்கள். ஆசிரியர்கள் குழம்பிப் போகத்தானே வேண்டும்.

இங்கிலாந்தில் உள்ள மிட்லேண்ட் பாடசாலைக்கு இரட்டையர் ராசி. வருடாவருடம் குறைந்தது 12 ஜோடி இரட்டையர்களாவது புதிதாகச் சேர்த்து விடுகிறார்களாம். மொத்தம் 800 மாணவர்கள் அங்கு கல்வி கற்கிறார்கள். அதில் பாதிக்கு மேல் இரட்டையர்கள்தான்.

அங்குள்ள இரட்டையர்களில் ஒரே ஒரு வகுப்பை அலங்கரிக்கும் இரட்டையர்களைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.

## தலைவாரிச் சிங்காரித்து



➡ "தலைவாரிப் பூச்சூடி என்னை பாடசாலைக்குப் போ என்று சொல்வாள் என் அன்னை" என்று குழந்தைகள் மட்டும்தான் மகிழ முடியுமா? வெளிநாடுகளில் உள்ள அன்னையர்கள் பலர் தங்கள் பிள்ளைகளைக் கவனிக்கிறார்களோ இல்லையோ, நாய்களை நன்கு கவனித்து செல்லம் பாராட்டுகிறார்கள். வித்தியாசமாக தலைசீவிவிட்டு சிங்காரித்து அழகு பார்க்கிறார்கள். மூன்று நாய்களையும் பாருங்கள், என்ன ஒரு ஸ்டைலு. என்ன ஒரு ரகமான முடிவெட்டு.

நாய்களுக்கு ஏற்பட்டுவரும் மவுசு காரணமாக இலண்டனில் உள்ள யு.கே. கென்னஸ் கிளப் என்னும் நிறுவனம் நாய் ஆராய்ச்சி செய்துள்ளது. அந்த ஆராய்ச்சியில் கண்டறியப்பட்ட சில முக்கிய தகவல்களை நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்.

தற்போது உலகில் 450 வகையான நாய்கள் இருக்கின்றனவாம்.

1988ல் உலகெங்கும் 7 கோடியே 80 இலட்சம் நாய்கள் இருந்தனவாம். 93ல் 6 கோடியே 90 இலட்சமாக குறைந்து விட்டனவாம். மிக கவலைக்கிடமான செய்தி அதுதான்.

ஒநாய்களும், நரிகளும் பரிணாம வளர்ச்சி பெற்றுத்தான் இன்றைய நாய்கள் உருவாகின. (நாம் மட்டும் என்னவாம், குரங்கிலிருந்துதானே தோன்றினோம்)

உயர் ரக நாய்களுக்கு வசதியான பராமரிப்புக்கள், வகை வகையான உணவுகள் கிடைத்தாலும், கிராமப்புற நாய்களுக்கு உள்ள சுதந்திரம் கிடையாதாம்.

## தகவல் பெட்டி

மனிதன் முடமாகிவிட்டால் சக மனிதர்கள் கூட அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அதுவும் கையில் நாலு காசு இல்லாத மனிதன் முடமாகிவிட்டால் யாரும் திரும்பியே பார்க்கமாட்டார்கள்.

ஆனால் படத்தில் பாருங்கள், முடமான நாயைக்கூட 'சீ போ' என்று விரட்டாமல், சக்கர வண்டி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

## நாய் அபிமானம்




இது ஒரு வேட்டை நாய். ஜெர்மனியில் இருந்து இதனை வாங்கிவந்து இலண்டனில் உள்ள ஒருவர் வளர்த்து வந்தார். பென் என்று பெயரிட்டு செல்லமாக வளர்த்தார்.

திடீரென்று ஒரு வியாதி காரணமாக பின் கால்கள் செயலற்றுப் போய்விட்டன. டாக்டரிடம் கொண்டு ஓடினார்கள். இரண்டு கால்களை அகற்றினால்தான் உயிர் பிழைக்கும் என்றாராம் டாக்டர். பின் கால்களை அகற்றிய பின்னர் இந்தச் சக்கரங்கள் பொருத்தப்பட்டன.

ஆரம்பத்தில் சக்கரங்களுடன் நடக்கச் சிரமப்பட்ட 'பென்' இப்போது பழகி விட்டது. சக்கரங்களின் உதவியுடன் பாய்ந்து ஓடுகிறது. எஜமானர் ஆனந்தக் கண்ணீர் விடுகிறாராம்.

நாயின் பெயருக்கு தம் சொத்துக்களையே எழுதிவைக்கும் தாராள குணம் யாருக்குவரும்? இந்த நாயின் உரிமையாளர் எழுதிவைத்திருக்கிறார் என்றால் நம்புவீர்களா? நம்பத்தான் வேண்டும்.



## சக்கரவண்டிக்காரு– இது எப்படி எப்படி?

⬆ வண்டி ஓடச் சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும், அந்தச் சக்கரங்களில் ஒன்றே வண்டியாகிவிட்டால் எப்படியிருக்கும்? அந்த வித்தியாசச் சிந்தனையின் விளைவுதான் இந்தச் சக்கர வண்டி. இதற்கு தனியாக சக்கரம் தேவையில்லை. வண்டியே சக்கரம், சக்கரமே வண்டி. ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

இந்தச் சக்கர வண்டி ஓடும் போது உள்ளே இருப்பவர்களும் சுழன்று கொண்டிருப்பார்களோ என்று நினைக்கிறீர்கள் அல்லவா. சக்கரவண்டி ஓடும்போது உருளாதவகையில் இருக்கை செய்யப்பட்டுள்ளது.

ஒரு காருக்குரிய வேகத்துடன் இந்த சக்கர வண்டியும் ஓடும். உள்பக்கத்தில் இரட்டை எஞ்சின்கள் பொருத்தப் பட்டுள்ளன.

வீதியில் இந்த வண்டியைக் கண்டால் பரபரப்பு ஏற்படத்தான் செய்யும். பெரிய வண்டியொன்றின் சக்கரம் ஒன்றுதான் தனியாகக் கழன்று வருகிறதோ என்று நாம் விழுந்தடித்து விலகி ஓட வேண்டியதுதான்.

இங்கிலாந்தில் உள்ள 'புருக்லேண்ட்' மியூசியத்தில் கார்க் கண்காட்சியில் இந்த சக்கர வண்டிக்கார் வெள்ளோட்டம் விடப்பட்டது. எல்லோரும் பிரமிப்போடு கவனித்தார்கள்.

## மலையில் எழும் சிற்பம்



➡ கல்லிலே கலை வண்ணம் கண்டான் என்று பாடுவது சுலபம். கலை வண்ணம் காண்பதுதான் கஷ்டம்.

படத்தில் இருக்கிறது பாருங்கள் சிற்பம். மர்ம மனிதன் போலத் தெரிகிறதல்லவா. இன்னமும் செதுக்கி முடிக்கவில்லை. முழுதாகப் பார்க்கும் போதுதான் இதன் நயமும், எழிலும் தெரியும்.

கடந்த 45 வருடகாலமாக இந்தச் சிற்பத்தை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இன்னமும் முடியவில்லை. மெதுவாக மெதுவாக ஆனால் நயமாக, தத்ரூபமாக செய்துகொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் வடக்கு டாகோடாவில் உள்ள மலை ஒன்றில்தான் இந்தச் சிற்பம் செதுக்கப்படுகிறது. இதன் உயரம் 600 அடி. சிவப்பு இந்தியர்களின் தலைவராக இருந்து 1877ல் நடைபெற்ற போரில் மண்டையைப் போட்டவர் கிரேஸி ஆர்ஸ். அவரது உருவத்தைத்தான் இவ்வளவு சிரத்தையாக மலையின் மேனியில் செதுக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

முழுதாகச் செதுக்கி முடிந்ததும் உலகின் மிகப் பெரிய சிற்பம் இதுவாகத்தான் இருக்கும்.

எப்போதோ இறந்தவர்தானே என்று விட்டுவிடாமல் இப்போதும் நினைவில் வைத்து அக்கறையாக செதுக்குகிறார்கள். நம் நாட்டில் என்றால் சின்னதாக ஒரு சிலை வைத்துவிடுவார்கள். பின்னர் காகங்கள் அதைக் கவனித்துக் கொள்ளவேண்டியதுதான்.


படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* நடிகர் பாண்டியராஜன் முதன் முறையாக இயக்கிய 'கன்னிராசி' படத்தில் கதாநாயகனாக நடித்தவர் பிரபு. விரைவில் பாண்டியராஜன் இயக்கும் படமொன்றில் பிரபு கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* சத்யராஜ் – அஜித்குமார் இணைந்து நடிக்கும் 'பகைவன்' படத்தில் சத்யராஜிற்கு ஜோடியாக நடிக்க இருந்தார் பானுப்பிரியா. தற்போது இவருக்குப் பதிலாக ரஞ்சிதா நடிக்க இருக்கிறார்.

* பாலசந்தர் தயாரிக்கும் 'காதல் மன்னன்' படம் மூலம் அவரது சீடர்களான சரவணன் என்ற சரண் இயக்குநராகவும், விவேக் இணை இயக்குநராகவும் ஆகிறார்கள். அத்துடன் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் நடிகராக அறிமுகமாகிறார்.

* தமிழில் படவாய்ப்புக்கள் இல்லாதிருக்கும் கஸ்தூரி, தமிழில் ராஜசேகர் கதாநாயகனாக நடிக்கும் 'ரதயாத்திரை' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வருகிறார். இதில் ரோஜா கதாநாயகியாக நடிக்கிறார்.

* இசையமைப்பாளர்களான ஏ.ஆர்.ரகுமான், மரகதமணி ஆகியோரின் சகோதரிகளை தனது இசையமைப்பில் பாடவைத்த சிற்பி, அடுத்து இளையராஜாவின் மகள் பவதாரணியை ஒரு படத்தில் பாடவைக்கப்போகிறார்.

* குழந்தை நட்சத்திரமாக இருந்து 'கேளடி கண்மணி' படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகியவர் அஞ்சு. இவருக்கும், கன்னட நடிகர் பிரபாகருக்கும் அண்மையில் திருமணமாகி விட்டது. பிரபாகர் ரஜினியின் 'முத்து' படத்தில் வில்லனாக நடித்தவர்.

* சரிதா, ரோகிணி போன்றவர்களைத் தொடர்ந்து வடிவுக்கரசியும் பின்னணிக் குரல் கொடுத்து வருகிறார். தெலுங்குப்படங்களை மொழிமாற்றும்போது அப்படங்களில் நடித்துள்ள சாரதா, வாணிஸ்ரீ, லட்சுமி போன்றவர்களுக்கு குரல் கொடுக்கிறார் வடிவுக்கரசி.

* இந்திப் படங்களில் அமிதாப்பச்சனுக்கு அடுத்தபடியாக அதிக ஊதியம் பெறும் நானா படேகர், கடந்த ஆண்டு நடித்த 'அக்னிசாட்சி', 'காமோஷி' இரண்டும் பெருவெற்றி பெற்றன. தற்போது நானா படேகர் 'வஜூட்' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடி ரம்யா கிருஷ்ணன்.

* சரண்ராஜ்-புதுமுகம் மதுரிமா நடித்த மொழிமாற்றுப்படமொன்று 'சஸ்பென்ஸ்' என்ற பெயரில் தமிழில் வெளியாகவிருக்கிறது. சி.பி.ஐ. அதிகாரியாக சரண்ராஜ் நடிக்கும் இந்தப் படத்தில் பாடல்கள் கிடையாது.

* 'ஜென்டில்மென்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடித்த கௌதமி தெலுங்கில் மோகன்பாபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றிலும் அதேபோல் நடிக்கவுள்ளார். இந்தப் பாடல் காட்சி சுவிற்சர்லாந்தில் படமாக்கப்படவுள்ளது.

## பின்னணி பாடுகிறார் அரவிந்தசாமி

மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் அரவிந்தசாமி நடிப்பதாக இருந்தது. பின்னர் நடிக்கவில்லை. ஆனால் ஒரு பாடல் பாடியிருக்கிறார். கலைஞர் கருணாநிதியை ஞாபகப்படுத்தும் பாத்திரத்துக்காக அவர் பாடிய பாடல் இடம்பெறுகிறதாம். படத்தில் கருணாநிதி சாயலில் நடிப்பவர் பிரகாஷ்ராஜ்.

அரவிந்தசாமி முதன் முதலில் பின்னணி பாடகராகியிருக்கிறார். பாடலை எழுதிய வைரமுத்து மட்டும் கவலையில் இருக்கிறார்.


உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு, இதை உரத்துச் சொல்லுவோம் உலகுக்கு..... என்று தொடரும் பாடலில் உச்சரிப்பு சரியாக இல்லையாம். 'உலகு' என்பதை 'உளகு' என்றும், 'வேலை எடுப்போம்' என்பதை 'வேளை எடுப்போம்' என்றும் உச்சரித்துள்ளாராம் அரவிந்தசாமி. அதனால் பாடலில் உணர்ச்சித்துடிப்பு இல்லாமல் போய் விட்டது என்று வருந்துகிறார் வைரமுத்து.

## அப்பாஸ்...

தமிழ்த் திரையுலகின் ... சமீபத்தில் சென்னை கல்... நடத்திய கருத்துக் கணிப்... கணிப்பு என்று விவஸ்தை...

அப்பாஸை ரசிகைக... மிகவும் தொல்லைப்படுத்... பெரிய இடத்துப் பெண்... மில் போன் செய்கிறாரா...

"செக்சுக்காகவோ, ப... விரும்புவதாக நினைக்க... துணைவியாக வாழவே ஆ... என்று சொல்கிறாராம். ... தாங்காமல் வேறு இடத்து... தனது தங்குமிடத்தை மாற்றிக் கொண்டாராம் அப்பாஸ்.



மம்மூட்டி. படம்: அரசியல்

# சினிவிசிட்

## மோகினியின் அனுமதி

மலேசியாவில் நடைபெற்ற ஏ.ஆர்.ரகுமானின் கலைவிழாவுக்கு நடிகை மோகினியும் சென்றிருந்தார். இந்தி நடிகர் ரிஷிகபூரும் விழாவில் கலந்து கொண்டார்.

விழாவைத் தொகுத்து வழங்கினார் மோகினி. அவரிடம் "உன்னை முத்தமிடலாமா?" என்று கேட்டாராம் ரிஷிகபூர். மோகினி இரண்டு கைகளையும் விரித்து "ஓ...தாராளமாக" என்றாராம். உடனடியாக கன்னத்தில் ஒன்றும், இதழில் ஒன்றுமாக இரண்டு உம்மா கொடுத்தாராம் ரிஷிகபூர்.

## தடுமாறுகிறார் பாரதிராஜா

புதிய இயக்குநர்கள் அபாரமான வெற்றிகளைப் பெற்றுவருகிறார்கள். பாரதிராஜா போன்ற இயக்குநர்கள் சற்றுத் தடுமாறிப் போகிறார்கள்.

'சிறகுகள் முறிவதில்லை' என்ற படத்துக்காக முதலில் ஹீராவை கதாநாயகியாகப் போட்டார் பாரதி ராஜா. ரவிக்கை இல்லாமல் பாரதி ராஜா சொன்னது மாதிரியெல்லாம் குதித்துக் குதித்து நடித்தார் ஹீரா. பின்னர் என்ன நினைத்தாரோ ஹீராவை கழட்டி விட்டார். சிம்ரான் என்னும் இந்தி நடிகையைக் கொண்டுவந்தார்.

சிம்ரானை வைத்து சில காட்சிகள் எடுத்துவிட்டு, சிம்ரானையும் வெட்டி விட்டார். மனிஷா கொய்ராலா, அல்லது ஊர்மிளாதான் சரியாக இருக்கும் என்று சொன்னாராம் பாரதிராஜா.

தயாரிப்பாளர் ஸ்ரீகாந்த் மனிஷாவிடமும், ஊர்மிளாவிடமும் பேசிப்பார்த்தாராம். பிஸி என்று சொல்லிவிட்டார்களாம். இப்போது, புதுக் கதாநாயகி தேடும் படலம் நடக்கிறது. பாரதிராஜாவுக்கு என்னாச்சு? டென்ஷன் தான்!

## யாருக்கும் அச்சமில்லை
## தீப்தியின் வலையில் சுனில்

இந்திச் சினிமா உலகம் ஜாலியான சமாச்சாரங்களுக்குப் பெயர் போனது. தமிழ்த் திரையுலகில் இரகசியமாக நடக்கும் சமாச்சாரங்கள் இந்தித்திரை உலகில் பகிரங்க மாகவே நடக்கும்.

நடிகர்களும், நடிகைகளும் மிகத் தாராளமாக பழகிக்கொள்கிறார்கள். தமது நெருக்கத்தை மறைக்கவும் முயற்சி செய்வதில்லை.

சினிமா இதழ்களுக்காக தனியான போஸ் கொடுக்கிறார்கள். நெருக்கமாகப் பேசப்படும் நடிகரையும், நடிகையையும் சேர்த்துவைத்து வில்லங்கமான கோணங்களில் எல்லாம் போஸ் கொடுக்கச் சொல்கிறார்கள். அவர்களும் போஸ் கொடுக்கிறார்கள். வருமானமும் கிடைக்கிறது. கையிலே காசு, வாயிலே தோசை.

மும்பாய் நடிகைகளில் தீப்தி பட்னாக்கர் பல நடிகர்களுடன் வலம்வந்து சாதனைபடைத்தவர். தீப்தியின் வலையில் இப்போது சிக்கியிருப்பவர் சுனில் ஷெட்டி.

"தீப்தியின் உடலமைப்பு கச்சிதமானது. அவரை பயன்படுத்த இயக்குநர்கள் தவறிவிட்டார்கள். தீப்தி நம்பர் வன் இடத்துக்குக் கூட வந்திருக்கக் கூடியவர். அவரை வஞ்சித்துவிட்டார்கள்" என்று பரிந்து பேசுகிறார் சுனில் ஷெட்டி.

சுனில் ஷெட்டியும், தீப்தியும் இணைந்து விசேஷ போஸ் கொடுத்தும் அசத்தியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று மட்டும் இங்கு பிரசுரமாகி உள்ளது.

தீப்தி பட்னாக்கருக்கு ஒரு ராசி இருக்கிறது. இந்தி சினிமா உலகில் கொடிகட்டிப் பறக்கா விட்டாலும், இந்திப்பட ஹீரோக்களின் இதயத்தில் குடியிருந்துகொண்டுதான் இருப்பார்.





சுனில் ஷெட்டி-தீப்தி பட்னாகர்

## கணவன் என்ன செய்ய வேண்டும்? பட்டியல் போடுகிறார் குஷ்பு

கணவன் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும்? என்று குஷ்பு ஒரு பட்டியல் வைத்திருக்கிறார். விருப்பமுள்ளவர்கள் பரிசீலிக்கலாம்.

ஆறு மணிக்கு விளக்கு வச்சா வீட்டுக்கு வந்திடணும். ஏழு மணிக்கு முதுகு தேய்ச்சு குளிச்சு முடிச்சுடணும். எட்டு மணிக்கு பலகாரம் எல்லாம் சாப்பிட்டு முடிச்சுக்கணும். ஒன்பது மணிக்கு பாயை விரிச்ச பக்கத்தில் இருந்து கதை பல பேசவேணும். பத்துமணிக்கு விளக்கை அணைச்ச பக்கத்தில் வரவேணும்.

மறுநாள்- அடுப்புப்பக்கம் அப்பப்ப வந்து இடுப்பைக் கிள்ளவேணும், துவைக்கிறபோது பக்கமா வந்து கட்டிப்புடிச்சிடணும், சைக்கிளில் இருந்து சினிமா போய் வரணும்.

சி.சுந்தர் தொலைந்தார் என்றா நினைக்கிறீர்கள். குஷ்பு பட்டியல் போட்டது நெப்போலியனிடம்.

எட்டுப்பட்டி ராசா படத்தில் நெப்போலியனுக்கு முதலிரவில் குஷ்பு சொல்லும் பாடம்தான் அது. நெப்போலியனை அணைத்தபடி குஷ்பு பாடுவதாக காட்சி அமைத்திருக்கிறார்கள்.



மீனா படம்: பாரதி கண்ணம்மா

## தமிழிலும் தீப்தி திடீர் அதிர்ச்சி

சுனில் ஷெட்டியுடன்போஸ் கொடுக்கும் தீப்திபட்னாக்கர் பற்றி மற்றுமொரு செய்தி இவரை விரைவில் தமிழ்ப் படமொன்றிலும் காணும் பாக்கியம் கிட்டப்போகிறது.

விஜயகாந்துடன் 'தர்மசக்கரம்' படத்தில் நடிக்கிறார் தீப்தி. ஆனால் ஒரு சோகமான செய்தி, படத்தின் இடையிலேயே செத்துப் போய் விடுகிறாராம். தீப்தியின் நினைவில் வாழும் விஜயகாந்தை பின்னர் ரம்பா கவர்ந்து கொள்கிறார்.

தர்மசக்கரம் படப்பிடிப்பில் விஜயகாந்த்துக்கும் இன்ப அதிர்ச்சி கொடுத்தாரம் தீப்தி. விஜயகாந்த்தை கட்டியணைத்து கன்னத்தோடு கன்னம் பதிப்பதாக ஒரு காட்சி. அக் காட்சியை படமாக்கிய இயக்குநருக்கு திருப்தி வரவில்லை. தீப்தியின் காதோடு காதாக ஏதோ சொல்லிவிட்டு, மீண்டும் அக்காட்சியை படமாக்கினார்.

விஜயகாந்த்தை கட்டியணைத்து முத்தமழை பொழியத் தொடங்கினார் தீப்தி. விஜயகாந்த் அசந்துபோனாராம். விஜயகாந்த்துக்கு முதலிலேயே சொன்னால் காட்சியில் ஒரு 'கிக்' இருக்காது என்பதால், இரகசியமாக தீப்திக்கு மட்டும் சொன்னாராம் இயக்குநர்.

எப்படியோ இந்திப்பட ஹீரோக்களை அசத்தியது போதாது என்று விஜயகாந்த்தையும் மிரளவைத்துவிட்டார் தீப்தி. கடவுளே...கடவுளே!

... கல... கிறா... சிக்... திறைந்... இ... சிகான... புதிய பா...

## இந்...

இந்தியில் ... ஸ்பெசல்' என்... கமல். தமிழில் ... கமல் செய்கிறா... "நாகேஷ் ஒரு ... பாத்திரங்களில் ... விரும்பிய காரண... உயிரில்லாத பி... தில்தான் கமல் நடிக்...

## மீனாவை...

'அவ்வை சண்முகி' ... ஏனைய நடிகைகள் கல... நினைத்துக் கொண்டு மீனா... இவர். "மும்பாய் நடிகைகளும்... மீனா பயந்துவிட்டார். அதனா... கொண்டிருக்கிறார்" என்று கேலி... ஒரு நடிகை. கேலி செய்த நடிகை... தெரியுமா? ரம்பா! அது சரி, ரம்பா மட்டும் என்ன செய்கிறாராம்.

www.padippakam.com

## ...ஸின் ♥♥ காதலி

இன்றைய கவர்ச்சி நாயகன் அப்பாஸ்தான். இது [...]லூரி மாணவிகள் மத்தியில் ஒரு சஞ்சிகை [...]பின் முடிவு. (எதற்கெல்லாம் கருத்துக் [...]தயே இல்லையா?)

[...]ள் பலர் மொய்த்தாலும் அப்பாஸை [...]ுகிறார் ஒரு பணக்கார ரசிகை. மிகப் [...]னான அந்த ரசிகை தினமும் காலை [...]ம்.

[...]ணத்துக்காகவோ உங்களை [...] வேண்டாம். உங்கள் [...]சைப்படுகிறேன்" [...]தொல்லை [...]க்கு



நெப்போலியன்-சங்கவி
படம்: பகவத் சிங்

## ராஜேந்தரின் மும்பை நாயகிகள் புதிய படம் மோனிஷா

டி.ராஜேந்தர் படங்கள் என்றாலே வாடா என் மச்சி, வாழைக்காய் பட்ஜ்ஜி போன்ற அடுக்குமொழி வசனங்கள்தான் நினைவுக்கு வரும்.

தி.மு.க.வில் இணைந்து சட்டசபை உறுப்பினராகிவிட்டார் டி.ராஜேந்தர். தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளரும் அவர்தான். அதனால் கொஞ்சக் காலம் திரையுலகைவிட்டு ஒதுங்கியிருந்தார். கட்சியில் டி.ராஜேந்தர் பெயரளவுக்குத்தான் கொள்கை பரப்பு செயலாளர். அவரை ஒரு ஓரமாகவே வைத்திருக்கிறார் கருணாநிதி.

அதனால் மீண்டும் சினிமா உலகின் பக்கம் திரும்பியுள்ளார் டி.ராஜேந்தர்.

சமீபத்தில் மும்பாய் சென்ற டி.ராஜேந்தர் அங்கேயே 25 நாட்கள் தங்கியிருந்து மூன்று தங்க மீன்களை பிடித்துவந்திருக்கிறார். அதாகப்பட்டது மூன்று புதுமுகங்கள். கதாநாயகனும் புதுமுகம்தான். அவர்களுக்கெல்லாம் டி. ராஜேந்தர்தான் சினிமாவுக்கு ஏற்ற பெயர்களைச் சூட்டப்போகிறார். படத் தின் பெயர்: 'மோனிஷா'

இசைக்கும் காதலுக்கும் முக்கியத்துவம் உள்ள படமாம். இசை, பாடல்கள், மற்றும் திரைக்கதை, வசனம், இயக்கம் அனைத்தும் டி.ராஜேந்தர்.

## பாலச்சந்தர் கொப்பியடித்தாரா?

பாலச்சந்தரின் 'கல்கி' படம் தனது கதையொன்றை கொப்பியடித்து எடுக்கப்பட்டதாம். எழுத்தாளர் மகரிஷி பொருமிக் கொண்டிருக்கிறார். மகரிஷியும் பாலச்ச்ந்தரும் நல்ல நண்பர்கள். மகரிஷியின் கதைகள் பலவற்றை தழுவி பாலச்சந்தர் முன்னரே சில படங்களை எடுத்துள்ளார்.

'கல்கி' படக்கதை மகரிஷியால் விகடனில் எழுதப்பட்டது. பாலச்சந்தர் இப்படிச் செய்யலாமா? என்று தமிழக சஞ்சிகை ஒன்று கண்டனம் தொடுத்துள்ளது.

## சுருண்ட ரோமியோ

'மிஸ்டர் ரோமியோ' படம் வசூல் நிலவரத்தில் ஆரம்பத்தில் தொய்ந்து, பின்னர் சற்று எழுந்துவிட்டு 25 நாட்களுக்குள் சுருண்டுவிட்டது. பெரும்பாலான தியேட்டர்களில் 50 நாட்களுக்குள் தூக்கி விட்டார்கள். படம் பப்படமானாலும் பிரபுதேவாவின் நகைச்சுவை நடிப்புக்கு ஏகப்பட்ட வரவேற்பு. அதனால் இனிமேல் தனது படங்களில் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தீர்மானித்துள்ளாராம் பிரபுதேவா.

## சரத்துக்கு மூன்று காதலிகள்

சரத்குமார் நடிக்கும் 'சூர்யவம்சம்' படத்தில் இரண்டு ஜோடிகள். வயதான கெட் அப்பில் உள்ள சரத்குமாரின் ஜோடி ராதிகா. இளமையான சரத்குமாருக்கு ஜோடி தேவயாணி. இது போதாது என்று சரத்குமாரை ஒருதலையாகக் காதலிக்கும் பெண்ணாக 'வள்ளி' பட நாயகி பிரியாராமன் நடிக்கிறார்.

மூக்குக் கண்ணாடி அணிந்து கலெக்டர் வேடத்தில் தோன்றுகிறாராம் தேவயாணி. விக்ரமன் இயக்கத்தில் 'சூர்யவம்சம்' வேகமாக வளர்ந்து வருகிறது.

## அமெரிக்க இறக்குமதி நாயகி

இரட்டை ரோஜா, எனக்கொரு மகன் பிறப்பான் படங்களை இயக்கியவர் கேயார். அவர் அடுத்து இயக்கும் படங்களில் ஒன்று 'காதல் ரோஜாவே'.


காதல் ரோஜாவை அமெரிக்காவில் இருந்து பத்திரமாக பறித்து வந்திருக்கிறார். அந்த அழகியின் பெயர் பூஜாகுமார். அந்த ரோஜா மலர்ந்தது அமெரிக்காவில் என்றாலும், அதன் பெற்றோர் இந்தியாவைச் சேர்ந்தவர்களாம். அமெரிக்காவில் நடைபெற்ற 'மிஸ் இந்தியா' போட்டியில் பங்குகொண்டு 'மிஸ் இந்தியா' பட்டம் வென்றவர் பூஜாகுமார். சமீபத்தில் இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியை தொகுத்து வழங்கியவரும் இவர்தான்.

பூஜாகுமாரை தனது பட நிறுவனத்தின் தயாரிப்பில் நடிக்க அமிதாப்பச்சன் அமுக்கிவைத்திருந்தார். கேயார் அமிதாப்பச்சனுடன் பேசி தனது படத்துக்காக இந்த ரோஜாவை தூக்கிவந்துவிட்டாராம்.

'காதல் ரோஜாவே' படத்தின் கதாநாயகன் விஷ்ணு. இவர் நடிகை ஷீலாவின் மகன்.

பாடல்கள்: வாலி, இசை: இளையராஜா. 'டால்பின் ஸ்டீரியோ' முறையில் இளையராஜா இசையமைக்கும் முதல் படமும் இதுதான்.

மணிவண்ணன், செந்தில், எஸ்.எஸ்.சந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.



மோகன்லால்

## தேவாவின் ஹிட் பாடல்கள்

'காதல் கோட்டை'படம் இப்போதும் ஓடிக் கொண்டிருக்கிறது தமிழ்ப்பட உலகில் பல சாதனைகளை உடைத்துவிட்டது.

'காதல் கோட்டை' படத்தின் தயாரிப்பாளர் சிவசக்தி பாண்டியன் தயாரித்துள்ள படம் 'காலமெல்லாம் காதல் வாழ்க.' படம் திரைக்கு வரமுன்னரே தேவாவின் இசையில் பாடல்கள் சூப்பர் ஹிட்டாகிவிட்டன. பாடல் கசட்டை ரஜினி வெளியிட்டுவைத்த ராசி கசட் விற்பனையில் சாதனை படைத்துள்ளது.

## ஜோதிகா வருகிறார்

நக்மாவின் ஒரு சகோதரி ரோஷினி என்ற பெயரில் தூள் கிளப்பத்தொடங்கிவிட்டார். அடுத்து மற்றொரு தங்கையும் களம் காண வருகிறார். ஜோதிகா என்ற பெயரில் அறிமுகமாகப்போகிறார். குஞ்சுமோன் தயாரிப்பில் அவரது மகன் எபி நடிக்கும் படம் கோடீஸ்வரன். அப்படத்தின் மூலம் கதாநாயகியாக கலக்கப்போகிறார் ஜோதிகா.

## நிபந்தனை தளர்ந்தது

பாண்டியராஜன்-குஷ்பு நடித்து வெளியாகியுள்ள படம் 'கோபாலா, கோபாலா'. முதலில் படத்தைப் பார்த்ததும் குஷ்புவின் காதலர் சுந்தர் சற்று முகம் சுளித்தாராம். அந்தளவுக்கு குஷ்பு கவர்ச்சி காட்டியிருக்கிறார்.

ஆனால் படம் வசூலில் இலாபகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால் குஷ்பு மார்க்கெட்டும் உயர்ந்திருக்கிறது.

அதனால் கவர்ச்சி வேண்டாம் என்ற நிபந்தனை போடும் விஷயத்தில் விட்டுக்கொடுக்கலாம் என்று முடிவுக்கு வந்திருக்கிறாராம் சி.சுந்தர். பின்னே, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டாமா?

## பாடலோ பாடல்

முரளி-சுவாதி ஜோடியாக நடிக்கும் படம் '[...]ண்டக்டர் மாப்பிளே'. படத்தில் முரளியை மயக்கப்பாடு[...]ர் சுவாதி. சமையல் ருசிக்கலையா, சமைஞ்சவ[...]கலையா.... என்று தொடர்கிறது பாடல். அர்த்தம்[...]த(?!) இந்தப் பாடலை எழுதியவர் வைரமுத்து. இசகு [...]சக்கு ஏற்ப பாடலை எழுதுவதால் இசகு [...] பாடல்களும் வந்துவிடுகின்றன என்கிறார் [...]டலாசிரியர் பழனிபாரதி.

## [...]தியில் கமல்

'மகளிர் மட்டும்' படத்தை 'லேடீஸ் [...] பெயரில் எடுத்துக் கொண்டிருக்கிறார் [...]ாகேஷ் நடித்த பாத்திரத்தை இந்தியில் [...]

சிறந்த நடிகர். அவர் நடித்த நல்ல [...]ன்று அது. நான் அதில் நடிக்க [...] அதுதான்" என்கிறார் கமல். [...]மாக நாகேஷ் நடித்த பாத்திரத் [...]கிறார்.

## [...]வின் துணிச்சல்

[...]படத்தில் மீனாவின் துணிச்சலான கவர்ச்சி கண்டு [...]ங்கிப் போயிருக்கிறார்கள். கமலை மாமியென்று [...] உடை மாற்றும் காட்சிகள் ரொம்ப ரொம்ப [...], புது முகங்களும் படையெடுப்பதால் [...]ல்தான் சுழற்றிப்போட்டுக் [...] செய்திருக்கிறார் [...]க யார்

## கனவில் ரஜினி

ரஜினிகாந்தின் பிறந்தநாளுக்கு நடிகர்கள் பலர் நேரிலும், போனிலும் வாழ்த்துச் சொன்னார்கள்.

நடிகர் மம்முட்டி மட்டும் கனவில் வாழ்த்துச் சொன்னாராம். மம்முட்டிக்கு அடிக்கடி கனவு வருமாம். ரஜினியும் கனவில் தோன்றினாராம். "புட்டுச் சாப்பிட்டபடி கனவில் தோன்றிய ரஜினிக்கு, கனவிலேயே வாழ்த்துச் சொல்லிவிட்டேன்" என்கிறார் மம்முட்டி. வித்தியாசமான வாழ்த்துத்தான்.

## பலவித மீனா

பாரதி கண்ணம்மா படத்தில் மீனாவை பலவிதமான கெட்டப்புக்களில் நடிக்க வைத்துள்ளார் பாத்திபன்.

முழங்கால் வரை பாவாடை தாவணியை மடித்துக் கட்டியபடி வயலில் ஏரோட்டினார். சட்டை, வேட்டி அணிந்து பாடல் காட்சியில் நடித்தார். பாட்டியாகவும் ஒரு கெட்டப்பில் தோன்றுகிறாராம்.

## சக்தியும் உத்தியும்

தொப்புளில் ஆம்லெட் போட்டனர். பம்பரம் விட்டனர். தக்காளி உருட்டினர். இப்போது ஒரு துளி பாதரசத்தை விட்டிருக்கிறார்கள். 'சக்தி' படத்தில் யுவராணியின் தொப்புளில் இந்த புதிய உத்தியை ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டு அறிமுகப்படுத்துகிறார்கள்.

மெல்லிய ஆடையில் பஞ்சணையில் கிடந்து தூக்கம் வராமல் தவிக்கிறார் யுவராணி. கம்யூட்டர் மூலம் அவரது உடலில் பாதரசத்தை விட்டு அது அவர் உடலெங்கும் உருளும் காட்சியை படமாக்கியுள்ளார்கள். வினித்-யுவராணி நடிக்க குஞ்சுமோன் தயாரித்துள்ள படம் சக்தி. விரைவில் திரைக்கு வருகிறது.



பாண்டியராஜன்-குஷ்பு
படம்: கோபாலா கோபாலா

## நக்மா கொடுத்த அறை

சினிமா உலகில் தனது அனுபவம் பற்றி மும்பாய் பிலிம்ஃபேர் சஞ்சிகைக்கு நக்மா சொல்லியுள்ள நெத்தியடியான தகவல் இது.

சினிமா உலகிலும் ஓநாய்கள் இருக்கிறார்கள். அவர்களின் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை.

டின்னருக்குப் போகலாமா என்று கேட்பார்கள். இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியாதா என்ன? 'நோ தாங்ஸ்' சொல்லி விடுவேன்.

சில ஓநாய்களைப் பளார் என்று அறைந்த அனுபவமும் எனக்கு உண்டு. அறை வாங்கிய பின்னர் அவர்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே." என்று சொல்லும் நக்மா தானாகவே விரும்பி டின்னருக்கு அழைப்பது சரத்குமாரை மட்டும்தான்.

## ஆனந்தனாக மோகன்லால்

'இருவர்' படத்தில் ஆனந்தன் என்ற பாத்திரத்தில் தோன்றுகிறார் மோகன்லால். தமிழில் மோகன்லால் கதாநாயகனாக நடிக்கும் முதல் படமும் இதுதான்.

மலையாளத்தில் மோகன்லால் நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்ட பல படங்கள் நன்றாக ஓடியிருக்கின்றன. அதனால்தான் 'இருவர்' பட கதாநாயகனாக மோகன்லாலை துணிந்து நடிக்கவைத்தாராம் மணிரத்னம்.

எம்.ஜி.ஆரை நினைவு படுத்தும் ஆனந்தனாக நடிக்கும் மோகன்லால், இருவர் படம் சூப்பர் ஹிட்டானால் தொடர்ந்தும் தமிழில் நடிக்க விரும்புகிறார்.

மலையாள படவுலகின் இரண்டு சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான மம்முட்டி ஏற்கனவே தமிழிலும் கால் பதித்துவிட்டார். மற்றொரு சூப்பர் ஸ்டாரான மோகன்லாலும் வந்துவிட்டார்.

**முகப்பில்**

பார்த்திபன் — யுவராணி

படம்:-பாரதி கண்ணம்மா — (விசேஷ படம்)



படிப்பகம்

www.padippakam.com

## உங்கள் துணைவருக்கு மாரடைப்புக்கான அறிகுறிகள் இருக்கின்றனவா?

# கண்டறியவும், கவனிக்கவும் சில வழிகள்!

சிலர் நெஞ்சுப் பகுதியில் ஏற்படும் வலிகளை எல்லாம் இதயவலி என அஞ்சி நடுங்குவார்கள். பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு பூப்பெய்தும் பருவத்திலும், மாதவிடாய் நின்ற பின்பும் நெஞ்சுப்பகுதி, எலும்புகளில் வலிதோன்றும். சிலர் வயிற்று வலியை நெஞ்சுவலி என நினைத்து தாங்களே சிருஷ்டித்துக் கொள்ளும் அறிகுறிகளோடு விவரிப்பார்கள். இருப்பினும் மாரடைப்பு என்பதை அலட்சியம் செய்வது ஆபத்தானது.

கொலஸ்ட்ரோல், இரத்த அழுத்தம், அதிக எடை, புகைப்பழக்கம், பதட்டம் ஆகியவை மாரடைப்புக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டிகள். இதைத் தவிர முக்கியமான ஒரு மனப்பக்குவம் நெஞ்சுவலிக்குத் தூபம் போடுகிறது. அத்தகைய மனோபாவத்தை மாற்றிக்கொள்வது நல்லது. இத்தகைய ஆளுமை மாற்றத்திற்குப் பெண்கள் வழிவகுக்க முடியும் என்பது உறுதி. உங்கள் கணவரிடம் இக்குணங்கள் உள்ளனவா என அறிந்து கண்டுபிடிக்கலாம்.

1. எதைச் சொன்னாலும் மிகவும் கண்டிப்பாகவும், அடித்தும் (கையால் அல்ல) அழுத்தமாக உரத்துக் கூறுகிறாரா?
2. வீட்டிலும் அலுவலகத்திலும் அல்லது உங்களோடு கடைக்குச் செல்லும் போதும் வேகமாக நடந்து செல்வாரா?
3. என்ன இது நாய் படாப் பாடான வாழ்க்கையாக உள்ளதே என அடிக்கடி சலித்துக் கொள்கிறாரா?
4. நீங்கள் மெதுவாக வேலை செய்தால் அல்லது கொஞ்சம் தாமதமாக சாப்பாட்டைக் கொண்டு வந்து வைத்தால் கோபப்படுவாரா?
5. "சொல்ல வந்ததைச் சொல்லித் தொலை. ஏன் இப்படித் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிறாய்" என்று எரிந்து விழுவாரா?
6. நீங்கள் முக்கியமான விஷயத்தைக் கூறிக்கொண்டிருக்கும்போதே அவர் **வேறு வேலையில்** ஈடுபட்டுப் பரபரப்புடன் இருப்பாரா?
7. எப்போதும் காலில் சக்கரத்தை மாட்டிக்கொண்டவர் போல் துறுதுறுவென இருப்பாரா?
8. ஆடை அணிந்து கொண்டே சாப்பிடுவது, தேனீர் குடிப்பது என ஒரே சமயத்தில் இரண்டு வேலைகளைச் செய்வாரா?
9. ஓய்வு இல்லாமல் ஓய்வு நாட்களில் கூட வேலைகளைத் தலையில் போட்டுக் கொண்டு செய்து கொண்டிருப்பாரா? (அவரால்தான் அலுவலகமே நடக்கிறது என்ற நினைப்புடன்)



10. அவர் பேசுவதைப் பிறர் கேட்க வேண்டும் என்ற நினைப்பில் அல்லது அவரது கருத்துத்தான்சரி என்கின்ற எண்ணத்தில் பேசுவாரா?
11. கொஞ்சம் அசந்தாலும், ஓய்வில் கண் மூடினாலும் எல்லாம் கெட்டுவிடும் என்ற நினைப்பு உள்ளவரா?
12. ரசனை ஏதுமின்றி, இன்று சாப்பாடு சுப்பர். இந்தச் சேலை அழகாக உள்ளது. இந்தக் காட்சி, ஓவியம், பாடல் அருமை என அழகுணர்வு இல்லாமல் வேலை வேலை என்று இருக்கிறாரா?
13. சர்வ காலமும் பணம், பதவி உயர்வு, பாராட்டு, வெகுமதி என்று கூறிக் கொண்டு புதுமைச் சிந்தனைகளைக் கோட்டை விட்டுவிடும் சுபாவம் உள்ளவரா?
14. பதறி அடித்துக் கொண்டு இந்த வேலை, அந்த வேலை என்று ஓடிக் கொண்டிருக்கிறாரா?
15. குறித்த காலத்திற்கு முன்பே எந்த இடத்திலும் இருக்க வேண்டும் என்கின்ற மனநிலை அதிகம் உள்ளதா?
16. பல்லைக் கடித்துக்கொண்டும், முஷ்டியை இறுக்கமாக வைத்துக் கொண்டும் ஆத்திரத்துடன் பேசுவதுண்டா?
17. தான் இப்படிப் பதறி அடித்துக்கொண்டு, அவசரம் அவசரமாகக் காரியங்களைச் செய்வதால் தான் தனக்கு வெற்றி கிட்டியுள்ளது என்று கூறுகின்றாரா?
18. இப்போதே செய்து முடிக்க வேண்டும்; அரைகுறையாக விட்டு விடக்கூடாது என்பதில் பிடிவாத குணம் உள்ளவரா?
19. சாதாரண விளையாட்டுக்களில் தோற்றுப் போவதைச் சகஜம் எனக்கொள்ளாமல் மனம் வெதும்புபவரா?
20. சாப்பிட்டவுடன், அதையும் அவசர அவசரமாக உண்டுவிட்டு உடனே வேலையைச் செய்யத் தொடங்கிவிடுவாரா?

இவற்றில் 12க்கு மேல் "ஆமாம் இப்படித் தான் என் கணவர் இருக்கிறார்" என்றால் நிச்சயம் மனோபாவ மாற்றம் தேவை. 20ல் 20க்கும் ஆமாம் என்றால் நூறு சதவீதம் மாரடைப்பு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் என்று பிரபல ஆய்வாளர்களான **பிரிட்மெனும், வுல்மரும்** கூறுகின்றனர்.

கொஞ்சநேரம் வேலைகளை எட்ட வைத்து விட்டு ஏதாவது புத்தகங்களைப் படிக்கச் சொல்லுங்கள். உங்கள் ஆரோக்கியத்திற்கும் அது நல்லது.

## "பெண்களின் வெற்றியை ஆண்கள் சகிக்கமாட்டார்கள்!"

### 'மிஸ் இந்தியா' சீறுகிறார்

"நான், 'மிஸ். யுனிவேர்ஸ்' போட்டிகளில் கலந்து கொண்டு திரும்பிய கையோடு, பிரபல இந்தி நடிகை டிம்பிள் கபாடியாவும், 'கல்நாயக்' படத்தின் இயக்குநர் சுபாஷ் கையும் தங்கள் படங்களில் என்னை நடிக்க அழைத்தனர்.

அப்போது நான் படித்துக் கொண்டிருந்த எம்.பி.ஏ (M.B.A) வை முடிப்பதில் தான் ஆர்வமாக இருந்தேன். வந்த வாய்ப்புக்களை மறுத்துவிட்டேன்.

இப்போது படிப்பு முடிந்து விட்டது. படங்களில் நடிக்க நான் ரெடி என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்."

1995 'மிஸ் இந்தியா', 'மிஸ் யுனிவேர்ஸ்' இரண்டாம் இடம் மன்ப்ரீத் பிரயர் ஒரு பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியத் தலைநகர் டெல்லியில் உள்ள ஹையத் ரீஜன்ஸி ஹோட்டலில், இவருக்குப் பிடித்த எலுமிச்சைசோடாவை அருந்திக் கொண்டே, படு வேகமாகப் பேசுகிறார்– நேசமாகவும்தான்.

"இரண்டு வருடங்களுக்கு முன்புவரை நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. 'மிஸ் இந்தியா'வாக வருவேனென்று.

என் அறிவுக் கூர்மையையும், சென்ஸையும் ஒப்புக்கொள்ளும் என் நண்பிகள்கூட . நான் அழகானவளும் என்பதை நினைக்க வில்லை.

கல்லூரி நாட்களில், கூடப் படிக்கும் மாணவர்கள் கவனத்தை நான் கவர்ந்ததே இல்லை. 'குட்டை', 'குண்டு' என்ற கொமென்ட்ஸ்கள் என்மீது.

'மிஸ் இந்தியா' பட்டத்தை வென்ற பிறகு, நான் திருமணம் புரிந்துகொள்ள கேட்டு வரும் இடங்கள் குறைந்துவிட்டன.

விநோதமான காரணங்களுக்காக ஒரு பெண்ணின் வெற்றியை, ஏனோ எந்த ஆணாலும் ஜீரணிக்க முடிவதில்லை.

எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் 'போய் ஃபிரண்ட்' ஒருவரை ஏற்படுத்திக் கொண்டால், அது நான் திருமணம் செய்து கொள்பவராகத்தான் இருக்கும்.

திருமணம் என்னும் புனிதமான நம்பிக்கையை நான்மதிக்கிறேன். திருமணத்திற்கு முன் செக்ஸ் என்பதை நினைத்துக் கூட என்னால் பார்க்க முடியாது.

டெல்லி 'லேடி இர்வின்' மகளிர் கல்லூரியில் மாணவர்கள் சங்கத் தலைவியாகப் பணியாற்றிய காலத்தில் தினந்தோறும் ஏதாவது ஒரு பொதுவான காரணத்திற்காகப் போராடிய அனுபவம் உண்டு.



இப்போது இந்தியாவில் கலாசாரத் தூதுவராக, வெளிநாடுகளில் இந்தியாவின் பண்பாடு குறித்தும், இந்தியாவைக் குறித்தும் என்னை வலுவாகப் பேச உதவுகிறது.

மேலை நாடுகளில் இருந்து, இந்தியாவில் உள்ள பழமை, மதம், பண்பாடு, நாகரிகம், கலைகள் பற்றி அறிய ஆர்வமுடன் வருகிறார்கள்.

ஆனால் இங்கிருப்பவர்கள், நம் நாட்டுத் திறமைசாலிகளையும், மேதைகளையும் சரியாகப்போற்றுவதில்லை. உதாரணம் ரவிசங்கர், விக்ரம் சேத் முதலானோர்.

என்னிடம் உள்ள நம்பிக்கை, நிதானம் இவற்றிற்கு என் குடும்ப வளர்ப்பு முறை ஒரு காரணம்.

நான் 'மிஸ் இந்தியா'வாக வெற்றிபெற்ற போதும், 'மிஸ் யுனிவேர்ஸி'ல் இரண்டாவது இடத்தைப் பெற்றபோதும் என் பெற்றோரின் கண்களில் தெரிந்த பெருமிதம் கலந்த மகிழ்ச்சி என்னைப் பரவசப்படுத்தியது.

'மொடலிங்' தொழிலில் முன்னணியில் இருக்க முக்கியமானது முகம்.

முக அழகு நிரந்தரமான ஒன்று அல்ல.

தினந்தோறும், புதிய புதிய அழகுமுகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

ஆகவே இந்தத் தொழிலில் போட்டியும், பாதுகாப்பின்மையும், பொறாமையும் அதிகம்.

டொப் மொடலாக இருக்கும் போதே விலகி விடுவது தான்நல்லது!"

முன்னாள் உலக அழகிகளான சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் வழியில், 23 வயதான இந்த முன்னாள் அழகியும் திரையுலகிற்கு வந்துவிட்டார். கதாநாயகிகள் இலக்கணம் மாறுகிறதோ?

## பெயர் வைப்பது எப்படி?

குழந்தைக்குப் பெயர் வைக்கும்போது சிலவற்றைக் கவனிக்கவேண்டும் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். மிகவும் பிரபலமான, பழக்கப்பட்ட பெயர்களைச்



சூட்டினால் குழந்தைக்குரிய தனிப்பட்ட முத்திரை (Identity) குறைந்துவிடும். நூற்றில் ஒன்று என்றாகிவிடும். புதுமையான பெயர்களை வைத்தால் தான் தனித்து விடப்பட்டதாக எண்ணும். இருபாலாருக்கும் பொதுவான பெயர்களை (கஸ்தூரி) சூட்டினால் பால் சார்ந்த ஒவ்வாநிலை- பொருத்தமற்ற நிலை (Inappropriateness) ஏற்படும்.

ரீ.வி., திரைப்படங்களில் வரும் நகைச்சுவைப் பெயர்களையோ, அல்லது தீயவர்களது பெயர்களையோ வைக்கக் கூடாது.

மதம், இனம், சாதி அல்லது ஒரு குழுவை அடையாளம் காட்டும் பெயர்களைச் சூட்ட வேண்டாம். உச்சரிக்கவும், எழுதவும் கடினமான பெயர்களைச் சூட்ட வேண்டாம்.

சில பெயர்களைக் குறைத்துக் கூறினால் விபரீதமான பொருளைத் தரும் (காளிதாஸ்). அது போன்ற பெயர்களைச் சூட்டவேண்டாம். மிகவும் பழைய பெயர்களை வைக்காதீர்கள்; "பெயரில் என்னதான் இருக்கிறது?" என்பது தவறாகும். என்ன பெயர் வைக்கலாம்? எப்படி அழைக்கலாம்? என்று சிறிது சிந்தனை செய்து பெயர் சூட்டி. மகிழுங்கள்.

குழந்தையின் ஆளுமைக்கு அது உதவும். ஆனால் இதற்காக ஜோதிடத்தை நாட வேண்டாம்.

வோகஸ் ஸ்பெஷல்

## நம்நாட்டு தொலைக்காட்சிகளில் அயல்நாட்டு அலைவரிசைகள்

தமிழ்நாட்டின் பிரபல தொலைக்காட்சி அலைவரிசைகள் இரண்டு நம்நாட்டு தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலம் வீடுகளுக்குள் வந்துள்ளன.

எம்.ரீ.வி., சன்.ரீ.வியையும், ஈ.ரீ.வி. ராஜ் ரீ.வி.யையும் ஒளிபரப்புகின்றன.

கடந்தவாரத்தில் எம்.ஜி.ஆர்.,ஜெயலலிதா நடித்த இரண்டு அசத்தலான திரைப் படங்கள் ஒளிபரப்பாகின. 'ஆயிரத்தில் ஒருவன்', 'குடியிருந்த கோயில்' ஆகிய இரு படங்களும் எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா ஜோடிப் பொருத்தத்துக்கு மெருகூட்டிய படங்கள்.

சன்.ரீ.வி. என்று காட்டிவிட்டு எம்.ரீ.வி. நிறுவனத்தாரே அந்த இரு படங்களையும் தாமாகவே காண்பித்திருப்பார்களோ?

சன்.ரீ.வி. கலைஞர் கருணாநிதி குடும்பத்தினருக்குச் சொந்தமான நிறுவனம். ஜெயலலிதாவுக்கு மெருகூட்டும் திரைப்படங்களை சன்.ரீ.வி. ஒளிபரப்பியிருக்குமா?

எப்படியோ, இரண்டு படங்களும் எம்.ஜி.ஆர். இரசிகர்களுக்கு திகட்டாத விருந்து. ஆனால் இரவு 11.30க்கு பின்னர் காண்பிக்கப்பட்ட மேற்படி இரு படங்களையும் எத்தனை பேர் பார்த்திருப்பார்கள்?

சன்.ரீ.வி.யில் ஒளிபரப்பான சில பாடல்களைத் தொகுத்து வைத்து, சன் மியூசிக் என்ற பெயரில் அடிக்கடி போட்டு அறுக்கிறது எம்.ரீ.வி. அந்த தொகுப்பை யாராவது திருடமாட்டார்களா?

அப்துல் ஹமீத் வழங்கும் பாட்டுக்குப் பாட்டு, நடிகை ராதிகா பிரபலங்களை பேட்டி காணும் நிகழ்ச்சி இரண்டு சன்.ரீ.வி.யில் இருந்து இங்கு ஒளிப்பரப்பாகும் நிகழ்ச்சிகளில் கல கலப்பானவை. சலிப்பில்லாமல் பேட்டி காண ராதிகா எங்கே கற்றுக்கொண்டார்?

சன்.ரீ.வியை ஒளிபரப்ப எம்.ரீ.வி. தெரிந்தெடுத்துள்ள நேரம்தான் இரண்டும் கெட்டான் நேரம். தொலைக்காட்சிக்கு எட்டியது நேயர்களின் கண்ணுக்கெட்டாமல் போகிறது.

ஈ.ரீ.வி.யில், ராஜ் ரீ.வி. பாடல்களும், படங்களும்தான் ஆதிக்கம் செய்கின்றன. திரைப்படம் ராஜ் ரீ.வி.யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும்போதே ஈ.ரீ.வி.க்காரர்கள் குறுக்கே புகுந்து விளம்பரம் போடுகிறார்கள். அதனால் விளம்பரம் முடிந்து பார்க்கும்



போது படத்தில் பல காட்சிகள் சென்று விடுகின்றன. கதையும் புரியாமல் தொடர்ச்சியும் இல்லாமல் படம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஜனவரி ஐந்தாம் திகதி எஸ்.பி.பால சுப்பிரமணியம் குழுவினர் கொழும்பில் நடத்திய இசை நிகழ்ச்சி விளம்பரத்தை ஈ.ரீ.வி.யில் அடிக்கடி போட்டு நேயர்களை வறுத்தெடுத்துவிட்டார்கள். இதிலிருந்து தப்பிக்கொள்ள எப்போதடா ஐந்தாம் திகதி வரும்? என்றாகிவிட்டது.

கடந்தவாரத்தில் ராஜ் ரீ.வி.யில் சிவாஜி நடித்த 'ஞான ஒளி' படத்தை ஒளிபரப்பினார்கள். அதே நாள் எம்.ரீ.வியில் இரவு 11.30க்கு எம்.ஜி.ஆரின் 'குடியிருந்த கோயில்'. சிவாஜியும், எம்.ஜி.ஆரும் திரையுலகில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. இரண்டுமே அருமையான படங்கள்!

புத்தாண்டை முன்னிட்டு ஈ.ரீ.வி. சில தமிழ் நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்பியது. உவைஸ் ஷெரிப்தான் அறிவிப்பாளர். அப்துல் ஹமீத்போல ஒரு எடுப்பு எடுக்கிறார்; பாராட்டுக்கள். ஆனால் தமிழ் உச்சரிப்பிலும் அப்துல் ஹமீத்திடம் கற்றுக் கொண்டால் என்ன? புத்தாண்டு பிறந்து 10 நிமிடங்களாகிய பின்னர், இன்னும் சில நிமிடங்களில் புத்தாண்டு பிறக்கப் போவதாக உவைஸ் ஷெரீப் சொன்னதை ஜோக்காக எடுத்துக் கொள்ளலாமா(?!)

ஈ.ரீ.வி.யில் பிரதி வெள்ளிதோறும் இரவு 9 மணிக்கு 'நிஷாகந்தி' என்னும் மர்மத் தொடர் ஒளிபரப்பாகிறது. தமிழக தொலைக்காட்சிப்படம்; கதை என்று தேடினால் எதுவும் தட்டுப்படாது. இசையும், படப்பிடிப்பும்தான் திகிலூட்டுகின்றன. இப்போதெல்லாம் தொலைக்காட்சிப் படங்களிலும் பாடல் காட்சிகள் இடம் பெறுகின்றன. 'நிஷாகந்தி'யிலும் உண்டு. பேயாக வருபவர் சித்ரா. மிரண்டு கொண்டிருப்பவர் ரேகா. சாருஹாசனும் இருக்கிறார். ஆனாலும் அந்த ஆச்சிதான் பார்வையாலேயே பயப் பூச்சி காட்டுகிறார்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** AY

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-01-1997
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | திருமதி.ஜோதிமலர் இராஜேந்திரன் |
| | இல.15, எல்லை வீதி , மட்டக்களப்பு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது **சுகந்தினி**

### முட்டை சால்னா

**தேவையான பொருட்கள்:**

முட்டை-4
தக்காளி-100 கிராம்
பெரிய வெங்காயம்-2
பச்சை மிளகாய்-2
மசாலாத்தூள்-சிறிதளவு
உப்பு-அளவாக
மல்லித்தூள்-சிறிதளவு
கறிவேப்பிலை-சிறிதளவு.

**செய்முறை:**

முதலில் முட்டையை நன்றாக அவித்து, சிறுதுண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். தக்காளி, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றைத் தனியாக நறுக்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டுத் தாளித்து, அதனுள் நறுக்கிவைத்த தக்காளி, வெங்காயம், மிளகாய் கலவையைப் போட்டு நன்றாக வதக்க வேண்டும். நன்றாக வதக்கியவுடன், நறுக்கப்பட்ட முட்டை மற்றும் மசாலாத்தூள், மல்லித்தூள், உப்பு ஆகியவற்றை வாணலியில் போட்டு நன்றாகக் கிளறி சிறிது கறிவேப்பிலை போட்டு இறக்கி வைக்கவும். இது இட்லி, தோசை ஆகியவற்றுடன் தொட்டுச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

## அந்த நாட்கள் ..... இனியும் வராது....?

பலாலி வீதியிலே...
'சைக்கிளில் பரவலாய்"
ராஜாக்கள் போலவே
பவனி வந்த நாட்கள்...
இனியும் வராது...!
**
தித்திக்கும் சோலையிலே,
தத்தித்திரியும் குருவிகளாய்
சிட்டாகச் சிறகடித்த
அந்த நாட்கள்....
இனியும் வராது...!
**
ஆரிய குளத்தடியிலும்,
திரு நல்வேலி சந்தியிலும்,
"அவள்" தரிசனத்துக்காய்
தத்தளித்து காத்திருந்த
அந்த நாட்கள்...
இனியும் வராது...!
**
பின்னேரம் ஆனதும்
பிள்ளையார் கோவிலடியில்
கூட்டமாய் கொட்டமடித்த
அந்த நாட்கள்....
இனியும் வராது...! **

நம்வீட்டில் நாமிருக்க
வழியில்லா யுத்தம்
ஒரு கூட்டுக்குருவிகளை
திக்குத்திக்காய் விரட்டியது!
**
இன்று நாம்...
"அகதிகள்!"
ஆலோலம் பாடி
ஆரவாரித்திருந்த
அந்த நாட்கள்....
தொலைந்து போயின.
**
நம்புகிறோம்.....நம்புகிறோம்
நம் சந்ததிக்காவது
தலைசாய்த்துக் கண்ணயர,
தமிழன்னை,
மடிகொடுப்பாள்!
நம்பிக்கையில்
நம் நாட்கள்...
நகர்கின்றன.....
**


"துஷ்யா"- யாழ்ப்பாணம்.

## எனது கண்ணீர் துடைக்கப்படுகிறது

அழுவதற்கும்
அதன் பின்னர்-எனை
அழிப்பதற்குமே
தெய்வம் எனக்குக்
கண்ணீரைத் தந்தது!
-o-
வருடங்கள் பல கடந்தும்
விழிநீர்
வற்றிவிடாமல்
வழிந்தோடியதாயின்-என்
வேதனையின் ஆழம்
எப்படிப்பட்டதாய் இருந்திருக்கும்!
-o-
அன்பைத் தேடி
ஓலமிடும் மனதுக்கு
ஆறுதல் கூறத் தெரியாமல்
ஆகாயத்தை வெறித்த படி
அழுது வழிந்தேன்!
-o-
இதயம் சுக்கு நூறாக
வெடித்துச் சிதறியிருந்ததை
வெளியில் தெரியாமல்
மறைக்கும் முயற்சியில்
தினமும் தோற்றுப் போனேன்!
-o-
உன் நிழலில்
நிம்மதி தேடிவந்த
என் மீது,
வேதனையின் சாட்டையை
விட்டெறிந்தாய்;
பரவாயில்லை!
-o-

உடைந்து, நொறுங்கி,
அழிந்து போனதென்
காதல் உலகு;
ஓசையில்லாத
அழுகை மழையில்
தடயங்களையும்
தொலைத்தது!
-o-
வாழ்க்கை நதியின்
கரைகள் உடைந்து
மணற் தரையே
எஞ்சிக் கிடக்கும் போது,
எந்த நீர் ஊற்று-இனி
என் வாழ்வின் ஊடாக
வழி தேடி வரப் போகிறது?
-o-
இப்போது நினைக்கிறேன்;
உனக்குத்தான்
உயர்ந்த உள்ளம்
இல்லை யென்றால்,
நானும் எதற்காக
மனித விழுமியங்களிலிருந்து
மாறுபட வேண்டும்?
-o-
இனியெல்லாம்-உனது
நல் வாழ்வுக்கான
ஆலாபனைதான்-எனது
ஆத்மாவெங்கும்
அலை மோதி விழப் போகிறது!
-o-

செல்வி பஹீமா ஜஹான்- தெமடகொல்ல, மெல்சிரிபுர.



↑ இது அன்றைய திரையுலக ஜெயலலிதா. எளிமையிலும் எத்தனை அழகு பாருங்கள்! இப்போது மாறிவிட்டாரே! உருவத்தில் மட்டுமல்ல உள்ளத்தாலும் மாறிவிட்டார்! மாறியிருக்கா விட்டால் இப்போதும் மகாராணிதான்!

## சுவாசித்தால் போதும்!



தொலைபேசி இல்லாவிட்டாலும்
இன்னும் நிலவிருக்கிறது காதலி!
ஏதேனும் சொல்வதாயின்
நிலவிடம் சொல்லியனுப்பு
நிலவு ஒரு போதும்
செய்தித் தணிக்கை செய்வதில்லை!
••
சிலவேளைகளில்
யுத்தத்தைவிட தனிமை
கொடுமையாக இருக்கலாம்;
அப்போதெல்லாம்
உன்னையே "நானாக"
நினைத்துக் கொள்!
••
பட்டினி கிடந்தாலும்
பகற்பொழுதில் அழுதாலும்
செல்லமாய் நான் தந்த
முத்தங்களை நினைத்துக் கொள்!
••
எனக்கு நீ
தூரத்தில் இருக்கலாம்;
உனக்கு உன் கன்னம்
அருகில்தானே இருக்கிறது?
அதை நான்
தொடுவதாக எண்ணி

ஒரு முறை ஸ்பரிசித்துப் பார்!
உன்னை நினைத்து
நான் மகிழ்வதைப் போல்,
நீயும் மகிழ்வாய்!
••
அதுசரி....நீ எப்படி இருக்கிறாய்?
இங்கே- சுவிஸ் சுந்தரிகளோடு
ஒப்பிடும் போது,
நீ யாழ்ப்பாணத்தில் நன்கு
மெலிந்து போயிருப்பாயென்று
நினைக்கிறேன்....!
அதனாலென்ன?
உன்னை கொழுக்க வைக்கும்
இரகசியம்தான்
எனக்கு நன்கு தெரியுமே!
••
உன் விழிகளுக்குள்
என் உயிர் தொங்கிய
அந்தப் பழைய நாட்களிலேயே
நான் தீர்மானித்துவிட்டேன்....
"எல்லாமே நீதான்!"
••

அரசியல் பிரச்சனைகள்- நம்
இதய தேசத்திற்குள்
வாலாட்ட முடியாது கண்ணே!
••
வேறென்ன...
எல்லோருக்கும் இன்று
பொங்கல் திருநாள்!
நமக்கும் ஒரு நாள்
பொங்கல் இனிக்கும்;
நம்பிக்கைகளை நிறையச்
சேகரித்துவை!
மற்றும்படி எனக்குப்
பொங்கல் வாழ்த்தனுப்பச்
சிரமப்படாதே!
••
முற்றத்தில் நீயிருந்து
சுவாசித்தால் போதும்;
உன் இதயத் துடிப்பு எனக்கு
இடைவிடாது
வாழ்த்துச் சொல்லும்!!
••

எம். சுரேஷ்.

## பதைக்குது நெஞ்சு

போர்
அழிவு
போதும்!
பதைக்குது
நெஞ்சு,
பட்டென்று
பூமி
பிளந்து
சட்டென்று
மூடி,
வானம்
புதிதாக
வாழ்வு
நமதாக
மீள
வருமானால்,
பட்டென்று
உடைந்து
சட்டென்று
மூடிக்
கொள்ளட்டும்!

ஜெயமணி.

## அந்த நாள் ஞாபகம்





↑ கண்ணாடியுடன் காட்சி தருபவர் யார் என்று தெரிகிறதா? புஷ்டியான இந்த வாலிபரின் குரலை வானலை வழியாக தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆமாங்க, எஸ்.பி. பாலசுப் பிரமணியம் தான் இவர். இப்போது மாறிவிட்டார். ஆனால் மாற்றம் உடலளவில் மட்டுமே. உள்ளத்தில் என்றுமே இளமை. அவரது வெற்றியின் இரகசியம் அதுதான்.

→ படத்தில் அருகருகே அமர்ந்திருக்கும் இருவரும் இரண்டு பிரபல நடிகர்களின் இதயங்களில் இடம்பிடித்தவர்கள். ஒருவர் சரிகா, மற்றவர் லதா. ரஜினி, கமல் மட்டுமல்ல அவர்களது துணைவியரும் நட்பாகவே இருக்கிறார்கள் இரசிகர்களுக்குள் மட்டும்தான் போட்டிகள்.

## நமக்கென்ன பொங்கல்?

அரசாங்க வேலையதும்
அண்ணனுக்குப் பறிபோச்சு!
'சரசக்கா' பேரனுக்கும்
சாமிகுறை பேய்க் குறையாம்!
பிரச்சனைக்கோர் முடிவுமில்லை;
பிறகென்ன தைப்பொங்கல்?
o-o

வயலுக்குப் போன 'கொப்பர்'
வரவில்லை! ஒருவருஷம்!
'கயல்'மாமி புருஷனையும்
கடத்தியிப்போ ஒருமாசம்!
அயல்வீட்டு 'நாகனை'யும்
'ஆமி'சுட்டு ஒன்பதுநாள்!
புயல்வீசும், எம்வாழ்வில்
பொங்கலென்ன தைப்பொங்கல்?
o-o

'தாடி'யப்பா போய்விட்டார்!
தங்கமகன் 'மோகன்'னும்;
ஓடிவிட்டான் எம்மைவிட்டு!
ஒத்தாசை பலதந்து
கூடியிருந்த மச்சான்
கூண்டினிலே வாடுகிறான்!
நாடிருக்கும்
நிலைமையிலே,
நமக்கென்ன தைப்பொங்கல்?
o-o

ஆ. கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- அந்நியர் பகை, அதிகார விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- கௌரவம், பணச்சிக்கல் நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பணச் சிக்கல். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், பலவித நஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம். | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, குடும்ப சுகம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, புதிய முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- கடன் சுமை, காரியத் தடை. | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- எதிர்பார்த்த நன்மை, பணவரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனக்கஷ்டம் நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், வெளியிட வாழ்க்கை. | பகல் | 11 | மணி |
| சனி- கடன்தொல்லை நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கேடு, பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- இனசன நன்மை, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பலவித பேறு, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், காரியநஷ்டம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(12.01.1997 தொடக்கம் 18.01.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன், வெள்ளி. |
| மகரம் | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - இராகு, செவ்வாய். |

14-01-97 ல் மகரச் சூரியன்.

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பலவித சிக்கல். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் பிரச்சனை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன் - பயனுள்ள செயல், பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்கலக்கம், காரிய நஷ்டம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு. | பகல் | 11 | மணி |
| சனி- தேகசுக நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- கௌரவக் குறைவு, பலவித நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், தொழில் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 3 | மணி |
| புதன்- பிரயாண மிகுதி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| வியாழன்- காரியசித்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. | 10 | மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வீண் கஷ்டம், பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| சனி- கௌரவம், தேகசுக நன்மை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் நஷ்டம், பணச் சிக்கல். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தேகசுகம் பாதிப்பு, பொருள் விரயம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், வீண் முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- வீண் முயற்சி, செலவுமிகுதி. | பி.ப. | 2 | மணி |


அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com





## குட்டிப் பாப்பா!

குட்டிப்பாப்பா குட்டிப்பாப்பா
தப்பும் பண்ணாதே!
கெட்டபிள்ளை என்ற பெயரை
நீயும் எடுக்காதே!

எப்போதுமே விளையாட்டிலே
இருக்கக்கூடாது!
நீ அடுத்த வீட்டுப் பிள்ளைகளை
அடிக்கக் கூடாது!

தினமும் பள்ளிக்கூடம்போய்
நல்லாய்ப் படிக்க வேணும்!
தாய்தந்தையை கடவுளராக
துதித்திடவும் வேணும்!

குறும்புகளை கொஞ்சம் நீயும்
குறைத்திடவும் வேணும்!
நல்லபிள்ளை என்ற பெயரை
நீயும் எடுத்திடவும் வேணும்!

—இளமுரசு—

தம்பி சற்றே மெலிவானால்-அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி- மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

## கழுதையும் நரியும்

அது ஒரு மழைக்காலம். எங்கு பார்த்தாலும் குட்டைகளும், சேறுமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. சேறும் சகதியுமாக இருந்த குட்டையொன்றுக்குள் ஒரு கழுதை விழுந்து விட்டது. அதனால் வெளியே வரமுடியவில்லை.

அப்போது அந்தப் பக்கமாக நரி ஒன்று வந்து கொண்டிருந்தது. சேற்றில் விழுந்து விட்ட கழுதையைக் கண்ட நரிக்கு ஒரே கொண்டாட்டம். 'இன்று எனக்கு நல்ல உணவு கிடைத்துவிட்டது' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டது.

கழுதைக்குப் பக்கத்தில் சென்ற நரி, "கழுதையாரே! உம்மை நான் அடித்துத் தின்னப் போகிறேன்," என்றது.

உடனே கழுதை நரியைப் பார்த்து, "இப்போது உம்மால் என்னைத் தின்ன முடியாது. சேற்றுக்குள் மாட்டிக் கொண்டிருக்கும் என்னை முதலில் வெளியே வர உதவி செய்யும்,"என்றது.

சரியென்று நரியும், கழுதையை சேற்றில் இருந்து வெளியே வர உதவி புரிந்தது.

"இப்போது நான் உம்மைத் தின்னலாமா?" என்று கேட்டது நரி.

"முதலில் என் உடலில் இருக்கும் அழுக்குகள் போகக் குளிக்க வேண்டும். அதற்குப் பின்னர் நீர் என்னைத் தின்னலாம்." என்றது கழுதை.

அதற்கு நரியும் ஒப்புக்கொண்டது. பக்கத்தில் இருந்த குளத்தில் கழுதை குளிக்கும் வரை நரி பார்த்துக் கொண்டிருந்தது.

குளித்து விட்டு வந்த கழுதை நரியைப் பார்த்து,

"நரியாரே! இந்தக் குளத்திற்குப் பக்கத்தில் பச்சைப் பசேலென்று புற்கள் வளர்ந்திருக்கின்றன. அவற்றை மேய்ந்தால் நான் நன்றாகக் கொழுத்து இருப்பேன். அப்போது நீ என்னைத் தின்றால் நான் மிகவும் ருசியாக இருப்பேன்," என்றது.


நரியும் கழுதை சொன்னதைச் சரியென்று ஏற்றுக்கொண்டது.

சிறிது நேரத்திற்குப் பின் கழுதை நரியிடம் வந்து,

"இப்போது நான்றெடி. என்னை நீர் தின்னலாம். என்னைத் தின்பதற்கு முதல் ஒரு போட்டி வைக்கிறேன். அதற்குப் பின்னர் என்னை நீர் தின்னும்." என்றது கழுதை.

"போட்டியா? சரி என்ன போட்டி என்று சொல்லும்," என்றது நரி.

"என்னை நீர் முதலில் மூன்று உதை உதைக்க வேண்டும். பின்னர் நான் உம்மை மூன்று உதை உதைப்பேன். இதுதான் போட்டி. போட்டி முடிந்ததும் என்னை நீர் தின்னலாம்." என்றது கழுதை.



முதலில் நரி கழுதைக்கு மூன்று உதை விட்டது.

அடுத்ததாக கழுதை நரிக்கு உதைக்க வேண்டும். நரியை உதைப்பதற்கு சிறிது தூரம் முன்சென்று, பின்னால் வேகமாக வந்து தனது பலத்தை எல்லாம் திரட்டி ஒரு உதை விட்டது கழுதை.

அவ்வளவுதான். நரிக்குக் கழுத்துத் திரும்பி விட்டது. வலிதாங்க முடியாத நரி 'இன்னும் இரண்டு உதைகளை என்னால் தாங்க முடியாது. நிச்சயமாக எனது உயிர் போய்விடும்', என்று பயந்து ஒரே ஓட்டமாக ஓடியது.

நரியிடமிருந்து தப்பித்துக்கொண்ட கழுதை மகிழ்ச்சியுடன் கத்திக் கொண்டு ஓடியது.

## வாரம் ஒரு நாடு
## செஷெல்ஸ்



**தலைநகர்**-விக்டோரியா
**பரப்பு**-308 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**-72,250
**மொழி**-கிரியோல், ஆங்கிலம், ஃபிரெஞ்சு.
**எழுத்தறிவு**-80%
**சமயம்**-கிறிஸ்தவம்
**நாணயம்**-ரூபி
**தனிநபர் வருமானம்**-5480 டொலர்.

**அமைவிடம்:**
செஷெல்ஸ், மேற்கிந்தியக்கடலில் அமைந்துள்ள 92 அழகிய தீவுக்கூட்டங்கள் அடங்கிய நாடு. இங்குள்ள தீவுகளில் 45 தீவுகள் பவளப்பாறைகளையும், 47 தீவுகள் கருங்கற் பாறைகளையும் உடையன.

**வரலாறு:**
1770 வரை செஷெல்ஸ் யாரும் குடியிராத நிலையில் இருந்தது. பின்னர் பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்தது. 1976ல் செஷெல்ஸ் சுதந்திரக் குடியரசாயிற்று. 23 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் உள்ளது. ஒரு கட்சி ஆட்சி. ஜனாதிபதி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**பொருளாதாரம்:**
தேயிலை, தெங்குப்பொருட்கள், கறுவா போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள். அத்துடன் மீன்பிடித்தலும் முக்கிய தொழில்களில் ஒன்று.

## அம்பர் கிறீஸ்

*** அம்பர் கிறீஸ் என்றால் என்ன?**
திமிங்கிலங்களின் வயிற்றிற்குள் இருக்கும் பசை போன்ற ஒரு பொருள்.

*** இது எப்படி உருவாகிறது?**
ஸ்குவிட் எனப்படும் நீர்வாழ் பிராணிகளை




திமிங்கலங்கள் மிகவும் விரும்பி உண்ணும். ஆனால் ஸ்குவிட்டுக்களின் உடலில் உள்ள ஓடு போன்ற பாகங்களை திமிங்கிலங்களால் ஜீரணிக்க முடியாது. இவை அவற்றின் வயிற்றிலேயே பசை போன்று தங்கி விடும். இதுதான் அம்பர் கிறீஸின் ஆரம்பப்பொருள்.

*** இது திமிங்கிலங்களில் இருந்து எப்படிப் பெறப்படுகிறது?**
இந்தப் பசைப்பொருளை திமிங்கிலங்கள் வாந்தி எடுத்து வெளியேற்றி விடும். இதனை கடற்றொழிலாளர்கள் கண்டெடுப்பார்கள். சில வேளைகளில் திமிங்கிலங்களைப் பிடித்து அவற்றை வெட்டியும் எடுக்கப்படுகிறது.

*** இது எதற்காகப் பயன்படுகிறது?**
ஆபரணங்கள் செய்வதற்கும், விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.

*** திமிங்கிலங்களைத் தவிர, வேறு முறையில் அம்பர் கிறீஸ் பெறப்படுகிறதா?**
ஆம். திமிங்கிலங்களிடமிருந்து அம்பர் கிறீஸ் எடுப்பது மிகவும் கடினம். எனவே இரசாயன முறைப்படி தயாரிக்கப்படுகின்றது. இருப்பினும் இயற்கையாகக் கிடைக்கும் அம்பர் கிறீஸுக்குத்தான் மதிப்பு அதிகம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.01.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 175
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 173

பரிசுக்குரியவர்:
கிருஸ்ணபிள்ளை நிலோஜன்,
பொத்துவில் நகர், பொத்துவில்-03.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மாஹிரா காஸிம், அல் கனேவல்பொல, கெகிராவ. | ஏ.ஒ. அஸ்மியா, பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், புத்தளம். |
| மதிவதனி பரமசிவம், தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா. | ராதிகா சிவானந்தன், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-4. |
| குணசீலன் ஜெனிட்டா, இந்து மகா வித்தியாலயம், பாண்டிருப்பு-01,கல்முனை. | வெ. சாந்தி, ஹய்பொரஸ்ட், இரண்டாம் பிரிவு, கந்தபொலை. |
| எம். முஹமட் நிலூஜான், கரு/ ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | எம்.எஸ். பஸ்மிலா பேகம், மாங்குளம், நேரியகுளம், வவுனியா. |
| கு. பிரகதீசன், ஆமர்வீதி தொடர்மாடி, கொழும்பு-12. | ஜெகநாதன் தர்ஷானந்தன், கரு/விஷ்னு மகா வித்தியாலயம், பெரிய நீலாவணை,கல்முனை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. மழையில் நனையும், வெயிலில் காயும். வெளியில் மலரும், வீட்டில் சுருங்கும். அது என்ன?
2. தாய் இனிப்பாள், மகள் புளிப்பாள், பேத்தி மணப்பாள். இவை என்ன?
3. அடி மலர்ந்து நுனி மலராத பூ. அது என்ன?
4. தள்ளிக் கத்தியால் தலையைச் சீவினான். வெட்டுப்பட்டவள் கருநாக்கை நீட்டினான். அது என்ன?
5. இரவு, பகல் விழித்திருக்கும். எப்போதும் ஒலித்திருக்கும். அது என்ன?
6. சேர்த்து வைத்துக்கொள் என்றால் கேட்காது. அவ்வப்போது கேட்டு அடம்பிடிக்கும். அது என்ன?
7. காவலுக்கு வேலியாகும். காலடிக்கு எதிரியாகும். அது என்ன?
8. காணப் பூப் பூக்கும். காணாமல் காய்காய்க்கும். அது என்ன?


**விடைகள்**

1. குடை 2. பால், தயிர், நெய்
3. வாழைப்பூ 4. பென்சில்
5. கடிகாரம் 6. வயிறு
7. முள் 8. நிலக்கடலை.

தொகுப்பு: எவ். றிஸ்வானா.

## ஒட்டகம்

பாலைவனக் கப்பல் என்றழைக்கப்படும் ஒட்டகம் வலுவான உடல் கொண்ட ஒரு மிருகம். வறண்ட பகுதிகளில் வாழும் இவற்றின் எடை 500 கிலோவிற்குக் குறையாமல் இருக்கும். இதன் திமில்களில் கொழுப்பு சேமித்து வைக்கப்படுகிறது. உணவில்லாத போது இது பயன்படுகிறது. நீர் அருந்தாமல் பலநாட்கள் உயிர் வாழும். நீர் கிடைக்கும் போது நிறைய அருந்தும்.



இதற்கு மூன்று இமைகள் உண்டு. கண்களுக்கு உள்ளே அமைந்திருக்குக்கும் திரைபோன்ற இமை தூசி விழாமல் பாதுகாக்கின்றது. இவற்றின் முதுகு வளைந்து இருந்தாலும் முதுகெலும்பு அவ்வாறு இராது. அது நேராகவே இருக்கும்.

ஒட்டகத்தின் கால்கள் மணலில் புதையாதபடி அமைந்திருக்கும். மூக்குத் துவாரத்தில் மணல் புகுந்துவிடாமல் தடுத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு இதன் மூக்கு மூடித்திறந்து கொள்ள முடியும்.

ஆசிய, ஆபிரிக்க பாலைவனப் பகுதிகளில் இவை அதிகம் உள்ளன. இதன் இறைச்சி, பால் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குட்டி போடும். பிறந்த ஒட்டகக்குட்டி 3 1/2 அடி உயரம் இருக்கும். பிறந்த 24 மணிநேரத்தில் எழுந்து நடக்க ஆரம்பித்து விடும்.

ஒட்டகத்தின் உணவு தானியங்களே.

## லியானார்டோ டா வின்ஸி

இரு வாரங்களுக்கு முன்னர் எமது 185வது முரசில் வெளியான பாப்பா முரசில் உலகப் புகழ்பெற்ற புன்னகை ஓவியம் மோனா லிஸா பற்றிய தகவலைத் தந்திருந்தோம். இந்த ஓவியத்தை வரைந்த மாமேதை லியானார்டோ டா வின்ஸி பற்றிய தகவல்களை இன்று தருகிறோம்.

மோனாலிஸாவைத்தவிர 'இயேசு பெருமானின் கடைசி இராப்போசனம்' எனும் ஓவியத்தையும் டாவின்ஸியே வரைந்தார். இவர் ஓவியக்கலையில் மட்டும் சிறந்தவர் என்று சொல்லிவிட முடியாது. கணிதத் துறை, பொறியியல், மற்றும் வானசாஸ்திரம் ஆகியதுறைகளிலும் சிறந்து விளங்கினார். இவற்றோடு மட்டுமல்லாமல் உடற்கூற்றுவியலிலும் விற்பன்னராகவிருந்தார். இயற்கையின் மீது பெருவிருப்புக்கொண்டவர். காடு, மலை, நதிக்கரை ஆகிய இயற்கை அழகு நிறைந்த இடங்களில் நேரம் போவதே தெரியாமல் சுற்றித்திரிவார். பூக்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும் தனது ஓவியக் கருப்பொருட்களாக் கொண்டு சித்திரங்களைத் தீட்டுவார்.

இத்தாலி நாட்டின் மறுமலர்ச்சியாளர்களில் லியானார்டோ டா வின்ஸி தலைசிறந்த ஒருவராக வரலாறு பொறித்துள்ளது. இசைத்துறை, எழுத்துத்துறை, விஞ்ஞானம், வானசாஸ்திரம் மற்றும் வேதாந்தம் ஆகிய- ஒன்றுக் கொன்று மாறுபட்ட துறைகளிலும் டாவின்ஸி பரிச்சயமுடையவராகத் திகழ்ந்தார். யுத்தங்களில் பயன்படுத்தப்படும் தாங்கி மற்றும் விமானத்திலிருந்து கீழே பாய்வதற்குப் பயன்படுத்தப்படும்



பாரசூட் ஆகியவற்றுக்கான வடிவமைப்புகளையும் இவர் கற்பனையில் கண்டு சித்திரமாக வரைந்தார்.

இத்தாலியிலுள்ள வின்ஸி என்ற இடத்தில் 1452ல் பிறந்த டாவின்ஸி 1519ல்- தனது 67 வது வயதில் காலமானார்.



படிப்பகம்

www.padippakam.com

# அனிதா இளம் மனைவி



## நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன் சுஜாதா

## 09

### இதுவரை

அவர்கள் இளம் காதலர்கள்-ஆனந்த்-மல்லிகா.

இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப் பகுதிக்குச் சென்றனர். அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச் சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாதான் தன் அப்பாவை- சொத்துக்காக கொலைசெய்திருக்கிறாள் என்று சந்தேகிக்கிறாள் மோனிக்கா.

கணேஷ் அனிதாவிடம் விசாரணை நடத்துகிறான். அனிதாவின் இளமையும், அழகும் கணேஷையும் கலவரப்படுத்துகின்றன. விசாரணையை முடித்து விட்டுச் சென்ற கணேசுக்கு அவசரமாக போன் செய்கிறாள் அனிதா. உடனே அனிதாவிடம் செல்கின்றான் கணேஷ். தன்னை யாரோ கொல்ல முயற்சித்ததாகக் கூறும் அனிதா அவனைத் தன்னுடன் தங்குமாறு வேண்டுகிறாள். அங்கே இரவு அந்த மர்ம மனிதனின் தாக்குதலு க்கு ஆளாகின்றான்.

மறுநாள் இன்ஸ்பெக்டர் ராஜேஸைச் சந்திக்கும் கணேஷ் மீண்டும் அனிதாவின் வீட்டுக்குச் செல்கிறான். பாஸ்கர் நொண்டியபடி நடப்பதை அவதானிக்கிறான்.

உயில் விஷயம் பற்றி மோனிக்கா வினவ, குளித்துவிட்டு வந்த அனிதாவின் மேல் கணேஷின் கவனம் திரும்பவே, அவனைக் கோபமாகத் திட்டித்தீர்த்துவிட்டு வெளியேறுகிறாள்.

அனிதாவை மணக்க விரும்புவதாக கூறுகிறான் கணேஷ்.

மற்றொரு திருமணத்தை மறுக்கும் அனிதாவுடன் உரையாடிவிட்டுப் புறப்படும் கணேஷ் அங்கே பாஸ்கரைக் காண்கிறான்.

வெறுப்படைந்த கணேஸ் பாஸ்கருடன் சண்டையிடுகிறான். அன்றிரவே மீண்டும் அனிதாவீடு திரும்பும் கணேஷ் மோனிக்காவுடன் ஷர்மாவின் அறையைச் சோதனையிடுகிறான்.

இனி......

"போட்டோ அல்பம் ஏதாவது இருக்கிறதா?"

"எதற்கு?"

"அந்த கோவிந்த் போட்டோ தென்படுமா என்று பார்க்க வேண்டும்."

"பார்க்கிறேன்."

அலமாரியில் பிஸினஸ் மானேஜ்மென்ட் புத்தகங்கள் தான் அதிகம் இருந்தன. அப்புறம் பீரோவில் நிறைய ஸுட்களும் டிரஸ்ஸிங் கவுன்களும் தொங்கின.

மோனிக்கா கன்னா பின்னாவென்று பொருட்களை இறைத்தாள்.

"அந்த இரும்புப் பெட்டியின் சாவி யாரிடம் இருக்கும்?"

"அனிதாவிடம் என்று நினைக்கிறேன்."

வேறு போட்டோ அல்லது டைரி எதுவும் கிடைக்கவில்லை.

"எல்லாவற்றையும் கலைத்து விட்டாய்!" என்றாள் மோனிக்கா.

"கலைத்தது நீதான். ஆனால் எனக்கு உபயோகமாகக் கூடிய எதுவும் எனக்குத் தென்படவில்லை. இந்தப் போட்டோவை நான் எடுத்துக் கொள்ளலாமா?"

"அப்பாவின் போட்டோவா? அது எதற்கு?"

"சும்மா!"

மோனிக்கா சொன்னாள்: "அனிதாவின் அறையைச் சோதனை போடலாமா?"

"அனிதா வந்துவிட்டால்?"

"நான் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொள்கிறேன். கார் வரும் சப்தம் கேட்டால் நிறுத்தி விடலாம்."

"காரில் போயிருக்கிறாளா, எங்கு?"

"தெரியாது. சொல்லவில்லை. நானும் அவளும் பேசுவதில்லையே."

"தனியாகவா போனாள்?"

"பாஸ்கருடன்."

"தட் ராட்!"

"வா, அவள் அறையைச் சோதனை போடலாம்," என்றாள் மோனிக்கா ஆவலுடன்.

அனிதா இல்லாத அனிதாவின் அறையில் கூட அனிதாவின் சில பிரத்தியேக சுபாவங்கள் பரவி இருந்தன.

சுவரில் ஒரு காகிதத்தில் ஒரு சில வரிகள் எழுதி லூஸாக ஆணியில் அழுத்தப்பட்டிருந்தது.

**"வஸந்தம் சென்று விடும். ஆனால்**
**பூக்கள் திரும்ப மலரும்.**
**யௌவனம் சென்று விடும். அந்த**
**நாட்கள் திரும்பி வரா."**

அப்புறம் அவள் படுக்கை மிகச் சுத்தமாக இருந்தது. பாம்பே டையிங்கின் மிக அழகான விரிப்பு, படுக்கை அருகில் புத்தகம் (கபீரின் பாடல்கள்- தாகூர் ஆங்கிலப்படுத்தியது) அப்புறம் சுவரில் ஒரு படத்தில் ஒருசிறிய பெண் இருபுறமும் சிறிய பையன்கள் நிற்க நடுவில் உட்கார்ந்திருந்தாள். அனிதா ஏழு வயதில்.

மேஜைமேல் காகிதங்கள் சிறப்பான மஞ்சளில் இருந்தன. அவளுக்குப் பிடித்த வர்ணம் போலும். மைக் கூடு வினோதமாக இருந்தது. மேஜையின் அறைகள் பூட்டப்பட்டிருந்தன. எல்லா அறைகளும், அவள் செருப்பு வெல்வெட் மோகாஸின் ஜிகினாவுடன் அவள் மென்மையான கால்களை ஞாபகப்படுத்தின. பாத்ரூமில் ஆச்சரியகரமான அலங்கார சாதனங்கள் மிகவும் கம்மியாக இருந்தன. இருந்தவை மிகவும் உயர்ந்த பண்டங்கள். கண்ணாடி அலமாரிக்குள் சின்னச் சின்ன அழகான பொம்மைகள். வார்ட்ரோப் நிறையப் புடவைகள்- பெரும்பாலும் மஞ்சள் அல்லது நீல நிறம். பகட்டு அதிகமில்லாத விலை அதிகமான புடவைகள். ஸல்வார் கமிஸ் அணிவாளா என்ன? அப்புறம் ஒரே சீராகத் தைக்கப்பட்ட எவ்வளவு ரவிக்கைகள்! அவைகளை விலக்கி, அவற்றின் பின்னே உள்ளே ஏதாவது கதவு தெரிகிறதா என்று பார்த்தான்.

"இந்த டிராயருக்குள் என்ன இருக்கும்?" என்று கேட்டாள் மோனிக்கா.

"பூட்டி இருக்கிறதே."

"சாவி இல்லை."

"சாவி இல்லாமல் நான் திறப்பேன். ஓர் ஆணி வேண்டும்."

"ஆணி தருகிறேன்."

"அப்புறம் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிரு, யாராவது வருகிறார்களா என்று."

கணேஷ் அந்த மேஜையை சுலபமாகத் திறந்தான். முதல் அறையில், ஒரு டயரி இருந்தது. முதல் பக்கத்தில் அனிதா அந்தரங்கம் என்றிருந்தது. அதைப் படிக்க அவன் முற்படவில்லை. மூன்று இன்ஸ்யூரன்ஸ். பாலிஸிகளின் தொகையைக் கவனித்தான். மூன்றும் சேர்ந்து மூன்றரை லட்சத்துக்குக்கானது. மூன்றிலும் வாரிசுதாரரின் பெயர் சமீபத்தில் மாற்றப்பட்டிருந்தது. அனிதா ஷர்மா. அப்புறம் அந்த பாலிஸிகளுடன் சம்பந்தப்பட்ட சில காகிதங்களும் இருந்தன.

அடுத்த செருகறையில் சில சம்பந்தமில்லாத பொருள்கள் இருந்தன.

திடீரென அதைப் பார்த்தான். திடுக்கிட்டான். உடனே மூடிவிட்டான்.

மேஜையின் மற்றொரு அறையில் அழகான பச்சை அட்டை போட்ட போட்டோ ஆல்பம் இருந்தது. அதைத் திறந்தான். முதல் பக்கத்தில் ஷர்மாவும் அனிதாவும் மாலை அணிந்து கொண்டு பெரிய என்லார்ஜ்மெண்ட். அடுத்த பக்கங்களில் மேலும் ஷர்மாவும் அனிதாவும். மலைப்பிரதேசங்களில், படகுகளில், ஹோட்டல்களுக்கு முன், விமான நிலையத்தில், நீர் வீழ்ச்சிகளுக்கு முன், பார்ட்டிகளில். எவ்வளவோ போட்டோக்கள். எவ்வளவோ மனிதர்கள். மோனிக்கா ஒரு சில போட்டோக்களில் இருந்தாள். இன்னும் சின்னவளாக, காதில் வளையத்துடன் நீண்ட கூந்தலுடன், எவ்வளவு மாறி இருக்கிறாள்!

"மோனிக்கா இங்கே வா, ஒரு நிமிடம்."

"என்ன?"

"இந்தப் போட்டோ ஆல்பத்தை முழுவதும்பார். இதில் எனக்கு ஒரே ஒரு போட்டோ வேண்டும். அந்த கோவிந்தின் போட்டோ இவைகளில் ஏதாவது ஒன்றில் இருக்கிறானா? சீக்கிரம்."

மோனிக்கா அவசர அவசரமாகப் புரட்டினாள்.

"இதுதான்," என்று சுட்டிக்காட்டினாள்.

"எனக்குத் தேவை கோவிந்த்."

"இதோ இவன்தான்."

எஜமானருக்கு அருகில் பயபக்தியுடன் பாதி மறைந்து நின்று கொண்டிருந்தான் கோவிந்த். வெய்யிலுக்கு நெற்றியைச் சுருக்கிக் கொண்டு நெருக்கமாகத் தலை வெட்டிக் கொண்டு வெள்ளை ஷர்ட் அணிந்து மெல்லிய மீசையுடன் அவர் அருகில் சற்றுப் பின் தங்கி நின்று கொண்டிருந்தான்.

கணேஷ் அந்தப் புகைப்படத்தைச் சட்டென்று உருவிப் பைக்குள் போட்டுக் கொண்டு ஆல்பத்தை மூடி அதை மேஜை அறைக்குள் திரும்ப வைத்து அதையும் மூடினான்.

"கடிதங்கள் இல்லையா ஏதும்?" என்றாள் மோனிக்கா.

"நிறைய இருக்கின்றன. டயரி கூட இருக்கிறது."

"எங்கே, பார்க்கலாம்."

"வேண்டாம், கூடாது, நியாயமாகாது."

"கள்ளச் சாவி போட்டுத் திறப்பது மட்டும் நிய்ாயம்! நான் பார்க்கத் தான் போகிறேன்....." வெளியே கார் ஹாரன் சத்தம் கேட்டது. "ஓ நோ!" என்றாள்.

"க்விக். விளக்கை அணை. அறையை விட்டு வெளியே செல்!" என்றான்.

அனிதாவும் பாஸ்கரும் உள்ளே நுழைந்தபோது கணேஷ் ஹாலில் ஒன்று மறியாதவன் போல வீக்லியைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"ஹலோ மிஸ்டர் கணேஷ்!"

"ஹலோ அனிதா! இந்த பாஸ்கரை நம்பி இவனுடன் வெளியே செல்கிறீர்களே, இது நியாயமா?"

"எங்கே மோனிக்கா?"

"அவள் என்னுடன் பேசுவதில்லை. உள்ளே இருந்தே என்னைப் பார்க்காமல் பதில் சொன்னாள்."

"எதற்கு வந்தீர்கள்?"

"உங்கள் காவலுக்காக, உங்களைத் துஷ்டர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக," என்று பாஸ்கரைப் பார்த்துச் சொன்னான்.

அந்த டிராயர் பூட்டப்படவில்லை. அதை அவள் திறக்க முற்படக்கூடாது. அவன் அதைப் பார்த்தது அவளுக்குத் தெரியக் கூடாது. பார்த்ததின் அதிர்ச்சி அவனுக்கு இன்னும் அடங்கவில்லை. அந்த அதிர்ச்சி அதிகப்படியான இதயத் துடிப்பாக வெடித்துக் கொண்டிருந்தது. எதிரே பேசுபவர்களின் வார்த்தைகளில் கவனமில்லாது எண்ணங்கள் சுழல்களாக விரிந்து கொண்டிருந்தன. "கணேஷ், நீ இங்கேயே படுத்துக் கொள்ளப் போகிறாயா?"

"ஆம்." என்றான், கேட்டது பாஸ்கர்.

"அதற்கு அவசியம் இருக்காது," என்றான் பாஸ்கர்.

"இதைச் சொல்ல வேண்டியது நீயில்லை."

அனிதா மேலே சென்றபோது அவனுக்கு இன்னும் இதயம் படபடத்தது. அவள் மேஜைக்கு இப்பொழுது செல்வாளா? ஏதாவது எழுத வேண்டுமென்றால்தான் மேஜைக்குப்போகும் அவசியம் ஏற்படும். இந்த இரவு நேரத்தில் அவள் எழுத முற்படுவாளா?

நான் பார்த்தது தப்பு.

இல்லை. நான் பார்த்தது நல்லது. இனி நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். யாரிடம்? பாஸ்கரிடமா, அனிதாவிடமா? மோனிக்காவிடமா? இந்த மூவரையும் தவிர வெளியே இருக்கும்- இருப்பதாக அவன் நினைக்கும்- அந்த நான்காவது ஆசாமியிடமா? அவன் அல்லது அவள் யார்?

"கணேஷ், சற்று மேலே வாருங்கள்," என்று அனிதா கூப்பிட்டாள்.

'கண்டுபிடித்து விட்டாள், நான் அவள் அறையைச் சோதனை போட்டதைக் கண்டு பிடித்து விட்டாள். என்ன கேட்கப் போகிறாள்? என்ன பதில் சொல்லப் போகிறேன்?'

அவள் தன் டிரஸ்ஸிங் டேபிள் அருகில் உட்கார்ந்துகொண்டு தன் கழுத்து மாலையைக் கழற்றிக் கொண்டிருந்தாள். அந்த மேஜையினருகே இல்லை.

"கணேஷ், ஏதாவது தகவல் தெரிந்ததா?"

"எதைப்பற்றி அனிதா!"

"அவர் மரணத்தைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தீர்களே?"

"நான் பொலிஸ் ஆபீசரையும் சந்தித்தேன். எல்லோரும் சந்தேகிப்பது அந்த கோவிந்த்தான். எனக்கும் அவனைக் கண்டு பிடிப்பதுதான் முதல் பிரயத்தனமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. போலிஸாருக்குக் கொடுக்கப்பட்ட வர்ணனை போதாது என்கிறார்கள். போட்டோ கேட்கிறார்கள். அவன் போட்டோவே இந்த வீட்டில் கிடையாதா?"

"எனக்குத் தெரிந்தவரை கிடையாது. நான் அவன் போட்டோ எதையும் பார்த்ததாக ஞாபகமில்லை."

கணேஷ் தன் பையில் இருந்த போட்டோவை தொட்டுக் கொண்டான்.

எதற்காகப் பொய் சொல்கிறாள்? அந்த ஆல்பத்தை அவள் பார்த்ததே இல்லையா? அனிதாவின் முதல் பொய்! எல்லோரும் பொய் சொல்கிறார்கள். மோனிக்கா? அவளுடைய முதல் பொய் என்ன?

அனிதா அவன் முன்னாலேயே ஸாரியிலிருந்து நைட் கவுனுக்கு மாறிக் கொண்டிருந்தாள். அந்த மாறுதலை அவள் நிகழ்த்தும் பாணி இயல்பாக, இயற்கையாக இருந்தது. அதே சமயம் அவ்வப்போது தெரிந்த அவள் உடலமைப்பின் அந்தரங்க வளைவுகள் கணேஷின் நரம்புகளைச் சோதித்தன்.

அனிதா தன் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டு ஒரு பூனைக்குட்டி போல் சோம்பல் முறித்தாள். எவ்வளவு மெல்லிய கவுன் அணிந்திருக்கிறாள்!

"கணேஷ், இங்கே வாருங்கள்."

'போகாதே! போகாதே, மறந்து விட்டாயா? அந்த மேசை இழுப்பறையில் நீ என்ன பார்த்தாய் கணேஷ்? என்ன பார்த்தாய்?'

நான்கு நாக்குகள் படைத்த சிறிய சவுக்கு!

"குட்நைட், அனிதா!"

கணேஷ் வெளியேறினான்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. செல்வராஜா.
வயது: 23
முகவரி: போட்டோகிரபி டிவிஷன், ரி.ஆர்.ஐ.தலவாக்கலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: மி. லலிதா சவரிராஜா.
வயது: 24
முகவரி: புனித அந்தோனியார் கோவில் வீதி, கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ரி. யசோதரன்.
வயது: 25
முகவரி: P.O.BOX-946, DAHARAN- 31932, K.S.A.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். ரம்ஸி.
வயது: 20
முகவரி: 40/6, கோங்கமர வீதி, காலி.
பொழுதுபோக்கு: சினிமா, வானொலி.



பெயர்: ஹஸ்னியா பானு.
வயது: 25
முகவரி: 80/1, பழைய வீதி, பேருவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எம். ஹரூஸ்.
வயது: 26
முகவரி: P.O.BOX-508 PINCODE-211, SALALAH, SULTANATE OF OMAN.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, கரப்பந்து.

பெயர்: எம். பாமிஸ்.
வயது: 15
முகவரி: விருதோடை, மருதங்குளி, புத்தளம்.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஆர். பயரோஸ்.
வயது: 20
முகவரி: 1ம் வட்டாரம், தக்வா நகர், புல்மோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: என். மோகனகாந்த்.
வயது: 25
முகவரி: HINDEN BURG. STR-61. 41061.MONCHAN GLADBCACH, GERMANY.
பொழுது போக்கு: உதைப்பந்து.

பெயர்: ஆர். லிங்கேஸ்வரன்.
வயது: 20
முகவரி: 5/5, செரண்டிப் டிவிஷன், ஹாலி-எல.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். தயாபரன்.
வயது: 16
முகவரி: ஆரையம்பதி-1, ஆரையம்பதி.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், பேனா நட்பு.

பெயர்: முஹமட் இல்ஹாம்.
வயது: 19
முகவரி: 61/4, எஸ்.டி.பேர்னாட் மாவத்தை, கொழும்பு-15.
பொழுது போக்கு: பேனா நட்பு, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# தூக்கு மேடைக் குறிப்பு

1

ஜூலிஸ் பூசிக்

**இதுவரை**

**செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர். ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.**

**அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.**

**அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், விசாரணை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.**

**சிறையிலிருந்து எழுதப்பட்ட இக் குறிப்புகள் சிறைக் காவலரின் உதவியுடன் வெளியே கடத்தப்பட்டன.**

**இனி.....**

இராணுவச் சட்டம் இருக்கும் போது ஒருநாள் 'என் அதிகாரி' என்னை வெளியே அழைத்துப் போனான்.

பலவிதமான மலர்கள் பூத்துக் குலுங்க ஜுன் மாதம் மிகவும் பொலிவுடன்- ரம்மியமாக இருந்தது. அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. மாலை நேரம்.

ஞாயிறு விடுமுறையைக் கழித்துவிட்டு ஏராளமானவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் சூரியனின் வெதுவெதுப்பிலும், நீரிலும், காதலரின் கரங்களிலும் நாள் முழுவதையும் கழித்துவிட்டு களிப்புடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய முகங்களில் சாவு மட்டுமே தென்படவில்லை. அது அவர்களிடையே நடமாடியபோதிலும், அது சமயம் வரும்போது அவர்களில் ஒருவரைக் குறிவைத்து அம்பு எய்தபோதும், அதைப்பற்றி அவர்கள் நினைப்பதாகத் தெரியவில்லை.

நான்கு சுவருக்குள் அடைபட்ட சிறை வாழ்க்கையைவிட்டு, களிப்புடன் கரை புரளும் இந்த மனித வெள்ளத்தின் நடுவே நீந்துகிறேன்.

இங்கு நான் பார்ப்பது வாழ்வு. நான் தற்போது விட்டு வந்திருப்பதும் வாழ்வுதான். எவ்வளவுதான் பலமாக நசுக்கப்பட்டாலும் வாழ்வு அழிக்க முடியாதது. ஒரு இடத்தில் அது நசுக்கப்படலாம். ஆனால் நூறு இடங்களில் அது வெடிக்கிறது.

வாழ்வு சாவைவிட உறுதியாக நிலைக்கிறது. அது கசக்க வேண்டுமா?

மேலும் சிறை அறைகளில் வசிக்கும் நாங்கள்- பயங்கரத்தின் நடுவில் வசிக்கும் நாங்கள் தேசத்தின் ஏனையோரைவிட சிறப்பான விசேஷ அச்சில் வார்க்கப்பட்டவர்களா?

எப்போதாவது சில சமயம் நான் என் விசாரணைக்காக ஒரு பொலிஸ் காரில் அழைத்துச் செல்லப்படுவேன். அதில் காவல்காரன் நல்ல முறையில் நடந்து கொண்டான்.

காரின் ஜன்னல்வழியாகத் தெருவை, கடைகளை, மலர்க்கூடைகளை, நடமாடும் கூட்டத்தை, பெண்களை என்னால் பார்க்க முடிந்தது.

என்றைக்கு ஒன்பது ஜோடி அழகான கால்களை எனக்கு எண்ண முடிகிறதோ, அன்றைக்கு நான் கொல்லப்பட மாட்டேன் என்று ஒரு சமயம் எனக்குள் நான் சொல்லிக் கொண்டேன்.

அவர்கள் வழக்கமாக என்னை வெகு நேரம் கழித்தே அறைக்குத் திரும்பி அழைத்து வந்தனர். ஒவ்வொரு நாளும் நான் வரும் வரையில், 'வருவேனோ வர மாட்டேனோ' என்று என் சக கைதியான 'அப்பா' கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்.

என்னைக் கண்டதும் கட்டியணைத்துக் கொள்வார். நான் கேள்விப்பட்ட விஷயங்களை அவருக்குச் சொல்வேன். கோபிலிஸியில் கொல்லப்பட்டவர்கள் யார் யார் என்பதையும் தெரிவிப்பேன்.

பின்னர் சாப்பாட்டை- மூக்கைப் பிடித்துக் கொண்டே பசியின் கொடுமையினால் ஒருவாறு புசிப்போம். மகிழ்ச்சிகரமாக ஒரு பாட்டுப் பாடுவோம். அல்லது கோபமாகவோ, துயரமாகவோ இருந்தால் பதினைந்தாம் புள்ளி விளையாடுவோம்.

அந்த ஆட்டம் எங்கள் கவனத்தை சிறிது நேரம் கவர்ந்திருக்கும்.

எந்த விநாடியிலும் கதவு திறக்கப்பட்டு, எங்களில் ஒருவரை சாவின் குரல் கூப்பிடும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் இப்படித் தான் மாலை நேரத்தைக் கழித்தோம்.

சாவின் குரல் எந்த விநாடியும் கூப்பிடக் கூடும். "ஏய் நீ, அல்லது நீ புறப்படு! பொருட்களை மூட்டைகட்டிக் கொள். தயாராகு!"

## குணவிசேஷங்கள்

சிறையில் இருவித வாழ்க்கைகள் உண்டு. ஒன்று அறைகளில் பூட்டப் பட்டு, உலகத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தனிமையில் வைக்கப்பட்டிருக்கிறது. எனினும் அரசியல் கைதிகளைப் பொறுத்த வரையில் அது உலகத்துடன் மிகவும் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. உலகத்துடன் இணைந்தும், பிணைந்தும் உள்ளது.

மற்றது-அறைகளுக்கு வெளியே நீண்ட தாழ்வாரத்தில், ஒரே உடுப்பணிந்து இயங்கும் காவலர்களின் வாழ்க்கை. இந்த வாழ்க்கையைப் பற்றித்தான் இப்போது விபரிக்க விரும்புகிறேன்.

வெகு நாட்கள்வரையில் எங்கள் பெயர்கள் அவர்களுக்குத் தெரியாது; அவர்கள் பெயர்கள் எங்களுக்குத் தெரியாது. இது ஒரு பிரமாதம் அல்ல.

நாங்கள் அவர்களுக்கு சில பரிகாசப் பெயர்களை யோசித்து வைத்தோம். சில பெயர்களை நாங்களே கொடுத்தோம். மற்றவை எங்களுக்கு முன் இந்தச் சிறையில் இருந்தவர்கள் கொடுத்திருந்தனர்.

காவலாளிகளில் சிலர் வெவ்வேறு அறைகளில் வெவ்வேறு பரிகாசப் பெயர்களால் அழைக்கப்பட்டனர். அவர்கள்தான் இரண்டும் கெட்டான் பேர்வழிகள்: மீனுமல்லாமல், கோழியுமல்லாமல் இருப்பவர்கள்.

ஒரு அறைக்கு சிறிது மேலதிக உணவு தருவார்கள். இன்னொரு அறைக்கு கொடுக்க வேண்டியதையே கொடுக்க மறுத்து முகத்தில் அடிப்பார்கள்.

கைதிகளுடன் சில விநாடிகள் மட்டுமே அவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டாலும் அந்த சில விநாடிகளில் அவர்கள் நடந்துகொள்கிற முறைதான் அவர்களைப் பற்றிய நிரந்தரமான ஒருதலையான அபிப்பிராயங்களை உருவாக்குகின்றன.

அந்த அபிப்பிராயம்தான் கேலிப் பெயர்களைக் கண்டுபிடிக்கத் தூண்டுகிறது. சில சமயம் ஒரே காவலாளிக்கு எல்லா அறைகளும் ஒரே பெயரைக் கண்டு பிடிக்கின்றன. அந்தப் 'பாக்கியம்' பெற்றவர்கள் நல்லதோ கெட்டதோ மற்றக் காவலாளிகளை விட பிடிவாதமான குணங்களையும், நடத்தைகளையும் உடையவர்கள்.

இந்த நபர்களைச் சற்றுக் கவனிப்போம். இந்தச் சின்னஞ்சிறு உருவங்களை உற்றுப் பாருங்கள்.

இவர்கள் ஏதோ தற்செயலாகச் சேகரிக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் எல்லோரும் பாசிசத்தின் அரசியல்- இராணுவத்தின் ஒரு பகுதி. இவர்கள் வெகு கவனமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் இந்த ஆட்சியின் தூண்கள். பாசிசத்தைத் தாங்கி நிற்கும் முட்டுக்கால்கள்.

## முதலுதவி ஆசாமி

பெயர் ரியஸ்- நெட்டையன் 1 தடியன். எஸ்.எஸ்.படையில் ரிசர்வ். இவனுக்கு ஒங்ஞா மிங்ஞா குரல்.

சிறை வைத்தியனுக்குப் பதில் அடிக்கடி இவன்தான் அனுப்பப்பட்டான். இந்த இடத்தில் நான் முதன் முதல் சந்தித்த ஆசாமி இவன்தான்.

என்னை இவன் அறைக்குள் பரபர வென்று இழுத்துப் போனான். படுக்கையில் கிடத்தினான். காயங்களுக்கு மருந்து போட்டான். வீக்கத்தை வடியவைக்க மருந்து செய்தான்.

என்னுடைய உயிரைக் காப்பாற்ற இவன் உதவியிருக்கக்கூடும். இது எதைக் குறிக்கிறது? இவனுடைய மனிதாபிமானத்தையா? அல்லது முதல் உதவிப் பயிற்சியையா? எனக்குத் தெரியாது.

ஆனால் இவன் யூதக் கைதிகளின் பல்லை உடைத்தபோது, அவர்களுக்கு சாதாரண உப்பையும், மணலையும் மருந்தாகக் கொடுத்தபோது, நிச்சயமாக இவன் பாசிசத்தின் சொரூபத்தையே வெளிப்படுத்தினான்.

## ஸ்மார்டி

இவன் ஒரு டிரைவர். ஜெர்மனியன். சள சளவென்று பேசிக்கொண்டே இருப்பான். இளகிய மனது. எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவந்தபோது பல்லை இளித்தவாறு அறையில் நுழைவான்.

ஒருபோதும் இவனால் எங்களுக்குத் தொந்தரவு இல்லை.

ஒரு அற்ப விசயத்தை தன்னுடைய எஜமானர்களுக்கு ஓடிப்போய் தெரிவிப்பதற்காக, இவன் மணிக்கணக்கில் அறைக்கு வெளியில் கதவில் காதை வைத்து ஒட்டுக்கேட்டுக் கொண்டு நிற்பான்.

**சாவின் குரல் எந்த விநாடியும் கூப்பிடக்கூடும். "ஏய்! நீ அல்லது நீ புறப்படு. பொருட்களை மூட்டைகட்டு. தயாராகு!"**

## கோக்லர்

இவனும் ஒரு ஜெர்மனியன்தான். சுலபமாகப் பிழைக்கும் பொருட்டு இவன் பாசிஸ்டுக்களுடன் சேர்ந்தான். ஆனால் அது இவன் நினைத்ததைவிட சிக்கலாகிவிட்டது.

ஜெர்மன் பாசிஸ்டுக்களின் வெற்றியின் பேரில் இவன் பந்தயம் கட்டினான். ஆனால் அது செத்த குதிரையின்மேல் கட்டிய பந்தயம்போல் ஆகிவிடும்போலிருந்தது.

இவனுக்கு நாடி தளர்ந்துவிட்டது. சந்தடி செய்யாத செருப்புக்கால்களால் அடிமேல் அடிவைத்து இரவு நேரத்தில் இவன் தாழ்வாரத்தில் காவல் புரிகிறபோது, தன்னுடைய துயர எண்ணங்களை தன்னையறியாமலேயே விளக்கின் மீதுள்ள தூசிபடிந்த மூடியில் பதியவைத்துவிட்டான்.

அவற்றில் ஒன்றில் "எல்லாம் நாற்றம்!" என்று கவிதைத் தொனியில் எழுதிவிட்டு தற்கொலை செய்து கொள்ளலாமா என்று சிந்தித்தான்.

பகலில் கைதிகளையும், காவலாளிகளையும் ஏற்றிக்கொண்டு இவன் காரை ஓட்டிச் செல்லும் போது காச் மூச்சென்று கூச்சல் போடுகிறான்.

## ரோஸ்லர்

மனதில் களங்கம் இல்லாமல் சிரிக்கும் சிலரில் ஒருவன் ரோஸ்லர். நெட்டையான மெலிந்த தேகம். துருத்தி ஓசை போல் குரல். முன்னர் ஜெர்மனியில் பஞ்சாலைத் தொழிலாளியாக இருந்தவன்.

அறைக்குள் வந்து மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பான். பேச்சைக் கவனியுங்கள்.

"எப்படி இங்கு நான் வந்தேன்? பத்து வருடங்களுக்கு மேல் எனக்கு உருப்படியான வேலை ஒன்றும் கிடைக்கவில்லை.

ஒரு குடும்பம் முழுவதும் இருபது வெள்ளிக்காசுகளைக் கொண்டு ஜீவிக்க வேண்டுமானால், வாழ்க்கை எப்படிப் பட்டதாக இருக்கும் என்பது உனக்கே தெரியும்.

பிறகு அவர்கள் ஒருநாள் வருகிறார்கள். "உனக்கு நாங்கள் வேலை தருகிறோம். எங்களுடன் வா" என்று சொல்கிறார்கள். நான் போகிறேன். அவர்கள் எனக்கு வேலை தருகிறார்கள்.

குறைந்த பட்சம் எங்களால் சாப்பிட முடியும். வீடு ஒன்று வைத்திருக்க முடியும். நாங்கள் திரும்ப உயிர் வாழ முடிகிறது.

யுத்தமா? ஓ.. நான் யுத்தத்தை விரும்பவில்லை. மற்ற ஜனங்கள் சாகவேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. நான் விரும்பியதெல்லாம், நான் வாழவேண்டும் என்பதுதான்.

என்ன? விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நான் யுத்தத்துக்கு உதவி பண்ணுகிறேனா? நான் என்ன செய்வேன்? இங்கு யாருக்காவது தீங்கு இழைத்திருக்கிறேனா?

நான் போய்விட்டால் என் இடத்திற்கு வேறு ஆட்கள் வருவார்கள். என்னைவிட மோசமானவர்களாக அவர்கள் இருக்கலாம். அதனால் இங்கு யாருக்காவது நன்மை ஏற்படுமா?

யுத்தம் முடிந்த பின்னர் நான் தொழிற்சாலைக்குப் போய்விடுவேன்...

வெற்றியடையப்போவது யார்? நாங்கள் இல்லையா? நீங்களா? பின்னர் எங்கள் கதி?

அத்தோடு நாங்கள் மடிவோமா? அது ரொம்ப மோசம். நான் வேறு விதமாக எண்ணியிருந்தேன்."

பின்னர் அவன் யோசனை செய்தவாறு எழுந்து அறையைவிட்டு மெதுவாக நகர்கிறான்.

மிக மோசமான ஒரு பிரகிருதியை இப்போது நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன்.

(தொடர்ந்து வரும்)



# விடிவில் ஒரு முடிவு



ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

அசாத்தியமாய் அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டான் சுபாஷ் அண்ணன். "என்னண்ணே விஷேசம்? இந்த அகால வேளைல எழுந்து தோட்டதில நிக்கிற?" என் குரல் கேட்டு நெளிந்து "இண்டை வேர்ந்து காலைப்பூசைக்கு கோயிலுக்குப் போகப்போறன்," என்றான்.

ஆச்சரியமாய் இருந்தது. "ஓ...ரீச்சிங் இன்டர்வியுக்கு வந்த ஈஸ்வரபக்தியா? வாழ்க!"

"ஏன் நீ கூட அஞ்சு மணிக்கு எழும்பி அலர்றது உலக மகா அதிசயமாயில்ல இருக்கு! எங்கேனும் பயணமா?"

"நீண்டதூரமில்ல- இந்த திருக்கோயிலுக்குத்தான்."

"விஷேசம்?"

"வடக்கு-கிழக்கு இளைஞர் முகாம்- திருக்கோயில் ஆண்கள் இல்லத்தில்"

"அங்க தேவதூயன் ஆட்சில, டானியல் நோட் அற்மினிஸ்ரேஷன் செக்ஷன்ல போய்ப் பிழைச்சுவா"

"இதுதான் திருக்கோயிலுக்கான முதல் பயணம்- எப்பிடி இடம்?"

"நல்ல நெய்தல் பொதிவு- வங்கக் கடல் சூழ ஆட நுரைபோட்டு அலை தள்ளிப் பாய? தென்னைகரம் தட்டி தாளங்கள் போட, முழு நிலவில் ஒரு கலை உலா-வாழ்க போய்வா"

"அது சரி உனக்கு இன்டர்வியுக்கு வந்திருக்கில்ல? இந்தத் தடவைதான் உப்புத்திண்டு எக்ஸ்ஸாம் எழுதினாப் போல...?"

"எப்பவும் போலத்தான் இப்பவும், எவனெவனோ என்னெல்லாம் பண்றானாம்: ஆனா எனக்கு சிவசத்தியமாய் எந்த 'சிதம்பர ரகஸி'யமும் இல்லாமல் இன்டர்வியுக்கு வந்திருக்கு- குருட்டு லக்போல."

"எப்ப போறாய்?"

"அம்பாறைல இன்ரவ்யு, இஞ்சயிருந்து காலைல வெளிக்கிடேலாது. முதல் நாளே அனஸ் வீட்ல சம்மாந்துறைல போய் நிண்டுதான் போவன். அதுக்கு முன்னாடி திரௌபதையம்மனுக்கு நேர்த்தியொண்டு கிடக்கு, ரெண்டு நாள் தீப்பள்ளயதில- நேரா வந்து பைல் தூக்கினா அனஸ் வீடு போக வேண்டியதுதான். அவனுக்கு டெலிஃபோன் கோல் குடுத்திற்றன் வர்றதா?"

"நான் திருக்கோயில்ல இருந்து வாற நேரம் நிக்க மாட்டீங்கல்ல."

"இல்ல கோயில்ல நிப்பன். திருக்கோயில் போறால்ல, பரமேஸ்வரன் சேரக்காணச் சான்ஸ் கிடைச்சா 'சுபாஷ் பயோ படிச்சுக் கிழிச்சு இப்போ பி.ஏ பைனல் பாஸாகிற்றான் போதாக்குறைக்கு ரீச்சிங் இன்ரவ்யுக்கும் வந்திருக்கு' எண்டு சொல்லிப்போடு: இல்ல, நானின்னும் குட்டிச்சுவர் தாளெண்டு நினைச்சிட்டிருப்பார். யூத் காம்ப் புதினமெல்லாம் கட்டியெடுத்திற்று வா- நானும் தீப்பள்ளயப் புதினங்கள், இன்டர்வியு அறுவை, அனஸ் வீட்டு அமர்க்களமெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு வாறன். செலக்ட் பண்ணி நல்ல ஹாஸ்யமாய் கதையெழுதலாம்."

"காதலும் ஹாஸ்யமும் எழுதச் சான்ஸ் கிடைக்குதில்லையே?"

"ஓ எப்பவுமே குண்டு, ஷெல், வெடி., சாவு- மூதேசி! நல்லதே எழுத வராதா? மண்டு! சுத்தியும் சுத்தியும் சுப்பர்ர கொல்லைல தான் நிக்கிற பாவி! இந்தமுறை நல்ல ஜோக்காய்த்தான் எழுதுற! எதுக்கும் போய்த்து வா."

"இன்டர்வியு சக்ஸஸாகணும்ல- ஒல்தி பெஸ்ற்!" வாழ்த்தி விட்டு பஸ்ஸேறினேன்.

சுபாஷ் அண்ணன் சொன்னது போலவே நெய்தல் நிலத்து இயற்கையால் ஆகர்ஷிக்கப்பட்டேன். ஆறு வருடங்களுக்குப் பின்பு பரமேஸ்வரன் சேரைச் சந்தித்தேன். சாதத்தில் வைத்த கையை உதறிக்கொண்டு சேர் ஓடிவந்து கதைக்கப் பிரமித்துப் போனேன், தான் கற்பித்தவர்களுக்கான கணிப்பீட்டை நினைத்து. என் நினைவில் சுபாஷ் அண்ணன் சொன்னவை சுத்தமாய் மறந்து போனது உண்மை. ஒவ்வொரு சம்பவமாய் சேகரித்துப் பத்திரப்படுத்திக் கொண்டு சுபாஷ் அண்ணனிடம் பகிர்ந்துகொள்ள ஓடிவந்தேன்.

சட்டென அந்தப்பிரளயம் அனைவரையும் உலுக்கிப் பிழிந்தது. பிரதேசம் அல்லோலகல்லோலப்பட்டது திடுதிப்பென போர்க்கால சூழல் இங்கு சதிராடியது. தவித்துப்போனேன். நேரம் ஆக ஆக சுபாஷ் அண்ணன் என்னவானானோ எனும் பதட்டம் பயமாய்.... பரிதவிப்பாய் எனக்குள் விஸ்வரூபமெடுத்தது.

எல்லாருக்குள்ளும் பயங்கரம். அந்தக் கொடிய கணப்பொழுதில் ஸ்தம்பித்துப் போனேன். நம்பவே முடியாத அந்த உண்மையின் கோரத்தை என் செவியும் விழியும் இதயமும் ஏற்றுக்கொள்ள மறுத்தன.

அந்த ஒப்பற்ற ஓவியம் என் கண்ணெதிரே சிதைந்து கிடந்தது. எத்தனை கனவுகள்? சுபாஷ் அண்ணனின் எதிர்காலம்பற்றிய கற்பனைகள் பரிணாம வளர்ச்சியடைந்து கொண்டிருந்த வேளையிலா இப்படித்தரைமட்டமாக்கப்பட வேண்டும்?

ஒரு ஒளிக்கீற்றைக் கண்ட பின்பா விழிகள் அந்தகாரப்பட வேண்டும்? ஆசிரிய நேர்முகத்தேர்வுக்கு வந்திருப்பதற்காய் அம்மனுக்கு அர்ச்சனை போடப்போய் அஸ்தமனமாகிப் போனானே!

ஜீரணிக்க முடியாத மாபெரும் இழப்பிற்காய் என் இருதயமே உருகியோடுகிறது விழிகளின் வழியாக. மயானத்துக் கிரியைகள் முடிவுற சிதையில் உட்கார்ந்து செந்தீயில் கொழுந்துவிட்டு எரியும் அவன் முகம் தெரிகிறது: சூனியம் ஆக்கிரமிக்கிறது. அவன் வீட்டு டெலிஃபோன் அலற தூக்கிய தந்தை என்னிடம் தருகின்றார்.

எதிர்முறையில் அனஸ் "டேய் சுபாஷ் இன்னும் பயந்திட்டு நிக்கிறியாடா? நானிஞ்ச காத்திட்டு நிண்டே கால்தெறிக்குது, கெதியா வெளிக்கிட்டுவா மச்சான், மறக்காம ஃபைல்ஸ்ல எடுக்கவேண்டியதெல்லாம் எடுத்திடு. இஞ்ச கைஸும், நாஸரும் கூட உனக்காகக் காத்திட்டிருக்காங்க- என்னடா வாய்ல கொழுக்கட்டையா? கதைச்சுத்தொலையேண்டா. ஊமக்கோட்டான் மாதிரி உம் உம்கிறியே அட- பயணப்பயமாடா இப்ப றூட் கிளியர்டா நீ பயப்பிடாம வா நாங்களிக்கோம்!"

இனியும் முடியாமல் என் குரல் உடைந்து போக அதிர்ந்து போன அனஸின் அலறல் எதிரொலி எழுப்பிக் கொண்டேயிருந்தது.

ஜீரணிக்கவே முடியாத ஜீவ நட்பின் இழப்பிற்காய் அனஸ், கைஸ், நாஸரின் கதறல்கள் என்னையும் உலுக்கின. என் பேனாவில் ஈரம் வருகிறது- இன்னுமொரு இழப்பின் பதிவிற்காய்.



படிப்பகம்

www.padippakam.com

தனது எதிர்காலக் கணவன் எப்படி இருப்பானோ? தன்னை எப்படி நடத்துவானோ? என்ற எண்ணங்கள்தான் மோகனாவின் மனதில்.........

# உயிருள்ள உறவு



கலுவாஞ்சிக்குடி யோகன் – சுவிஸ்

"வெளிநாட்டு மாப்பிள்ளையென்றால் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று மோகனா கெஞ்சிக் கொண்டிருந்தாள். இந்தக் கெஞ்சல் அவளுடைய தாயிடம் எடுபடாமல் போயிற்று.

"வலிய வந்த சீதேவியை உதறித்தள்ள வேணாம், நீ படித்தவள், யோசித்துப்பார். ஒரு சீதனமும் வேண்டாமென்று யாராவது இந்தக்காலத்தில் பெண் கேட்பார்களா? உனக்குக் கீழ் இன்னும் இரண்டு இருக்கு. அதுகளை நினைத்தென்றாலும் நீ இந்தக் கல்யாணத்திற்கு சம்மதித்துத்தான் ஆக வேணும்!" தாய் நியாயப்படுத்தி வற்புறுத்தினாள்.

முற்று முழுதாக முழுமனதுடன் மோகனா சம்மதிக்காவிட்டாலும் பெற்றதாயின் இந்த வற்புறுத்தலுக்குப் பிற்பாடு மௌனமாகவே இருந்தாள். இந்த மௌனம் ஒன்றே தாய்க்குச் சாதகமாகப்பட்டது. அவள் மேற்கொண்டு அலுவல்களைக் கவனிக்க ஆயத்தமாகிவிட்டாள்.

மோகனாவின் சிந்தனையோ வேறு பல கோணங்களில் உலாவந்துகொண்டிருந்தது. வெளி நாட்டிற்கு மணப்பெண்களாகப் போகும் யுவதிகள் அங்குபடும் அவஸ்தைகளையும், அநியாயங்களையும் அன்றாடம் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்துக் கேட்டு அறிந்துவைத்திருந்தவள் அவள். அவ்வளவு ஏன்? இதே ஊர் ரமணி அக்கா இருந்த வேலையையும் உதறிவிட்டு அந்நிய தேசத்திற்குத்தானே மணப்பெண்ணாகப் போனார். அங்கு என்ன நடந்தது? அவர் ஏற்கனவே அங்கு ஒரு பெண்ணை வைத்திருக்கிறாராம். இதைத் தட்டிக்கேட்டதற்கு "நீர் விரும்பினால் இருக்கலாம்; இல்லாவிட்டால் வெளியேறலாம்," என்று சொல்லியிருக்கிறார்.

'ரமணி அக்கா தூக்கி எறிந்துவிட்டு வந்து இப்பொழுது வேலையுமில்லாமல் வாழ்க்கையுமில்லாமல் அவஸ்தைப்படுவது இந்த அம்மாவுக்குமல்லவா தெரியும்? பிறகு ஏன் இந்த அம்மா என்னை வற்புறுத்துகிறாள்?' அவளுக்கு இப்படி ஒரு பக்கம் சிந்தனை ஓடினாலும் மறுபக்கம் வேறு விதமாகவும் யோசனை போனது.

நாம் தலைகீழாக நின்றாலும் நமக்கு நடக்கிறது நடந்தே தீரும். அது விதி. அந்த விதியை யாராலும் மாற்றமுடியாது.

இப்படி விதியின் மேல் முழுப்பாரத்தையும் போட்டாள் மோகனா. அவள் இப்படி நொந்து கொண்டதற்குக் காரணமே அவளுடைய ஏழ்மையான நிலைதான்.

தகப்பன் பேக்கரியில் வேலைசெய்யும் ஒரு தினக் கூலி. அவருக்கு குடும்பத்தை விட குடிதான் உயிர்மூச்சு. ஆனால் லட்டு மாதிரி மூன்று பெண்களைப் பெற்றுவிட்டிருந்தார் அவர்.

மூத்தவள் மோகனா ஓ/எல் வரை படித்து விட்டு வீட்டிலிருந்தாள். அந்த நேரம் அவர்களது வீட்டுக்குப் பக்கத்தில் புதிதாக ஒரு குடும்பம் வாடகைக்கு வந்தது. கலவரங்களால் பாதிக்கப்பட்டு யாழ் நகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்தது அந்தக் குடும்பம்.

புதிதாக வந்த அந்தக் குடும்பத்தினருக்கு மோகனா குடும்பம் மிகவும் ஒத்தாசை பண்ணினார்கள். காலப்போக்கில் அந்நியோன்யமாகப் பழக ஆரம்பித்தார்கள். பண வசதி இல்லாவிட்டாலும் அவர்களது தாராள குணம் புதிதாக வந்த அந்தத் தாய்க்குப் பிடித்துப் போயிற்று. அதிலும் மோகனாவின் குடும்பப்பாங்கான அழகு, அமைதியான பேச்சு இவைகளினால் கவரப்பட்டாள் அந்தத்தாய். இதனால் சுவிஸிலுள்ள தன் மகனுக்கு மோகனாவை பெண் கேட்டாள்.

மோகனாவின் தாய்க்கு உள்ளூர சந்தோஷமாகத்தானிருந்தது. இருந்தும் தங்களுடைய கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, "சீர் என்று எங்களால் எதையும் தர இயலாது" என்று வருத்தப்பட்டாள்.

"நீங்கள் சம்மதம் என்று மட்டும் சொன்னால் போதும். மேற்கொண்டு காரியங்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சொல்லிவிட்டாள் அந்தத்தாய்.

இனியென்ன! இருவீட்டிலும் சம்மதங்கள் பரிமாறப்பட்டு அலுவல்கள் அசுர வேகத்தில் நடந்து முடிந்தன.

மோகனாவை விமானமேற்றுவதற்காக பெற்றோரும், மற்றவர்களும் தலைநகரிலுள்ள 'லொட்ஜில்' காத்திருந்தனர்.

அவள் விமானம் ஏறும் நாளும் நெருங்கி வந்தது. ஏஜன்சிக்காரன் ஏமாற்றவில்லை. சொன்ன திகதிக்கே ஏற்பாடு பண்ணியிருந்தான். சொந்தநாடு, சொந்தவீடு, சொந்த இனம் அத்தனையும் விட்டுப் பிரிந்த அவள், மனதைக் கல்லாக்கிக் கொண்டு புறப்பட்டாள்.

இடையில் பல இன்னல்களையும், அனுபவங்களையும் சந்திக்க வேண்டி நேர்ந்தது. இருந்தும் எண்ணி மூன்றே வாரங்களில் சுவிஸ் மண்ணில் கால்பதித்து விட்டாள். ஏஜன்சி ஏற்பாடு பண்ணியிருந்த உதவியாளன், எங்கே போக வேணுமென்று கேட்டான். வைத்திருந்த விலாசத்தைக் கொடுத்தாள். அந்த இருப்பிடத்திற்கு கார் போய்க் கொண்டிருந்தது.

அது ஒரு மலைப்பிரதேசம். எங்கும் கரிய இருள். இருளைவிடக் குளிர் உடலைக் குலுக்கியது. அந்தக் குளிரோடு பனிக்கட்டி அதிகமாகக் கொட்டி தெருவெல்லாம் மூடிக் கிடந்தது. இவைகள் எதுவுமே மோகனாவைப் பாதிக்கவில்லை. தனது எதிர்காலக் கணவன் எப்படி இருப்பானோ? தன்னை எப்படி நடத்துவானோ? இந்த எண்ணங்கள் தான் அவளின் மனதில் மேலோங்கி எழுந்தன. குறிப்பிட்ட வீட்டைக் கண்டுபிடிக்க நெடு நேரம் எடுக்கவில்லை. ஒரு எட்டு மாடிக் கட்டிடத்தில் அமைந்திருந்தது அந்தச் சிறிய வீடு. அவளுடன் வந்தவன் அழைப்பு மணியை அமுத்தினான்.

மோகனாவின் வருங்காலக் கணவன் கதவைத்திறந்து கொண்டு வந்தான். அவன் அவளை அடையாளங் கண்டிருக்க வேண்டும். முதலில் அவளுடன் வந்தவரின் அலுவல்களைக் கவனித்து அனுப்பினான். பின்னர் சிரித்துக் கொண்டு "வாரும் உள்ளே" என்று அழைத்தான். அவனின் தோற்றத்தைப் பார்த்த அவளுக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவனையே உற்றுப் பார்த்தபடி இருந்தாள். இதைப்புரிந்துகொண்ட அவன் "என்னை நீர் இந்தத் தோற்றத்தில் எதிர் பார்க்கவில்லை? அப்படித்தானே?" என்று கேட்டான். அவள் எதுவுமே பேசவில்லை. இதழ் மட்டும் புன்னகையால் விரிந்தது.

"நான் உனக்கு ஒரு மாறுதலுக்காகத்தான் தலையை மொட்டை போட்டு படம் அனுப்பினேன். நீர் ரெலிஃபோனில் கேட்டபோது கூட எனக்கு ஒரு முடியும் கிடையாது என்று பொய்தான் சொன்னேன். மோகனா! நீர் என்னுடைய வெளித்தோற்றத்தைக் கண்டு என்னை வெறுக்கவில்லை. இது எனக்கு ரொம்பப் பிடித்திருக்கு," என்றான். அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது. ஆனால் திருப்தியாக இருக்கவில்லை. அவளுடைய கண்கள் அந்தச் சிறிய அறையையும் அங்கு கிடந்த வெற்றுப் போத்தல்களையுமே மேய்ந்த வண்ணமிருந்தன.

மோகனாவின் நிலைப்பாட்டை அவன் உணர்ந்து கொண்டான். "இத்தனை காலமும் நான் இந்தச் சிறிய அறையில் தான் குடியிருந்தன். அற்ககோலும் நிறையப் பாவித்திருக்கிறன். ஏன் இப்போது கூடக்குடித்திருக்கிறன். ஆனால் நீர் வந்த இந்த நிமிடத்திலிருந்து சத்தியமாக இந்தக் குடியைத் தொடமாட்டன். நாளைக்கே நான் பார்த்து வைத்திருக்கிற புது வீட்டுக்கு நாங்கள் குடிபோகலாம்" என்றவன் அவளை நெருங்கினான். அவனுடைய இந்த வெளிப்படையான பேச்சுக்கள் அவளை ஈர்த்தன. மோகனா உணர்ச்சி வசப்பட்டுப் போனாள். இப்போதும் அவள் எதுவுமே பேசவில்லை. அவனை நெருங்கியவள் அணைத்துக் கொண்டாள். ●

---

# இல–24 டவுன் வீட்டு மாப்பிள்ளை

எஸ்.ஆர்.பி

ஒரு கிழமையாக தொடர்ந்து மழை. இன்றுதான் உதயத்தில் சூரியன் தனது புன்சிரிப்பை உதிர்க்கத் தொடங்கியிருக்கிறான். மழை நேரத்தில் போட்டிருந்த உடுப்புக்களையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு கிணற்றடிப்பக்கம் போய் விட்டாள் தேவி. பலவித சிந்தனைகளின் மத்தியில் உடுப்புத் துவைத்துக்கொண்டிருந்த தேவியின் காதில் அம்மாவின் அழைப்புக் கேட்கின்றது.

"பிள்ளை தேவி இஞ்ச ஒருக்கா ஓடி வாவன்!" என்னவோ ஏதோ என்று ஓடிச்சென்றாள். வந்தவளின் காதில் எதிர்வீட்டு அன்ரியும் அம்மாவும் கதைப்பது விழுகின்றது. 'ஓ... இதுவா விஷயம்?' தனக்குள் சிரித்துக் கொள்கின்றாள். நிச்சயமாக இது வெள்ளி விழாக்காணும் மாப்பிள்ளை இல்லை. இன்றுவரை 23 பேர் தேவியைப் பெண்பார்க்க வந்திருக்கிறார்கள். இது 24வது இடம்.

தனக்கு ஒன்றுமே தெரியாத மாதிரி "என்னம்மா" என்றாள்.

"கெதியா முகத்தைக் கழுவி வேற உடுப்பு மாத்து பிள்ள. ஒரு இடம் வந்திருக்கு. மாப்பிள்ளையின் அத்தான் வந்திருக்கிறாராம். அவருக்குப் புடிச்சாச் சரியாம், வேற ஒண்டுமே வேணாமாம். மாப்பிள்ளை வெளிநாடாம்." அம்மா சொல்லிக் கொண்டே போகின்றார்.

அம்மாவின் முகத்தில் அப்படியோர் சந்தோஷம். இருக்காதா பின்ன? வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு இப்போது கவர்மெண்டில் வேலை பார்க்கும் பெண். அதுமட்டுமா? அழகான மெல்லியதான வெள்ளை நிறத்திலான... இப்படியே அடுக்கிக் கொண்டு போகின்ற இந்தக் காலகட்டத்தில் இப்படியோர் செய்தி என்றால் அம்மாவுக்கு சந்தோஷத்தில் கை கால் நிலத்தில் நிற்க முடியவில்லை.

ஆனால் தேவிக்கு மட்டும் நிச்சயமாகத் தெரியும்; ஏதாவதொரு காரணம் வரும் என்று. முகத்தை அலம்பி வீட்டினுள்ளே செல்கின்றாள்.

வெளியில் கேற் சத்தம், அதைத் தொடர்ந்து அம்மாவின் உபசரிப்பு. அன்ரி உள்ளே ஓடி வந்து தேவியின் கைகளைப் பிடித்து இழுத்து வந்து கதிரையில் உட்கார வைக்கின்றாள். கொலுப் பொம்மை மாதிரி இருந்த தேவியை வந்தவர் முழி பிதுங்கப் பார்க்கின்றார். அவளுக்கோ தர்மசங்கடமான நிலை. ஐந்து நிமிடங்கள் சென்றிருக்கும். வந்தவர் எழுகின்றார். "நல்ல செய்தி அனுப்புகின்றேன்" என்கின்ற அந்தப் புளிச்சுப் போன செய்தியைச் சொல்லி விட்டுப் போகின்றார். இது அவளுக்கு அன்றே தெரிந்த செய்தி.



அடுத்த நாள்விட்டு மறுநாள் அன்ரி மூலமாக அம்மாவுக்குக் கிடைத்தது– தேவியின் காதிலும் விழுந்தது.

"எல்லாம் நல்லம்தானாம். ஒரு குறையுமில்லையாம், வீடு மட்டும்தானாம் டவுனிலிருந்து வெகுதூரமாம். அங்கு (டவுனில்) வீடு கிடைத்தால் நல்லமாம்."

அம்மா இடிந்து போய் உட்கார்ந்திருக்கின்றாள். தேவி மட்டும் அமைதியாக எழுந்து வழமையாகத் தனது டைரியைத் தேடி எடுத்து தொடர் இலக்கத்தையும் மாப்பிளையின் பட்டத்தையும் எழுதத் தொடங்கினாள்.

இல.24– டவுன் வீட்டு மாப்பிள்ளை.

---

# பொங்கல்

கனகசபை தேவகடாட்சம்

என்றுமில்லாதவாறு ரவிவர்மனின் உள்ளம் இன்று உவகையால் கூத்தாடியது. சதா நோயாளிகளின் உள்ளக் குமுறல்களைக் கேட்டுக் கேட்டு மரத்துப் போயிருந்தது அவன் மனம்.

கடந்த ஐந்து வருடங்களாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் டாக்டராகப் பணியாற்றியதில் பெரிய அளவில் மன நிறைவோ, மகிழ்வோ ஏற்பட்டதில்லை ரவிவர்மனுக்கு! ஆனால் இன்று! ஏன் அப்படிச் சந்தோசம்!



இம்முறை பொங்கலுக்கு வரும்படி அவன் தாயார் அனுமதி தந்தமைதான்– இவைகளுக்குரிய காரணங்கள்– இயற்கை, சுக உணர்வுகள் அடி மனதில் எப்போதும் பூத்து மணம் வீசுவது இயல்புதான். அவனும் சராசரி மனிதன் தானே? ரவிவர்மனின் தந்தையை யுத்தம் சாப்பிட்டு விட்டது. தன் மகனுக்கும் இந் நிகழ்வு ஏற்படலாகாது என ஒரு தாயுள்ளம் எண்ணியமையே– சொந்த ஊர் வருகைக்கு தடையாகும்! பொங்கல் பண்டிகை– தடையை சற்று தளர்த்தியிருந்தது.

இந்தப் பண்டிகை காலத்தில் எப்படி இருக்கவேண்டிய ஊர்!– சிறைப்படுத்தப் பட்டிருந்தது. 'வெள்ளி விழுந்த மரம்' போல் காட்சி தந்தது ரவிவர்மனுக்கு! ஊரில் தென்னை, பனை மரங்களை காண்ப தென்றால் பாகத்திற்கு பாகம் சுற்றிவர அமைத்திருக்கும் காவல் அரண்களில்தான்!

ஊர் மக்கள் அனைவரின் முகத்திலும் சோகச் சுமைகள் முடிச்சுகளாகத் தொங்கின.

'இவைகளை காணவா ஓடிவந்தேன்!' ரவிவர்மனின் மனம் ஊளையிட்டுக் கொண்டது.

"டேய்! ரவி! சாப்பாட்டுக்கோப்பைக்கு முன்னால குந்திக்கிட்டு என்னடா யோசிக்கிறாய்?"

அம்மாவின் தொனி கேட்டு சிந்தனையை கலைத்துக் கொண்டான் ரவி. அவன் பிறந்து தவழ்ந்து, நடைபயின்ற ஊர்!

ஊர் சந்தியின் நுழைவாயிலில் அமைந்த அந்த பிரதான காவல் அரணில் அவனை எப்படியெல்லாம் விசாரணை செய்தார்கள்? 'இது உனது சொந்த ஊரா? இதுவரைக்கும் உன்னை நாங்கள் காணவில்லையே! அடையாள அட்டை பதிந்து பாரம் கொடுத்து விட்டுத்தான் நீ தங்க வேண்டும்.'

சுயகௌரவத்தையும், உணர்வுகளையும் புதைக்கின்ற விசாரணைகள்! 'எங்கிருந்தோ வந்து, இங்கிருந்து கேட்கின்றன!' உணர்வலைகளின் சிறைகளிலிருந்து விடுபடாமல், தாயாரின் வேண்டுகோளுக்கு அமைய சோற்றுக்குள் கை புதைத்தான் ரவி.

"இஞ்சேர் ரவி! உனக்கு படிப்பிச்ச சின்னையா வாத்தியாரும், நம்மட தங்கம் பிள்ளை ஆச்சியும் படுத்த படுக்கையா கிடக்காங்க! நாளையண்டைக்கு அதுகள் பொங்குதுகளோ தெரியாது! சாப்பிட்டுப் போட்டு ஒரு தரம் எட்டிப்பார்!" மெதுவாக மகஜரை வைத்தாள் அவன் தாயார்.

தன்னுடைய மகன், இவ்வூரின் முதன் முதல் தோன்றிய டாக்டர் என்பதை காட்டிக்கொள்வதிலும், சுற்றத்தாருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கிலும்– அந்தத் தாய் இருந்தாள்.

இவை எதுவுமே ரவியின் சிந்தையைத் தொடவில்லை. ஏதோ எண்ணியவாறு எழும்பினான். தன்மூட்டை முடிச்சுகளை தூக்கினான்! உள்ளம் பொங்கியது! "அம்மா! நான் இஞ்ச நிண்டனெண்டால், எண்ட எண்ணமெல்லாம் மாறும்! அப்பா இல்லாத நிலை போல.... மீண்டும்.... வரலாம். நான் போகப்போறன்!" பதிலுக்குக் காத்திருக்காமல் காவல் அரண் நோக்கிச் சென்றான் ரவி– தனது அடையாள அட்டையைப் பெறுவதற்காக!

---

# இதயக் கோயில்

ஜெ.புளோரன்ஸ்



அன்று வெள்ளிக்கிழமை. கதிரவன் மேற்கு வானில் அன்னநடை பயின்று மறையத் தொடங்குகின்றான். நண்பிகள் ஐவரும் கோயிலுக்குச் சென்றனர். பூஜை முடிந்ததும் வழமைபோல் கோயில் மண்டபத்தருகே அமர்ந்து அளவளாவத் தொடங்குகின்றனர். ஊர் வம்பளப்பது அவர்கள் பழக்கமன்று. தங்களது பிரச்சனைகள் பற்றி கலந்தாலோசிப்பது தான் வழக்கம்.

"க்....கும்" தொண்டையை செருமியவாறு தன்பேச்சினால் மற்றவர்களைச் சிரிக்க வைக்கும் ரம்யா ஆரம்பிக்கின்றாள்.

"அன்பு சகோதரிகளே! முகவுரை எழுதப்பட்ட ஒருகாதல் காவியத்தின் முடிவுரை எழுதக் கூடியுள்ளோம்." வேறு நாட்களாக இருந்திருந்தால் அனைவரும் மனம் விட்டுச் சிரித்திருப்பார்கள். விரல்களால் மணலில் கோடு போட்டவாறே அமர்ந்திருக்கும் தீபாவின் மௌனம் இவர்கள் மனதினையும் வேதனைப் படுத்தியதால் சிரிக்க மறந்திருந்தார்கள்?

நிலூ அமைதியைக் கலைக்கின்றாள்....

"தீபா...இவ்வளவு நடந்த பின்பும் நீ மௌனமாயிருப்பதன் காரணம் புரியவில்லை."

"வாய் இருப்பதற்காக புலம்பச் சொல்லுறியா நிலூ?"

"ஒரு பெண்ணின் மௌனத்திற்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும். ஒரு பெண்ணின் மௌனம்தான் மற்றவர்களை நிலைகுலையச் செய்யும்" என்று பதிலளிக்கின்றாள் ரம்யா.

"சே....எவ்வளவு பொய்க்கதைகள் கூறுகிறார்கள்...... நினைக்க நினைக்க வேதனையாக இருக்கிறது."

"உண்மை வெளிவரத்தானே வேண்டும்?. பொறுத்திருப்போம்." என்கிறாள் தீபா.

இவ்வளவு வேதனையை சுமந்து கொண்டு சிரிக்கும் தீபாவைப் பார்க்க விழிகள் கலங்குகின்றன.

"பொறு...பொறு....பொறு..... இதே உனக்குப் பதிலாய்ப்போய்விட்டது. கண்ணீர் விடுவதே வேலையாகி விட்டது." பொரிந்து தள்ளுகிறாள் ஷர்மி....

"ஹேய் அன்பு என்ன கடையில் வாங்கும் கத்தரிக்காய் என்று நினைப்பா...? விலை மதிப்பற்ற ஒன்றடி....உண்மை அன்புக்கு உருவமும் அவசியமில்லை.... துக்கங்களையும் சுமந்து கொள்ளும்," என்று சொன்னாள் தீபா. விழிகள் கலங்கியதுபோல் இருந்தது.

"என்ன இராமாயணமா?" என்று இடக்காகக் கேட்டாள் ரம்யா.

"இல்லடி...நீயாவது என் காதலைப் பற்றி கவியெழுதேன்."

*"எரிந்து கொண்டிருக்கும்*
*எனக்கு*
*வேதனைகளை*
*தந்து விட்டு*
*அவ் வெப்பத்தில்*
*நீ குளிர் காய்கின்றாயா?..*

"ஏய் தீபா! நீயும் தான் அழகாகக் கவிதை எழுதுவாயே? ஒரு கவிதை சொல்லேன்!" என்றாள் ரம்யா. தீபா தன் விரல் நகங்களையும் பார்த்துக் கொண்டே சில நொடிகள் யோசித்தாள். பின்னர் நேரான குரலில் அந்தக் கவிதையைச் சொன்னாள்.

*"நயவஞ்சகனாயிருந்தால்*
*என்னைமறந்து விடு;*
*இறந்த பின்னாவது*
*அதற்கு நானும்*
*முயற்சிப்பேன்!*

என்ன யோசிக்கிறீங்க....? கவிதை என்னதல்ல; 'வாணி' எழுதியது....சில வரிகளை மனனஞ்செய்தேன்!" என்கிறாள் தீபா...

சிறிது நேரம் மௌனம்.... யார்? மௌனத்தைக் கலைப்பது.... தீபாவின் காதலன் ஷாந்தனின் மௌனம் ஒருபுறம்... அதையெண்ணி வேதனைப்படும் தீபா மறுபுறம்... அவளைச் சிரிக்க வைக்க வேண்டும் எனத் தடுமாறும் நண்பிகள் இன்னொருபுறம்... எவ்வளவு எடுத்துக்கூறியும் தீபாவின் நிலையை மாற்றிட முடியவில்லை... முடிவில் தீபா மௌனத்தைக் கலைத்தாள்....

"ரம்யா இந்த அம்மன் சிலையை எடுத்திட்டு விநாயகர் சிலையை வைப்போமா?"

"உனக்குப் பைத்தியமா? இது அம்மன் கோயில். அம்மன் சிலைதான் இருக்கணும்... அம்மன் கோயிலில் விநாயகர் சிலையை வைப்பார்களா?"-நிலூ....

"ரம்யா! முடிவுரையை நான் சொல்கிறேன். இதயமும் ஒரு கோயில் தான்...அதில் ஒரு தெய்வத்திற்குத்தான் இடம்... இருக்கிற தெய்வத்தை எடுத்திட்டு இன்னொரு தெய்வத்தை வைக்க என்னால் முடியாது..." என்று கூறியவாறே எழுந்து நடக்கின்றாள் தீபா.



படிப்பகம்

www.padippakam.com

# மணிப் பொங்கல்

**இலக்கிய நயம்** தருவது **ரசிகன்**

கூடலினில் அலைகள் ஆட
கரையினில் மக்கள் வெள்ளம்
பொங்கலின் விழாக் காண-உவகை
பொங்கியே வந்த கூட்டம்!

திருநாள் காலம் வந்தால்
திருடருக்கும் கொண்டாட்டம்-இதயத்
திருடருக்கும் கொண்டாட்டம்!

திருடர்கள் நகையைத் தேட-இதய
திருடர்கள் நகையாள் தேட
திருநாளும் துணையாய் நிற்கும்!

"வழிப்பறித் திருடர் மேலாம்-இந்த
விழிப்பறிப் பெண்கள் முன்னால்!"
மாறனின் நண்பன் சொன்னான்.

தோழியர் கூட்டத்தின் நடுவே நின்ற
கோலமயில் திரும்பிப் பார்த்தாள்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
அழகுப் பெண்களும் திரண்டால் செருக்கு.
தனியே என்றால் தளிர்போல் செல்வர்
கோர்த்த மணிகளாய் சேர்ந்தே வந்தால்
கிண்கிணி மொழியில் கேலிகள் செய்வர்!
கண்களின் வழியாய் கணைகளும் எய்வர்!
செங்கனி இதழால் தீயெனப் பொழிவர்!

தோழியர் நடுவே நின்றவள் சீறி
கோல இதழால் கோபம் உதறினாள்.

"பாம்பின் காலைப் பாம்பே அறியும்-நீரும்
திருட வந்தீரோ, எம்மைத் திருடர் என்றீரோ?
வழிப்பறி செய்ய மடியில் கனம் வேண்டும்
விழிப்பறி செய்ய உரிய ஆள் வேண்டும்
தகுந்தவர் அல்ல நீர் விழிப்பறி செய்ய
துணிந்தவர் என்றால் நேரில் வரவேண்டும்!"

மாறனின் நண்பன் மௌனமானான்
நானா சொன்னேன்? என்பது போல
வாயை மூடிப் பதுமையானான்!
மாறனை நோக்கியே அவள்
சீறிய சொற்கள் பறந்து வந்தன!

நானில்லை என்று மறுத்தால்-அது
நண்பனுக்குத் துரோகம்!
நான்தான் என்று நினைத்தாள் என்றால்
காதலுக்கு விரோதம்!
மாறன் உடனே விடை சொன்னான்;

"துணிந்தவர்தான் நாங்கள் துணிந்தவர்தான்
கனிந்தவர்மீது துணிவைக் காட்டும்
தாழ்ந்தவரல்ல நாங்கள் தாழ்ந்தவரல்ல!
உண்மையை உரைத்தோம்-உம்மிடம்
இதயம் இழந்ததைச் சொன்னோம்.
விழிப்பறியாலே இதயத்தை பறித்து-நீர்
பழிப்பதானாலே யாது பயன்?"

மாறன் குரல் கேட்டதும்-அந்த
மாங்கனி முகத்தில் மாய நகை!
முன்னர் கேட்டது வேறுகுரல்
என்பதும் அவள் அறிந்து கொண்டாள்!

"பொங்கல் நாளைக் காண வந்தீரோ?-அன்றேல்
நம் கண்களின் அழகை ரசிக்க வந்தீரோ?"
வினா தொடுத்தாள், தோழிகள் நகைத்தனர்.



"கண்களின் வழியே நாங்கள்
பொங்கலைக் காண வந்தோம்!"

"புதுவிதப் பொங்கலோ? என்னடி
இந்தப் பொங்கல் புதிர்?"

"காதலால் நெஞ்சம் பொங்கும்
களிப்பினில் மனமும் பொங்கும்
இதழ்களில் நகையும் பொங்கும்
விரல்களில் நளினம் பொங்கும்
நெற்றியில் வியர்வை பொங்கும்
புருவமதில் வினாக்கள் பொங்கும்
கன்னத்தில் வெட்கம் பொங்கும்
வதனத்தில் ஆசை பொங்கும்
நெஞ்சத்தின் உள்ளே உள்ள-தேன்
கிண்ணத்து எண்ணமெல்லாம்
கண்களின் வழியே பொங்கும்-உன்
கண்களின் வழியே பொங்கும்!
கண்களின் வழியே பொங்கி
பாலாகக் கொட்டுகின்ற எண்ணமெல்லாம்-என்
நெஞ்சத்துக் கிண்ணம் தாங்கும்! தாங்கும்!"

"கிண்ணத்தில் மது இருக்கும்-உம்
எண்ணத்தில் அது வெறிக்கும்!
வண்ணத்துக் கவி படிக்க-இங்கு
பெண்கள் நாம் புலவரில்லை!
போட்டியிட மாட்டோம் நாம்-நீர்
போய்வாரும் புலவர் பொம்மானே!

"புலவரில்லை நீர் உண்மை-நம்மை
புலவராக்கும் உம் அண்மை!
பேர் கண்ட புலவரெல்லாம்-பெண்
கண் கண்டே கவி வடித்தார்.
காவியமும், ஓவியமும்-பெண்
இல்லையென்றால் பேர் பெறுமோ?"

"காவியமும் வேண்டாம், ஓவியமும் வேண்டாம்
இடத்தைக் காலிசெய்தால் போதும் ஐயா!
பொங்கல் திருநாளை-நாங்கள்
காணவிட்டால் போதும் ஐயா!"

"கரும்புக்கு நிகரான வாய்மொழியும்
அரும்புக்கு நிகரான உன் விழியும்
எறும்புக்கு நிகரான உன் குறும்பும்
பொங்கல் விருந்துக்கு நிகராகும் நம்புக நீ!"

"எறும்பாமே நம் குறும்பு-அடியே
கடித்த இடம் வலிக்காதோ?"
தோழியைக் கேட்பது போல் கேட்டாள்.

"கரும்புக்கும் வலிக்காமல்-மெல்லக்
கடிக்கின்ற எறும்பு உன் குறும்பு!
கடித்தால்தான் கரும்பு இனிக்கும்-நீ
கடித்தால் கரும்புக்கும் இனிக்கும்!"

தோழிகள் நகைத்தனர்
கொட்டிய முத்துக்களாக!

"பொங்கியது புன்னகை-இங்கே
மின்னல் அடித்ததா?
அது நம் கண்ணைப் பறித்ததா?
விழிப்பறி என்பது சரிதானே-நம்
கண்ணைப் பறிப்பது உம் நகைதானே!
விழியாலும் பறிப்பீர்-நம்
விழியையும் பறிப்பீர்!
கொள்ளையர் கூட்டம் நீர்தானே-உம்
கொள்ளை அழகுகள் படைக்கலம்தானே!"

மார்புகள் எழுந்து தணிய-அவளிடம்
வெளிப்பட்டது நெடுமூச்சு.
"பொங்கல் கண்டேன்-பொங்கக்
கண்டேன்-பொங்கவே கண்டேன்!
என் மனமும் பொங்கவே கண்டேன்!
சந்தன மலர்கள் எழுந்திடக் கண்டேன்
சுந்தர அழகுகள் நடமிடக் கண்டேன்!
பொங்கல் வாழ்க, பொங்கியே வாழ்க!
மங்களம் எல்லாம் உன்னிடமே
பொங்கலாம் காதல் மங்களமே!"

"மூச்சுவிட்டாலும் கவிதையா-உமக்கு
பேச்சுக்கு வேறு இல்லையா?
வீச்சுக்கு வார்த்தை பஞ்சமா? உம்
பேச்சுக்கு அரங்கம் இல்லையா?"
சீறினாள்-சினமாய் நடந்தாள்.

மாறனின் நண்பன் சொன்னான்;
"இடம் அறியாமல் இடறிவிட்டோம்
தடம் அறியாமல் வடம்பிடித்தோம்"

மாறன் நகைத்தான்.
"என்னடா நகைப்பு? போகட்டும் விடு!
காதலி வருவாள்
காட்டுவேன் என்றாய்- இந்த
யம காதகியிடம் மாட்டிக்கொண்டோம்!
வாடா காட்டு! உன்
மனம் கவர்ந்த அந்த மான் விழியாளை!"

மாறன் நகைப்புடன் சொன்னான்;
"வாயாடிப் போனாளே கள்ளி-அவளே
வசமானவள். என்னை வசமாக்கியவள்!"

நண்பன் திகைத்தான்.
"யார் அவளா?- வாய்திறந்தால்
தீ-விழி திறந்தால்
தீயம்பு! அவளா
உன் காதலி?"

மாறன் நகை மாறாமல் விடை சொன்னான்;
"திருக்குறள் தெரியுமா நண்பா?
சுடுசொல்தான்- ஆனால்
பகையிருக்காது? எதிரான
பார்வைதான்? ஆனால்
அதில் தூரமிருக்காது.
அகத்தில் அன்பிருக்கும்
பேச்சிலும், பார்வை வீச்சிலும்
அந்தக் குறிப்பிருக்கும்!"

*செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்*
*உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.*

குறள்-1097, அதிகாரம்-110.

ஸ்போர்ட்ஸ்

## இலங்கை அணியின் சுற்றுப்பயணம்

இலங்கை கிரிக்கெட் அணி இவ்வருடம் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப் பயணங்கள் தொடர்பான விபரங்களை இலங்கை கிரிக்கெட்சபை அண்மையில் வெளியிட்டது.

இந்த வருட ஆரம்பத்தில் இலங்கை அணி முதலில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் நாடு நியூஸிலாந்து. பெப்ரவரி-26 தொடக்கம் மார்ச் 27 வரை நியூஸிலாந்தில் இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

இதனையடுத்து சார்ஜாவில் ஏப்ரல் 3-11 வரை நடைபெறும் பாகிஸ்தான், ஸிம்பாப்வேயுடன் மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் போட்டியில் விளையாடவுள்ளது.

சார்ஜா போட்டிகளைத் தொடர்ந்து இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும். அங்கு மே7-22வரை நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் போட்டிகளில் பங்குபற்றுகிறது.

மே 23-ஜுன்23 வரை மேற்கிந்தியத் தீவில் சுற்றுப்பயணம். இங்கு 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட்டிகள்.



ஜூலை 15-31 வரை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் ஏசிசி கோப்பை போட்டிகள்.

ஒகஸ்ட்3- செப்டெம்பர் 5 வரை இந்தியாவுடன் 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஒக்டோபர் 30- நவம்டர் 10 வரை பாகிஸ்தானில் 3 நாடுகள் கலந்து கொள்ளும் போட்டிகள்.

இந்தியாவில் நவம்பர் 14-டிசம்பர் 26வரை மூன்று டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

## படுதோல்வி கண்ட இங்கிலாந்து

இங்கிலாந்து கிரிக்கெட் அணி முதல் முறையாக சம்பத்தில் ஸிம்பாப்பேக்கு சுற்றுப்பயணம் சென்றது. அங்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடியது.

புலவாயோ நகரில் நடைபெற்ற முதலா



வது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் தலா 610 எடுத்ததால் போட்டி டை (TIE)யில் முடிவடைந்தது.

ஹராரேயில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

பின்னர் நடைபெற்ற 3 ஒருநாள் போட்டிகளிலும் ஸிம்பாப்வே இங்கிலாந்தைப் படுதோல்வி அடையவைத்தது.

இங்கிலாந்தின் படுதோல்வி கிரிக்கெட் நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியது. குறிப்பாக இங்கிலாந்தில் கடும் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. கிரிக்கெட் கண்டு பிடிக்கப்பட்டது இங்கிலாந்தில்தான். அதன் தேசிய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் அனைவரும் முழுநேர 'தொழில் முறை ஆட்டக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் படுதோல்விக்கு லண்டன் பத்திரிகைகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. கடைசி ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி தோற்றதும், "இங்கிலாந்து கிரிக்கெட் அணி இறந்துவிட்டது. அதற்கு வயது 120. இந்த அணிக்கு வெளிநாடுகளில் விபத்து ஏற்படுவது சகஜம். வழக்கம் போல் இந்த முறையும் 'போஸ்ட் மோர்ட்டம்' செய்யப்படும். ஆனால் அதற்கு முன்பே விபத்துக்கான காரணம் என்னவென்று அனைவருக்கும் தெரியும்," என்று கிண்டலாக செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து அணி அடுத்த கட்டமாக நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செல்கிறது. ஸிம்பாப்பேயில் படுதோல்வி அடைந்ததை அடுத்து நியூஸிலாந்து சுற்றுப்பயணத்தை இரத்துச்செய்ய வேண்டும் என்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சிந்தியா பதில்கள்

**★ ஜெயலலிதாவை கலைஞர் கருணாநிதி விடுதலை செய்திருப்பது அவர்மீதான அனுதாபத்தாலா, அல்லது அச்சத்தாலா?**

கோ. லட்சுமணன், மாத்தளை.

*அவர்மீது மக்களுக்கு அனுதாபம் வந்துவிடக்கூடாதே என்ற அச்சத்தால்!*

● ● ●

**★ முன்னைய கல்வித் தகமைக்கும், தற்போதைய கல்வித் தகமைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

பி. கமலம், நம்பொடை.

*முன்னர் படித்தால்தான் பாஸாக முடியும். இப்போது படிக்காமலேயே பாஸாக முடிகிறது. முன்னர் குதிரை வண்டிகளில் சென்று பரீட்சை எழுதினார்கள். இப்போது பரீட்சை எழுத குதிரைகளை அனுப்புகிறார்கள்.*

● ● ●

**★ டியர் சிந்தியா! மனிதர்களிடம் இரக்க குணம் குறைந்து கொண்டு வருகிறதா? வளர்ந்து வருகிறதா?**

திருமதி ஆனந்தி ராகவன், வவுனியா.

*ஒரு குட்டிக்கதை:-*

*காரை விட்டுக் கோபமாக இறங்கிய கணவன் மனைவியைக் கூப்பிட்டு, "நம் டிரைவர் சரியாக இல்லை. டிஸ்மிஸ் செய்யப் போகிறேன்," என்றார்.*

*மனைவிக்குக் காரணம் புரியவில்லை.*

*"பாவம், அந்தாளை ஏன் டிஸ்மிஸ் செய்கிறீர்கள்?"*

*"இன்றோடு ஆறுமுறை என்னைக் கொல்லப் பார்த்தான்," என்றார் கணவர்.*

*மனைவி ரொம்பவும் இரக்கத்துடன் சொன்னாள்:*

*"கடைசியாக ஒரு சான்ஸ் கொடுத்துப் பாருங்களேன்!"*

● ● ●

**★ அடக்கி வாசிப்பது என்றால் என்ன? விளக்கமாகச் சொல்லுங்கள் பார்ப்போம்?**

செல்வி எஸ். நிர்மலா, கப்பித்தாவத்தை.

*விளக்கமாக வேண்டாம். சுருக்கமாகச் சொல்கிறேன்.*

*இரண்டு நாடுகளுக்குள் கடும் யுத்தம். முடிவில் ஒரு நாடு வெற்றி பெற்றது. வெற்றிக்குத் தாமே காரணம் என்று சிலர் மார்தட்டினார்கள். தளபதிதான் காரணம் என்று வேறு சில வீரர்கள் வாதிட்டார்கள். இறுதியாகத் தளபதியிடமே கேட்டார்கள்.*

*"போரின் வெற்றிக்கு யார் காரணம்?"*

*தளபதி சில நொடிகள் மௌனமாக இருந்துவிட்டு சொன்னார்:*

*"வெற்றிக்குக் காரணம் யார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் தோல்வி ஏற்பட்டிருந்தால் அதுக்கு நான்தான் காரணம் என்று எல்லோரும் சொல்லியிருப்பார்கள்."*

● ● ●

**★ மனைவியை ஏமாற்றும் கணவன்மார்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எம்.எம். ரிஷ்வியா, கொழும்பு-03.

*பின் ஒரு காலத்தில் புலம்பப்போகிறார்கள். எப்படித் தெரியுமா? இப்படித்தான்.*

*"வாலிப வயதில் மனைவிக்கு துரோகம் செய்யக்கூடாது என்று நினைக்கிறோம்; முடிவதில்லை!*

*வயோதிப காலத்தில் மனைவிக்குத் துரோகம் செய்ய நினைக்கிறோம்: இப்போதும் முடிவதில்லை!"*

● ● ●

**★ பாகிஸ்தான் முன்னாள் கப்டன் இம்ரான் கான், தன் நான்கு வயதுக் குழந்தைக்கு தந்தையென்று சிட்ஒயிட் என்னும் அழகி புகார் சொல்லியுள்ளாரே?**

கே. சியாந், நீர்கொழும்பு.

*இம்ரான்கான் முற்றும் துறந்த முனிவருமல்ல, சிட்ஒயிட் சொல்வதெல்லாம் முற்றும் உண்மையுமல்ல.*

● ● ●

**★ துள்ளி எழுந்துவிட்டால் கரகோஷம் செய்பவர்கள், துவண்டு விழும்போது தூர விலகிப் போகிறார்களே? இதுதான் உலகமா சிந்தியா?**

மா. கமலேந்திரன், திருக்கோணமலை.

*விடியற்காலையில் சூரியன் எழும்போது சேவல் கூவியது.*

*"இந்தச் சேவலுக்குத்தான் என்மீது எத்தனை பிரியம்! நான் எழும்போது கூவி வாழ்த்துகிறது!" என்று சூரியன் சந்தோஷப் பட்டது.*

*மாலையில் சூரியன் மேற்குத் திசையில் விழுந்து கொண்டிருந்தது.*

*"நான் விழுந்து கொண்டிருக்கிறேனே! என்னைத் தாங்க யார் வருவார்கள்? நான் எழும்போது வாழ்த்துக் கூறிய சேவல்கூட வரவில்லையே?" என்று சூரியன் ஏங்கிப் போனது.*

*சேவல் வரவே இல்லை. கூவவும் இல்லை.*

*விழுந்து கொண்டிருந்த சூரியன் சொன்னது:*

*"எழும்போது தாங்க வருபவன் எல்லாம் விழும்போது தாங்க வருவதில்லை!"*

● ● ●

**★ மணிவண்ணன் முன்பு இயக்குநராக இருந்ததுக்கும், தற்போது நடிகராக இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

ஜெ. யூட் கிலேரியன், மட்/ தாண்டவன்வெளி.

*இயக்கினார், இயக்கப்படுகிறார். அப்போது கப்டன், இப்போது கொமெடியன்.*

● ● ●

**★ பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தனியாக ரியூஷன் கொடுப்பது தப்புத்தானே?**

பொ. ஜீவராஜ், கொழும்பு-09.

*வருமானம் போதவில்லை என்பது அவர்கள் தரப்பு நியாயம். பாடசாலையில் அரட்டைக் கச்சேரி நடத்திவிட்டு, தூக்கம் போட்டுவிட்டு மாலையில் பளிச்சென்ற முகத்துடன் ரியூஷன் கொடுக்கும்போது உள்ள சுறுசுறுப்பு, பாடசாலையில் கற்பிக்கும்போது காணாமல் போவதுதான் தப்பு!*

● ● ●

**★ தீர்வு யோசனைகள் தொடர்பாக அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்போகிறதாமே?**

சி. குகநாதன், கண்டி.

*விரைவாக நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. சர்வஜன வாக்கெடுப்பை எப்போது நடத்துவது என்று ஆராய்ந்து முடிப்பதற்கிடையில் அடுத்த பொதுத்தேர்தல் வந்தாலும் வந்துவிடும்!*

● ● ●

**★ தைப்பொங்கலுக்கு வெளியாகப் போகும் திரைப்படங்கள் எவை எவை என்று சொல்ல முடியுமா?**

எம்.வை. ஜெமீமா, மட்டக்களப்பு.

*'தர்மச்சக்கரம்'(விஜயகாந்த்-ரம்பா), 'இருவர்' (மோகன்லால்-ஐஸ்வர்யா), 'அரவிந்தன்' (சரத்குமார்-நக்மா),'மின்சாரக் கனவு' (பிரபுதேவா-கஜோல்-அரவிந்தசாமி), 'பெரிய தம்பி' (பிரபு-நக்மா), 'புதையல்' (மம்முட்டி-அரவிந்தசாமி-சாக்ஷி), 'நேசம்'(அஜித்குமார்-மகேஸ்வரி), 'காலமெல்லாம் காத்திருப்பேன்' (விஜய்-டிம்பிள்), 'பெரிய இடத்து மாப்பிள்ளை' (ஜெயராம்-தேவயாணி), 'பாரதி கண்ணம்மா' (பார்த்திபன்-மீனா), 'சக்தி' (வினித்-யுவராணி).*

● ● ●

**★ ஈ.ரி.வி. மூலமாக ராஜ் ரி.வி.யில் சிரஞ்சீவி-ஸ்ரீதேவி இணைந்து நடித்த படமொன்று ஒளிபரப்பினார்கள். கடைசிவரை படத்தின் பெயரையே காண்பிக்கவில்லையே? அப்படத்தின் பெயர் என்ன?**

செ. மைக்கேல், கொழும்பு-06.

*படத்தின் பெயர்: 'காதல் தேவதை' தெலுங்கில் 'அதிலோக சுந்தரி' என்ற பெயரில் வெளியாகி தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட படம். 'மானிடா மானிடா' என்று புலம்பியே ஸ்ரீதேவி ஒரு வழி பண்ணிவிட்டாரல்லவா? தமிழில் பப்படமான படம்.*

● ● ●

**★ சன் ரி.வி. அரட்டை அரங்கம் எப்படி?**

கோ. மணிவண்ணன், வவுனியா.

*சில சமயம் கூரான பிளேட்.*

● ● ●



**★ சாதனைவீரர் சனத் ஜயசூரியாவின் ஆட்டத் தளர்வு பற்றி?**

நிகவெவ அஜர்தீன், ஹொரவப்பொதான.

*தளராமல் யார்தான் தொடர்ந்து ஆட முடியும்? மீண்டும் அசத்தினால் சரிதான்!*

● ● ●

**★ கெட்டவர்கள் சிலர் புத்திசாலிகளாகவும் இருக்கிறார்களே! அதனால்தானே பிரச்சனைகள் வருகின்றன?**

ஆர். ஜெகன், ஹட்டன்.

*ரஜினிஷ் சுவாமியார் சொன்ன ஒரு குட்டிக்கதை:*

*ஒருவனுடைய மனைவி இறந்து அடக்கம் செய்தார்கள். காரியமெல்லாம் முடிந்ததும் கணவன், தன் மனைவியின் சகோதரியுடன் காரில் திரும்பிக் கொண்டிருந்தான்.*

*கல்லறையின் வாசலைத் தாண்டியதுமே அவன் மெல்ல அவளை அணைத்துக் கொண்டான்: விஷமம் செய்ய ஆரம்பித்து விட்டான்.*

*அவன் கையைத் தட்டிவிட்டபடி அவள் சொன்னாள்: "சீச்சீ நீ ஒரு மிருகம். என் சகோதரியின் உடல் இன்னும் பூமியில் குளிர்ந்துகூடப் போகவில்லை. அதற்குள் இப்படியா?"*

*அவன் துக்கமாக குரலை வைத்துக் கொண்டே சொன்னான்:*

*"என் துக்கத்தில் நான் என்ன செய்கிறேன் என்று எனக்கே புரியவில்லை!"*

*உடனே அவன் துக்கத்தைப் புரிந்து கொண்டு அதனைப் போக்க அனுமதி கொடுத்தாள் அவள்.*

*நாம் தெளிவாக இருந்தால் கெட்டவர்கள் காரியம் சாதிக்க முடியுமா ஜெகன்?*



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 65

## சீதையைக் கண்ட இராமதூதன்

இ ராமநாமத்தை ஜெபித்த வண்ணம் தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த அனுமனுக்கு மென்மேலும் சோதனை தொடர்ந்தது. சீதையை நோக்கி அடிமேல் அடியெடுத்து முன்னேறிக் கொண்டிருந்த இராவணனை எரித்துவிடுவது போல் பார்த்தார். மரத்திலிருந்த வண்ணமே அரக்கர் தலைவன்மீது பாய்ந்து அவனுடைய அங்கங்களைப் பிய்த்து எறிந்துவிடலாமா, என்று ஒருகணம் எண்ணினார். அப்போது அனுமனின் உள்ளத்தினுள்ளே, 'அமைதியாயிரு! அவசரப்படாதே!' என்று ஒரு குரல் கேட்பது போல் இருந்தது. அக் குரல் வேறு யாருடையதுமல்ல; சாட்சாத் இராமபிரானுடையதே என்பதை அனுமன் கண்டு கொண்டார். ஆகவே மீண்டும் இராம நாமத்தை ஜெபித்த வண்ணம் தானிருந்த மரக்கிளையிலிருந்து மற்றொரு மரத்துக்குத் தாவினார். மரக்கிளைகள் எதுவும் ஆடாமல் அசையாமல் அனுமனின் தாவல் இருந்தது.

இப்பொழுது சீதாப்பிராட்டியார் அமர்ந்திருந்த இடத்துக்கு மிக அருகிலேயே வந்து விட்டார் ஆஞ்சநேயர். இராவணன்



பிராட்டியாரிடம் என்ன பேசுகிறான் என்பதை அவர் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருந்தது. பிராட்டியாரின் அங்கங்கள் நடுங்குவதையும் அவர் நன்கு அவதானித்தார். அவருடைய மனோ நிலை எத்தகையதாக இருக்கும் என்பதை அனுமனால் உணரக்கூடியதாக இருந்தது.

சீதாப்பிராட்டியாரை வாழ்த்துவதற்கு அந்த வேளையில் அனுமனுக்குத் தோன்றியதாக புலவர் பெருமான் கூறுகிறார்:

**வாழி சானகி வாழி இராகவன்**
**வாழி நான் மறை வாழியர் அந்தணர்**
**வாழி நல்லறம் என்று உற வாழ்த்தினான்**
**ஊழி தோறும் புதிது உறும் கீர்த்தியான்.**

(சுந்தரகாண்டம்- 428)

பொருள்:

என்றும் வளர்ந்து கொண்டே இருக்கின்ற பெரும்புகழை உடைய அனுமன், "சீதை வாழ்க! இராகவனாகிய இராமன் வாழ்க! நான்கு வேதங்களும் வாழ்க! அந்தணர்கள் வாழ்க! நல்லறங்கள் வாழ்க!" என்று வாழ்த்துகிறார்.

* * *

### மன்மதனுடன் போர்

பிராட்டியாரின் அருகே சென்ற இராவணன், காமத்தீயினால் வெந்து கொண்டிருந்தான். மூன்று உலகங்களிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி தேவர்களையும் முனிவர்களையும் பூமியிலுள்ள மாநிடர்களையும் ஆட்டிப் படைக்கும் வல்லமை பொருந்திய மாவீரன் இராவணன், சீதாப்பிராட்டியாரின் முன் கூனிக் குறுகி நின்றான். சீதாப்பிராட்டியாரிடம் அங்க அழகினை வர்ணிக்கலானான்.

"மூன்று உலகங்களையும் ஆட்சி செய்வதனால் என்னிடம் திரண்டபெரும் செல்வத்துக்கு அளவேயில்லை. திலகமே! உன் மீது நான் கொண்டுள்ள ஆசையின் காரணத்தால், இன்று அனங்கன் எனும் மன்மதன் என்னைக் கலங்க வைத்துள்ளான். அவனுடன் போர் புரிவதைத்தவிர வேறு இழிவுதரக்கூடிய செயல் எனது அரசியலில் வேறு ஒன்றும் இல்லை," என்று தடுமாற்றத்துடன் காதல் பிச்சை கேட்டான்.

**உலகம் மூன்றும் ஒருங்குடன் ஓம்பும்**
**அலகு இல் செல்வத்து அரசியல் ஆணையில்**
**திலகமே உன் திறத்த அனங்கன் தரு**
**கலகம் அல்லது எளிமையும் காண்டியோ?**

(சுந்தரகாண்டம்-432)

❋❋❋

"என்னை மணாளனாகப் பெற்றால் மூவுலகுக்கும் மாகாராணி என்ற பெரும் புகழை அடைவாய்! இராமனையே நினைந்து கொண்டிருந்தால் உன்னுடைய அழகும் இளமையும் வீணே அழிந்துவிடும். அர்ப்பத்தனமான எண்ணங்களை விடுத்து உன்னை மூவுலகிலும் மேன்மையுள்ளவளாக உயர்த்திவைக்கும் என்னிடம் வந்துவிடு. இராமன் என் நாட்டை அணுகவே முடியாது, என்னிடம் போர் தொடுத்து என்னைவென்று, உன்னை மீட்டுச் செல்வான் என்ற எண்ணத்தை விட்டுவிடு."

இவ்வாறு தனது வீர பராக்கிரமங்களையெல்லாம் சீதாப்பிராட்டியாரிடம் எடுத்துக்கூறினான். பிராட்டியார் எவ்வளவுதான் முயன்று தன் காதுகளில் இவ்வார்த்தைகள் புகாமல் பார்த்துக்கொண்டாலும் இராவணனின் புலம்பலில் ஒரு சில வார்த்தைகள் காதுகளில் புகத்தான் செய்தன. இதனால் பிராட்டியாரின் மனவேதனை பன்மடங்கானது. கண்கள் கண்ணீரைச் சிந்தினாலும், அவர் உள்ளத்தின் கொதிப்பினால் அக்கண்ணீரும் கடும் வெப்பமேறி கன்னங்களின் சூட்டினால் உடனடியாக வற்றிப்போனது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் பொறுமையும் எல்லை கடந்து விட்டதனால் கொடிய வார்த்தைகளால் இராவணனைத் திட்டித் தீர்த்தார்.

### "மன்னிப்புக்கேள்!"

"அர்ப்பபுத்தி உள்ளவனே! நீ பெரிய வீரன் என்று கூறுகிறாயே! என்னை நீ கபடமாக ஏன் கவர முற்பட்டாய்? மாபெரும் வீரனான என் கணவரை நேரில் எதிர்கொள்ள முடியாமல்தானே மாயமானை அனுப்பி என்னிடமிருந்து அவரையும் தம்பி இலக்குமணனையும் பிரித்தாய்? பசிக்கு உணவு தேடி வந்த சந்நியாசி போல் என்னை அணுகினாய்! உன்னால் என்னை ஒன்றுமே செய்ய முடியாது. உன் குலத்தையே வேரறுப்பதே என் கணவரின் இலட்சியம். உன் அரக்க இனத்தையும் உன்னையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், என் கணவரிடம் என்னை உடன் கொண்டு போய்விட்டுவிட்டு அவரிடம் மன்னிப்புக்கேள்!"

இவ்வாறு சீதாப்பிராட்டியார் கூறியதும் இடி முழக்கம் போல்- அந்த அசோகவனமே அதிரும் வண்ணம்- இராவணன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவனுடைய அடங்காத கோபம் தொனித்தது. 'சிவனை அன்றி வேறு எவருக்குமே தலைவணங்காத என்னை இவ்வளவு இழிவாகப்பேசிவிட்டாயே!' என்று மிகவும் வருந்தினான். அவமானம் ஏற்பட்டு விட்டதே என்று கருதினாலும் பிராட்டியார் மீது அவன் கொண்ட காமவெறி தலைக்கேறியமையினால் கோபத்தையும் அவமானத்தையும் உடன் மறந்தான்.

மீண்டும் இராவணன் சீதையிடம் பேசலானான். "சீதா! நான் உன்னை அடைய வேண்டும் என்று- என் தங்கை சூர்ப்பனகை உன் அழகை என்னிடம் வந்து வர்ணித்த நாளிலிருந்து கருத்திற் கொண்டேன். உன் கணவனையோ அவன் தம்பி இலக்குவனையோ நான் கண்டிருந்தால் என் வீரபராக்கிரமத்தால் அவர்களைக் கொன்றிருப்பேன். இராமன் இறந்திருந்தால் நீயும் உன் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாய். உன்மீது என் உயிரையே வைத்துள்ள நான் நீ மாண்டதும் உயிர் விட்டிருப்பேன் அன்றோ? இக்காரணத்தினால் தான் நான் உன்னைக் கவர மாறு வேடத்தில் வந்தேன். என்னுடன் போராடி வெல்ல எவனால் முடியும்?" என்று இறுமாப்புடன் கூறினான். அத்துடன், தான் அடுத்து வரும்போது தன் இச்சைக்கு இணங்காவிட்டால் தன்னுடைய வாளுக்கு இரையாக வேண்டிவரும் என்று எச்சரித்துவிட்டு அவ்விடம்விட்டு அகன்றான். போகும்போது சீதாப்பிராட்டியாருக்குக் காவலுக்கு அமர்த்தப்பட்ட அரக்கியர்களில் பிரதானமானவர்களை ஒருபுறம் அழைத்து எந்த வகையிலும், தன்னிச்சிசைக்குகந்தவளாக சீதாப்பிராட்டியாரை விரைவில் மனம் மாற்றும் படியும் தவறினால் அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரித்து விட்டுப் புறப்பட்டான்.

இக்காட்சிகளை மரக்கிளையிலிருந்த வண்ணம் ஆஞ்சநேயர் பார்த்துக் கொண்டிருந்தார். இராவணன் அப்பால் சென்றதும் அரக்கியர் அனைவரும் சீதாப்பிராட்டியாரைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். தங்கள் மாமன்னரை ஒரு பொருட்டாக மதிக்காமல் கடுஞ்சொற்களைப் பேசியமைக்காக சீதாப் பிராட்டியாரை சுடு சொற்களால் வைதனர். அப்போது திரிசடை முன்வந்து அவர்களை விலக்கிவிட்டாள். சீதாப்பிராட்டியாருக்கு மேலும் கோபத்தை மூட்டினால் நிலமை விபரீதமாகி எல்லோரும் இராவணனிடம் தண்டனை பெற வேண்டிய நிலைதான் எற்படும், என்று கூறி அவர்களை அப்புறப்படுத்தினாள்.

ஆஞ்சநேயர் இதுதான் தருணம் என்று கருதி சீதாப்பிராட்டியாரை நோக்கி மெதுவாக வந்தார். இராம மந்திரத்தை ஜெபித்த வண்ணம் அரக்கியர் அனைவரையும் மயக்கமடைய வைத்தார்.

### ஐயமும் தெளிவும்

சீதாப்பிராட்டியாரிடம் தன்னை எவ்வாறு அறிமுகம் செய்வது என்பதையிட்டு பலவாறு சிந்தித்தபின்னர், பிராட்டியாருக்கு மிக அருகே இருந்த மரத்தின் கீழ்க்கொப்பில் ஏறி அமர்ந்துகொண்டு இராமரைப் பற்றிப் பாடலானார். அதுநாள்வரை இராமருக்கும் பிராட்டியாருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவங்கள் அப்பாடல்களில் விபரிக்கப்பட்டன. இதனால் சீதாப்பிராட்டியார் தடுமாறலானார். தன் அருகில் வேறு எந்த மனிதரோ அரக்கரோ இருக்கவில்லை. ஒரு சிறு வானரம் மட்டுமே காணப்பட்டது. அதனுடைய வாயிலிருந்தே இராம சரிதம் வெளிவந்து கொண்டிருப்பதைக் கண்டு அதிசயித்தார்.

ஆரம்பத்தில் 'இதுவும் அரக்கனின் சூழ்ச்சியாக இருக்கக் கூடுமோ?' என்ற சந்தேகம் தோன்றியது. ஆனால் ஆஞ்சநேயர் கூறிய கருத்துக்கள் சில இராமபிரானுக்கும் தனக்கும் மட்டுமே தெரிந்த சம்பவங்களைக் கூறுவதாக இருந்தன. இதனால் ஐயம் நீங்கி, சின்னஞ்சிறு வானரம் போன்றிருந்த அனுமனை சைகை மூலம் தன் அருகே அழைத்தார். பிராட்டியாரிடம், நெடு நாட்களாக மறைந்து போன புன்னகை அக்கணம் அரும்பியது.

பிராட்டியாருக்கு மேலும் சந்தேகம் எழாமலிருக்க- இராமபிரானின் தற்போதைய நிலையை எடுத்துரைத்ததுடன் அவர் தம் அடையாளமாகக் கொடுத்தனுப்பிய மோதிரத் தையும் பிராட்டியாரிடம் கொடுத்தார். அதனைக் கண்டு, கைகளில் பெற்றுக்கொண்ட தும் மகிழ்ச்சியும் துயரும் ஒன்றிணைந்த உணர்ச்சியை பிராட்டியாரின் முகத்தில் காணக் கூடியதாக இருந்தது.

சீதாப்பிராட்டியாரைப் பிரிந்தது முதல் இராமரும் இலக்குவனும் படும்பாடுகளையும், வாலி வதை செய்யப்பட்டதையும் தற்போது அவர்கள் கிட்கிந்தைக்கு அருகில் சுக்கிரீவனின் துணையுடன் இருப்பதையும் கூறினார்.

வானரப் படை இலங்காபுரிமீது போர் தொடுத்து அரக்கரை அழித்து பிராட்டியாரைச் சிறை மீட்க வரும் காலம் வெகு தூரத்தில் இல்லை, என்று ஆஞ்சநேயர் ஆறுதல் கூறினார்.

அனுமனின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தபோதும் 'இச்சின்னஞ்சிறு உருவம் பெரும் சமுத்திரத்தை எவ்வாறு தாண்டமுடியும்' என்ற வினா பிராட்டியாரிடம் தோன்றியது. அதனை அனுமனிடம் கேட்டும்விட்டார். அனுமனும் தான் இராம மந்திரத்தை ஜெபித்தே விசுவரூபம் எடுத்ததாகக் கூறினார். அந்த உருவத்தை தானும் பார்க்க வேண்டும் என்று சீதாப்பிராட்டி யார் விரும்பியமையினால், அனுமன் "ஸ்ரீஇராம ஜெயம்" என்று பலமுறை உச்சரிக்க அவருடைய உருவம் வானளாவ வளரலாயிற்று. **(தொடர்ந்து வரும்)**

**இராஜகுமாரன்**

---

சென்றவாரம் இடம்பெறாத விடையும் பரிசுபெற்றவர்களின் பெயர் விபரமும்:

**இராமாயணப் போட்டி: 62**
**சரியானவிடை:- ஒருமாதம்**

1. எம். ரேணுகா, யடகம வெஸ்ட், 3-ம் பிரிவு, டயகம.
2. செல்வி நா. சஞ்சலா, 401/5, திருஞானசம்பந்தர் வீதி, திருமலை.
3. எம். தெய்வீகரஞ்சனி, பாரதி மகா வித்தியாலயம், பதுளை.
4. அ. சண்முகலிங்கம், 36/08, 37வது வீதி, கொழும்பு-06.
5. என். பரஞ்ஜோதி, 119, 1வது டிவிசன், மருதானை வீதி, கொழும்பு-10.

**இராமாயணப் போட்டி: 63**
**சரியானவிடை:- அசோக வனம்**

1. க. தர்மினி, தேசிகர் வீதி, காரைதீவு-10 (கி.மா).
2. செல்வி க. மிதிலா, 54 டி, கீழ் வீதி, உவர்மலை, திருகோணமலை.
3. எம். மன்னன், எல்டப் குறுப்பு, அப்பர் டிவிசன், பசறை.
4. இ. யகதீஸ்கரன், விபுலாநந்த வீதி, வாழைச்சேனை.
5. திருமதி ஜெலீமா நலார், பட்டாணிச்சூர், மன்னார் வீதி, வவுனியா.

**போட்டி இல. 65** கேள்வி:- மன்மதனுக்கு மற்றுமொரு பெயர் தருக?

ஜனவரி. 18 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி– இல.65, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

---

# பெரிது பெரிது யார்தான் பெரிது?

**காதிலை பூ கந்தசாமி**

**வடக்கு–கிழக்கில் இராணுவ நிர்வாகம் பெரிதா? சிவில் நிர்வாகம் பெரிதா? காதிலை பூ கந்தசாமியார் கற்பனை உரையாடல் நடத்திப்பார்க்கிறார்.**

**இராணுவ நிர்வாகம்:** வாரும், வாரும், நீர்தான் சிவில் நிர்வாகம் என்பவரோ?

**சிவில் நிர்வாகம்:** நீர்தான் இராணுவ நிர்வாகம் என்பவரோ?

**இரா.நி:** வேடிக்கையாக இருக்கிறது!

**சி.நி:** இதில் என்ன வேடிக்கை?

**இரா.நி:** வரம் கொடுத்தவனையே யார் என்று நீர் விசாரிப்பது வேடிக்கையில்லாமல் வேறென்ன?

**சி.நி:** மக்களால் தெரிவு செய்யப்பட்டவன் நான்.

**இரா.நி:** அந்த மக்கள் உம்மை தெரிவு செய்ய அனுமதித்தவர்களே நாங்கள்தான்!

**சி.நி:** தேர்தலில் வென்று வந்தவன் நான்!

**இரா.நி:** அந்த தேர்தலையே நடத்தியவர்களே நாங்கள்தான்.

**சி.நி:** உங்களிடமிருப்பது வேட்டுப்பலம், எங்களிடமிருப்பது வோட்டுப் பலம்.

**இரா.நி:** ஹாஹாஹா எங்கள் வேட்டுப் பலத்தை நம்பித்தான் நீங்கள் வோட்டுக் கேட்கவே வந்தீர்கள்.

**சி.நி:** நாங்கள் அரசியல்வாதிகள். வோட்டுக் கேட்பது எங்கள் தொழில்.

**இரா.நி:** அதைவிட மேலானது எங்கள் தொழில்! ஹாஹாஹா முத்தொழிலும் நம்பொறுப்பு.

**சி.நி:** அது என்ன முத்தொழில்.

**இரா.நி:** படைத்தல், காத்தல், அழித்தல்! உம்மைப் படைத்ததும் நாம்தான். உம்மைக் காப்பதும் நாம்தான். நம் கட்டளையை மீறினால் உம்மை அழிப்பதும் நாம்தான்.

**சி.வி:** இப்படியே போனால் நாங்கள் வழக்குத் தொடுக்க வேண்டி இருக்கும்.

**இரா.நி:** என்னவென்று?

**சி.நி:** கொட்டகை போட விடவில்லை. குத்தகை கொடுக்க விடவில்லை. அட்லீஸ் ஒரு குப்பைத் தொட்டிகூட நாம் நினைத்த இடத்தில்வைக்க முடியவில்லை. அதிகாரம் வேண்டும் எங்களுக்கு?

**இரா.நி:** ஹாஹாஹா.. யாரிடம் கேட்கிறீர் அதிகாரம்? களத்துக்கு வந்தீரா, கண்ணிவெடி களைந்தீரா, நிமிர்த்தி வைத்த மோட்டார்களில் ஷெல் போட்டீரா, களத்தில் பொஸிசன் எடுத்து போர் செய்யும் நம் படை வீரர்களுக்கு இரத்தம் கொடுத்தீரா, அட்லீஸ் தேத்தண்ணியாவது போட்டுக் கொடுத்தீரா. ஷெல் அடித்து எயர் பொம் அடித்து போர் நடத்தும் நமது படை உமது அலுவலகத்தையும் பொடிப் பொடிப் பொடியாக்கிப் போட்டுவிடும் ஜாக்கிரதை!

**சி.நி:** பலத்தைக் காட்டி மிரட்டுகிறீர்கள்!

**இரா.நி:** பலத்தைக் காட்டி நிலத்தைப் பிடிப்பது நாங்கள். நீரோ போரை நிறுத்தென்பீர். பேச்சை நடத்தென்பீர். நாங்கள் களத்தில் போரிட்டு நிலத்தைப் பிடித்துவைத்தால் மைக்கைப் பிடித்துவந்து வாக்கு கேட்டு நிற்பீர். நாங்கள் களத்தில் இறங்கா விட்டால், நீர் இந்த நிலத்தில் கால்வைக்கவே முடியாது! நாங்கள் போர் நடத்தி பிடித்த நிலங்களில் வாக்குப் பொறுக்கித் தான் நீர் பிரதிநிதி என்று பாருக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறீர். இப்போது சொல்லும் யார் பெரிது, நீரா, நீர் பேர் சொல்லக் காரணமான நானா?

**சி.நி:** ஐயோ குழப்புகிறீர்களே.

**இரா.நி:** மக்களை குழப்புவது உங்கள் தொழில்.

**சி.நி:** எங்களைக் குழப்புவதுதான் உங்கள் தொழிலா?

**இரா.நி.** குழப்ப மட்டுமல்ல, உம்மைக் கலைக்கவே எமக்கு அதிகாரம் இருக்கிறது. அவசரகால சட்டத்தில் இடமிருக்கிறது. நாலாம் பிரிவில் நாற்பத்தாறாம் செக்சனில் மூன்றாம் பந்தியில், முப்பத்தாறாவது வார்த்தையில்..

**சி.நி:** புரிகிறது புரிகிறது!

**இரா.நி:** என்ன புரிகிறது?

**சி.நி:** ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் மட்டும்தான் உங்களால் முடியாது என்று புரியாது!

**இரா.நி:** ஏன் முடியாது! நம் வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் உதவியுடன் அதனையும் செய்ய முடியும்.

**சி.நி:** யப்பா! வானளாவிய அதிகாரம்!

**இரா.நி:** தட்ஸ்ரைட்! வானத்திலும் நம் விமானங்கள் வட்டமிடுகின்றன!

**சி.நி:** ஓகே. போனால் போகிறது. உங்களுக்கு தேவையான அதிகாரங்களை வைத்துக் கொண்டு மீதியை என்னிடம் கொடுத்து விடுங்கள். குறைந்தபட்சம் ஒரு வீதிக்காவது விளக்குக் கம்பம் போட்டால்தான் அடுத்த எலக்சனில் வோட்டுக்கலெக்சனுக்கு உதவியாக இருக்கும்.

**இரா.நி:** வழக்குப் போடப்போவதாக வரிந்து கட்டினீரே!

**சி.நி:** அண்ணருக்கு பகிடியும் தெரியேல்லை, வெற்றியும் தெரியேல்லை. அதெல்லாம் அப்பப்ப சனத்திற்கு விடுகிற உல்டா.

**இரா.நி:** பம்ஸ் விடுகிறீர்களா?

**சி.நி:** அதென்ன பம்ஸ்.

**இரா.நி:** பம்மாத்து!

**சி.நி:** யெஸ்! யெஸ்! நீங்கள் பொம் போடுவீர்கள். நாங்கள் பம்ஸ் போடுவோம். உங்கள் இலக்கு தப்பினாலும், எங்கள் இலக்கு தப்பாது! கச்சிதமாக அறிக்கை யாக வெடித்து மக்களை ஏமாற்றிவிடும்! ஹி ஹி ஹி, ஹோ ஹோ ஹோ. ஹி.ஹி. ஹி. பட் வன் திங் உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

**இரா.நி:** எதற்கு நன்றி?

**சி.நி:** ஏதோ ஒரு பேருக்காவது நம்மை லேபிள் குத்திக்கொண்டு இருக்க விட்டீர்களே? அதற்கு!

**இரா.நி:** மக்களுக்கு நீங்கள்தானே அரசியல் தலைமை! அதன் பெயர்தான் சிவில் நிர்வாகம்.

**சி.நி:** கோபம் இருந்தால் ஒரு நாலு அடி அடித்து விடுங்கள். இப்படிக் கிண்டல் செய்யாதீர்கள். ஷெல் அடி மாதிரி இருக்கிறது.

**இரா.நி:** பதவியை ராஜினாமாச் செய்துவிடாதீர்கள்.

**சி.நி:** செய்யமாட்டோம். சொல்லுவோம்.

**இரா.நி:** நீங்கள் செய்வதைச் சொல்வதில்லை, சொல்வதைச் செய்வதில்லை. குட் பொலிசி.

**சி.நி:** நாங்கள் சொல்லவதையெல்லம் செய்தால் உங்களுக்கும் தொல்லை. எங்களுக்கும் தொல்லை. நாங்கள் எங்கள் பாதையிலே போய்க்கொண்டேயிருப்போம். நீங்கள் உங்கள் பாதையிலே போய்க் கொண்டே இருங்கள்.

**இரா.நி:** அடிக்கடி அதிகாரத்துக்கு ஆசைப் படுகிறீர்களே.

**சி.நி:** அதிகாரம் தருகிறீர்களோ இல்லையோ அந்த ஆசையை மட்டும் தடுக்காதீர்கள்!

**இரா.நி:** தடுத்தால் என்னாகும்?

**சி.நி:** நாங்கள் போனால் போகட்டும் போடா என்று பதவிகளை விட்டுப் போய்விடு வோம். ஒற்றுமை என்னும் கெட்ட காரியத்திலும் கவனம் செலுத்தித் தொலைத்து விடுவோம்.

**இரா.நி:** இப்போதே உங்கள் அறிக்கைகளை வெளியிட பத்திரிகைகளின் பக்கங்கள் போதவில்லை. ஒற்றுமைப்பட்டால் ஒவ்வொருநாளும் அறிக்கை விட்டு ஒரு காகிதப் புரட்சியையே ஏற்படுத்தி விடுவீர் கள். அதைவிட இது பெட்டர்.

**சி.நி:** யெஸ். யெஸ்! அதனால்தான் சொல் கிறோம். ஏதோ ஒரு லைட் போஸ்ட் நட்டுக்கொண்டோ, அல்லது ரோட்டுக்கு தார் போட்டுக் கொண்டோ நம்பாட்டில் நாம் இருந்து கொள் கிறோம். எங்களை இப்படியே விட்டுவிடுங்கள். உங்களை ஒன்று கேட்கலாமா?

**இரா.நி:** அதிகாரம் தவிர வேறு எதுவேணு மானாலும் கேளும்!

**சி.நி:** கொசுத் தொல்லை ரொம்ப தாங்க முடியவில்லை. 'ஒப்பரேசன் கொசுப் பயர்' ஆரம்பிக்க அனுமதி கிடைக்குமா?

**இரா.நி:** பலே.பலே.

**சி.நி:** மக்களுக்கு அரசியல் தலைமை வழங்க அனுமதித்ததுக்கு தாங்யூ வெரி மச்!

**இரா.நி:** நல்லது! சென்றுவாரும்! நீர் இன்றி நாம் இருப்போம்! நாம் இன்றி நீர் இருக்க முடியாது!

---

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : பேச்சுவார்த்தை |
| முகவரி | : தொலைந்துவிட்டது. |
| பெற்றோர் | : தீராத பிரச்சனைகள் |
| நண்பர்கள் | : அரசியல்வாதிகள் |
| எதிரிகள் | : நேர்மையான மத்தியஸ்தர்கள் |
| பொழுதுபோக்கு | : அடிக்கடி கதவை மூடுவது. வதந்திகளை உருவாக்குவது |
| சமீபத்திய சாதனை | : அரபாத்தை ஏமாற்றியது |
| நிரந்தர சாதனை | : வெற்றிகரமாக ஏமாற்றுவது |
| பிடித்த விலங்கு | : மாயமான் |
| பிடித்த உணவு | : கானல் நீர் |
| நம்புவது | : விடாக்கண்டர்களையும், கொடாக்கண்டர்களையும். |
| விரும்புவது | : சட்டென்று முறிவதை |
| சலிப்பு | : தொடர் பேச்சுக்கள் |



படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு




# புத்திசாலி ராஜா

← மூளைக்கு வேலை கொடுக்கும் விளையாட்டு 'செஸ்'. ஒவ்வொரு காய்நகர்த்தலிலும் மூளை சூடாகும். எதிரியின் நகர்வுகளை கணக்கிட்டும், கணிப்பிட்டும் நிதானமாகக் காய் நகர்த்தினால் வெற்றி உறுதி.

மிக மிகப் பொறுமையும், சிதறாத கவனமும் தேவைப்படும் செஸ் விளையாட்டு கி.பி.200ம் ஆண்டில் தோன்றியதாம். இந்தியாவில்தான் செஸ் விளையாட்டு ஆரம்பமானது. பின்னர் ரசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பரவியது. பிரிட்டனில் கி.பி.12ம் நூற்றாண்டில் தான் செஸ் அறிமுகமானது.

செஸ் விளையாட்டை ஆரம்பித்தது இந்தியாவாக இருந்தாலும், செஸ் விளையாட்டில் புலிகளாக இருப்பவர்கள் பலர் ரசியர்கள்தான். சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற சூப்பர் கிராண்ட் மாஸ்டர் போட்டியில் இந்தியரும், தமிழருமான விசுவநாதன் ஆனந்த் தோற்றுப் போனார். அவரைத் தோற்கடித்தவர் ரசியரான காரி காஸ்பரோவ். காஸ்பரோவிடம் ஆனந்த் தோற்பது இது இரண்டாவது தடவை.

காஸ்பரோவுக்கு (படத்தில் இருப்பவர்) இப்போது 34 வயது. 22 வயதில் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றார். உலகில் வயதுகுறைந்த முதலாவது செஸ் சாம்பியன் என்ற பெருமையும் சேர்ந்தது. அதைத் தொடர்ந்து காஸ்பரோவுக்கு ராஜயோகம் தான். தொடர்ந்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார். செஸ் உலகில் இன்றைய சக்கரவர்த்தி காரி காஸ்பரோவ்தான்! □




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# மேலே வானம் கீழே பூமி




↑ உலகிலேயே மிகநீளமான கேபிள் தொங்கு பாலம் ஹம்பர் எஸ்குவரி பாலம்தான். பிரித்தானியாவிலுள்ள யோர்க்சயர் மற்றும் லின்கொன்சயர் பகுதிகளை இணைக்கின்றது இப்பாலம். பாலத்தின் இரு முனைகளிலும் நீண்ட ஆதாரக் கம்பங்களால் தாங்கபபடும் இப்பாலம் வலுவான கேபிள்களால் பிணைக்கப்பட்டிருக்கும்.

இவ்விரு ஆதாரக் கம்பங்களுக்கிடைப்பட்ட தூரம் 1410 மீட்டர் (அதாவது 4624அடி). இதனைக் கட்டிமுடிக்க 1972 இலிருந்து 1980வரை எட்டுவருடங்கள் சென்றன.

ஆதாரக் கம்பங்களின் உயரம் 162.5 மீட்டர். பாலத்தின் மொத்த நீளம் 2.22 கிலோமீட்டர்.

இப்பாலத்தின்மீது வாகனத்தில் செல்லும்போது கீழே பார்த்தால் ஒரே திரிலிங்காக இருக்குமாம். நமது பாரதியாரும் பாலம் அமைக்கக் கனவு கண்டார். அவர் கனவை நிறைவேற்ற நாம் என்ன இங்கிலாந்திலா இருக்கிறோம். இங்கே பக்கத்து ஊருக்கே பாலம் அமைக்க முடியவில்லை. □

# ஒன்றுபட்டால்...



→ ஈருயிரும் ஒருடலுமாகிவிட்ட அதிசய காரட்டுக்கள் இவை. இது மனிதக் காதல் அல்ல. அதையும் தாண்டி அபூர்வமானது.

கிடுக்கிப்பிடி என்று சொல்வோமே அப்படி ஒரு பிடி போட்டு ஒன்றையொன்று சார்த்துக்கொண்டன. இயற்கையில் உருவான இனிய காட்சியல்லவா இது! மத்திய கிழக்கு நாடொன்றில் விளைந்த அதிசயக் காரட்டுக்களே இவை. □

# ஓய்வதற்கு ஆசை



← இலங்கை கிரிக்கெட் அணிக்கு 96ம் ஆண்டின் ஆரம்பம் அமோகமாக இருந்தது. உலகக் கிண்ணமும் கைக்கெட்டியது. 96ம் ஆண்டின் பிற்பகுதியில் சறுக்கல் ஏற்பட்டது. கென்யாவில் வெற்றிக் கோட்டை நெருங்கிவிட்டு தோல்வியைத் தழுவ வேண்டியதாகியது. அணியின் புயல் ஜெயசூரியாவின் சாதனையையும் பாகிஸ்தான் வீரர் ஆப்ரிடி முறியடித்தார்.

மற்றொரு நம்பிக்கை நட்சத்திரமான அரவிந்த டி சில்வாவும் சமீபகாலப் போட்டிகளில் எதிர்பார்த்தளவு பிரகாசிக்கவில்லை.

இலங்கை அணிக்கு மற்றொரு இழப்பு அதன் பயிற்சியாளரின் ராஜினாமா. சில மனத்தாங்கல் காரணமாகவே டேவிட் வட் மோர் ராஜினாமாச் செய்தார் என்று தகவல்.

இதற்கிடையே அணியின் கப்டன் அர்ஜுன் ரணதுங்கா தனது நீண்ட கால கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற விரும்புகிறார். குடும்பத்துடன் செலவிட நேரம் போதவில்லை என்பதும் அவரது கவலை. ரணதுங்காவை இப்போது இழக்க அணி தயாராக இல்லை. இந்த ஆண்டும் அவர்தான் கப்டனாக நீடிக்கக்கூடும். பெப்ரவரி 26ம் திகதி இலங்கை அணி நியுசிலாந்து செல்கிறது. அங்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாடப் போகிறது. புது உற்சாகம் பெற்றுள்ள நியூசிலாந்து அணியை சந்திப்பது இலங்கை அணிக்கு 97ல் காத்திருக்கும் முதலாவது பெரிய சவால். (மேலதிக விபரங்கள் உள்ளே) □

↓ ஒரு வழியால் புகுந்து இன்னொரு வழியால் வெளியே வரவேண்டும். இடையே பாதை மாறினால் வெளியே வந்து சேர முடியாமல் முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான். இதனைப் புதிர்வழி என்று அழைப்பர்.

கீழே படத்தில் பச்சைப் பசேலென்று புதர்களாலும், செடிகளாலும் தரையில் அமைக்கப்பட்டிருப்பதும் புதிர் வழிதான். உலகிலேயே புதர் செடியால் அமைக்கப்பட்ட மிக நீளமானதும், முதலாவதுமான புதிர்வழியும் இதுதான்.

இங்கிலாந்திலுள்ள ஹம்ப்டன் கோர்ட் பலஸ்' என்னுமிடத்தில் இது அமைந்துள்ளது. 1915ம் ஆண்டில் கார்டினல் வோல்ஸ்சேய் என்னும் தோட்டக்கலை வல்லுநரால் இது உருவாக்கப்பட்டது. எட்டாவது ஹென்றி மன்னன்' இதனை வியந்து பராமரித்து வந்தாராம். அதன் பின்னர் இன்றுவரை அழகு கெடாமல், செடிகள் வாடிவிடாமல் ஒழுங்காக கத்தரித்தும் கவனித்தும் வருகிறார்கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் மட்டும் புதுமையல்ல, பழையனவற்றில் சிறந்தவற்றைப் பாதுகாத்து வைத்திருப்பதும் புதுமைதான்.

இந்த புதர் புதிர் வழி 1700 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. அதன் ஒரு பகுதி மட்டும்தான் படத்தில் காணப்படுகிறது. கின்னஸ் சாதனையாக இந்த புதிர்வழி பதியப்பட்டுள்ளது. உலகிலேயே மிகப்பெரிய புதிர்வழி அமெரிக்காவில் உள்ளது. 16 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அது அமைந்துள்ளது. ஆனால் அது இப்படி புதர்களால் உருவாக்கப்படவில்லை.

# தரை நயம்

கல்லிலே மட்டுமல்ல, தரையிலும் கலை வண்ணம் காணலாம். வித்தை தெரிந்தால் அசத்தல்தான்! □




■ திருமணம்-பிறந்ததினம், பூப்புனித நீராட்டுவிழா, கல்லூரி ஒன்றுகூடல், வீட்டில் நடக்கும் சிறுவைபவங்கள் எதுவானாலும் சுவையான உணவுகளை குறித்த நேரத்தில் சிறப்புற சீருடையுடன் பரிமாறுகின்றோம். ● இடியப்ப புரியாணி, சிக்கன் புரியாணி, கொத்து றொட்டி, சிங்கப்பூர் நூடில்ஸ், சிக்கன் குருமா, தந்தூரி, றால்டெவில், கத்தரிச் சம்பல, வடைக்குழம்பு, கஜுகறி, அச்சாறு, அன்னாசி புடிங், Fruit Tray, Salad Tray இன்னும் பல....

● உங்கள் வைபவத்தை நடத்த மண்டபம் தேவையா? 50 பேர்முதல் 500 பேர்வரை அமரக்கூடிய அழகிய மண்டபங்கள் குறைந்த வாடகையில்.

■ இலங்கை உணவு மட்டுமல்ல இந்திய, சீன, கனேடிய உணவுகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

● எல்லா வைபவங்களுக்கும் புதிய வடிவங்களில் பலூன் அலங்காரம்-பலூன்களில் தமிழில் அச்சிட்டுத் தரப்படும்.

*BRIDAL BOUQUETS
மலர்ச் செண்டுகள்
மலர் மாலைகள்
மண்டப அலங்காரம்.
CHURCH DECORATION
Arch- Candles
LINEN
விரும்பிய நிறங்களில்
மேசை விரிப்புகள்.

■ பூப்புனித நீராட்டுவிழா- பூமுத்து மணவறைமண்டபம், ஆண்டாள் மாலை, தலை நகை, குத்துவிளக்குகள் ஆலாத்தி தட்டங்கள், கொத்து, சத்தகம், சைவ உணவு, பலகாரங்கள், கோலங்கள், லக்ஷ்மி விளக்கு. ● திருமண வைபவம்- முத்துபூ மணவறை, மண்டபம், மாலைகள், கூடைநாகம், தலைநகை, தலைப்பாகை, வாழைமரங்கள், குத்துவிளக்குகள், இந்து மதகுரு, சைவ உணவு, பலகாரங்கள், கேக், றிச் கேக், சீனிசம்பல், அச்சாறு (Malay Pickle) விருந்தினரை மகிழ்விக்க ஒருமுறை வாங்கி ருசித்துப் பாருங்கள். ■ பிறந்த தின விழா- சுவைமிகு உணவு, கேக், சிற்றுண்டிகள், மண்டபம். ● இவற்றுடன் Video, Still Photography, DJ (Music), Bridal Dressing, Limousine Service, Entertainers (Dancers) என்பனவும் ஒழுங்கு செய்து தரப்படும்.

Super Lankaa
Complete Package for Weddings & Parties
Catering (multicultural Cuisine)- Cakes for All Occasions
Balloon Decorations-Flower Bouquets-Banquet Halls Rental-
Limousine Services-Linen- Video - Still Photography - DJ.
21, Canadian Road, Unit 20, Scarborough, Ontario. M1R 4B4
(Warden/Ellesmere) TP: (416) 701-9330/(905) 475-1888






படிப்பகம்